# புதிய ஜனநாயகம்

ஜூலை 2015
ரூ.10.00



# சின்ன பெரிய மோடி




**த**மிழகத்தில் பெண்கள் தாலியறுக்க, மாணவர்கள், இளைஞர்கள் வாழ்வை இருட்டாக்க அரசே டாஸ்மாக் சாராய கடைகளை நடத்தி வருகிறது. எங்கள் ஊருக்குள் சாராயக்கடை வேண்டாம் என மனு கொடுத்தோம், மன்றாடினோம், பட்டினி கிடந்தோம், சாராயக் கடைக்குப் பூட்டு போட்டோம், கல்லால் அடித்தோம். ஆனால், போலீசுக் காவலோடு மீண்டும் சாராயக் கடைகளைத் திறந்து நடத்துகிறது, புரட்சித் தலைவி அம்மா அரசு. உங்களால் என்ன செய்ய முடியும் எனச் சவால் விட்டுப் பெரும்பான்மை மக்களை நாயினும் கீழாக நடத்துகிறது, போலீசும் அதிகார வர்க்கமும்.

மரத்தடியில் படிக்கும் மாணவர்களுக்கு வகுப்பறை வேண்டும், படிப்புச் சொல்லி கொடுக்க வாத்தியார் வேண்டும், பச்சிளம் குழந்தைகளைக் காக்க ஆஸ்பத்திரி வேண்டும், உயிர் காக்கும் மருந்து வேண்டும், குடிக்க எங்க ஊருக்கு தண்ணீர் வேண்டும், சாலை வேண்டும், தெருவிளக்கு வேண்டும் - என கேட்கிறோம். ஆனால், இவை எதையும் செய்ய வக்கற்ற அரசாங்கம், டாஸ்மாக்



குடியால் மாண்டுபோன கூடங்குளம் டாஸ்மாக் கடை பணியாளர் முருகனின் மனைவி மற்றும் நிராதரவான மூன்று பெண் குழந்தைகள்.

வேண்டாம் என சொல்லும் மக்களை மிரட்டுவதுடன், சாராயக் கடையை வைத்தே தீருவேன் என நிற்கிறது.

ஏனென்றால் வேலையில்லை, போதிய சம்பளம் இல்லை, விலைவாசி உயர்வு, விவசாய நெல், கரும்புக்கு போதிய விலை இல்லை, உரிமைகளற்ற கூலிகளாக தொழிலாளர்கள்; - மொத்தத்தில் உழைத்து வாழும் பெரும்பான்மையான கோடிக் கணக்கான மக்களுக்கு உத்திரவாதமான வாழ்க்கை இல்லை. இது தான் ஆளும் மத்திய, மாநில அரசுகளின் யோக்கியதை. இவற்றி லிருந்து மக்களின் கோபத்தைத் திசை திருப்புவது டாஸ்மாக் குடி. இது அரசுக்கு வருமானத்தை மட்டுமல்ல, மக்களைப் போராடாமல் ஆட்டு மந்தைகளாக்கி வைக்கவும் உதவுகிறது.

சமூக விரோத கும்பல் கள்ளச்சாரயம் விற்பதை, கஞ்சா விற்பதை, விபச்சாரம் செய்வதை நாம் ஊருக்குள் அனுமதிக்கமாட்

தொடர்ச்சி 35-ஆம் பக்கம்...

## சர்வதேச யோகா தினம்:

# “ஷாகா”வுக்குப் பதிலாக யோகா!

பொய் புரட்டுகளால் கட்டமைக்கப்பட்ட இந்து பாரம்பரியம் குறித்த பார்ப்பன பாசிஸ்டுகளின் பெருமிதமும், தன்னை தேசத்தின் மீட்பனாகக் கற்பித்துக் கொண்ட மோடி என்ற வெட்கங்கெட்ட அற்பவாதியின் சுய விளம்பர மோகமும் கூடிப் பெற்றெடுத்திருக்கும் கேலிக்கூத்துக்குப் பெயர் - சர்வதேச யோகா தினம். ''கழிவறைக்கு ஒரு ஐ.நா. தினம் இருக்கும் போது, யோகாவுக்கு ஒரு தினம் இருக்கக்கூடாதா?'' என்று கேட்டிருக்கிறார் ரவி சங்கர்ஜி. பொருத்தமான கேள்விதான்!

வருடம் 365 நாட்களுக்கும் ஏதாவது ஒரு தினம் என்று ஐ.நா. அறிவிக்கத்தான் செய்கிறது. இப்படி ஐ.நா. அறிவிக்கும் தினங்கள் குறித்து யாரும் பெருமை கொள்வதில்லை. ஆனால், மோடி பெருமை கொள்கிறார். இது உலக அரங்கில் இந்தியா பெற்றிருக்கும் அங்கீகாரம் என்றும், இதன்மூலம் பாரதம் உலகத்துக்கே வழிகாட்டுகின்ற ''விசுவ குரு'' ஆகிவிட்டதாகவும் பீற்றிக் கொள்கிறார். காஞ்சி சங்கராச்சாரி தன்னைத்தானே ஜெகத்குரு என்று கூறிக்கொள்வதைப் போல!

விவகாரம் இத்துடன் முடியவில்லை. பிரதமர் பதவியை கின்னஸ் புத்தகத்தில் இடம் பிடிப்பதற்குக் கிடைத்த குறுக்கு வழியாகப் பயன்படுத்துகிறார் மோடி. ஜூன் 21 அன்று டில்லியில் ஒரே இடத்தில் அதிக எண்ணிக்கையிலானவர்கள் யோகாசனம் செய்தார்களாம்; 84 நாடுகளைச் சேர்ந்தோர் இந்நிகழ்வில் பங்கேற்றார்களாம்; இப்படி இரண்டு கின்னஸ் சாதனைகள் யோகா தினத்தில் நிகழ்த்தப்பட்டிருக்கின்றனவாம். உலகிலேயே ''பெரிய மீசை'', ''பெரிய நகம்'' வளர்த்து கின்னஸில் இடம் பிடித்த இந்தியர்கள் இருக்கிறார்கள். அவர்களாவது இச்சாதனைகளுக்காக சொந்த முறையில் 'முயற்சி' செய்திருக்கிறார்கள். பிரதமர் மோடியோ பயில்வான் படத்தின்மீது தனது மூஞ்சியை வரைந்து கொண்ட 23-ஆம் புலிகேசியைப் போல, அரசு எந்திரத்தை ஏவி வரலாறு படைத்திருக்கிறார்.

இத்தகைய கேலிக்கூத்துகள் ஒரு புறமிருக்க, யோகாவின் வரலாறு என்ற பெயரில் பல வரலாற்றுப் புரட்டுகளை சங்க பரிவாரத்தினர் பரப்பி வருகின்றனர். சிறுபான்மை மதத்தினர் மீது யோகாவைத் திணிக்கும் போது, ''யோகா என்பது மதச்சார்பற்றது, உடல், மன ஆரோக்கியத்துக்கானது'' என்று கூறுகின்றனர். அதே நேரத்தில், மத்திய அரசின் ''ஆயுஷ்'' இணையதளம், யோகா சிவபெருமானிடமிருந்து தோன்றியதென்றும், பதஞ்சலி போன்ற முனிவர்களின் பாரம்பரியத்தினூடாக வளர்ந்ததென்றும் வேறொரு 'வரலாற்றை' கூறுகிறது. ''சூரிய நமஸ்காரம் தங்களது மத நம்பிக்கைக்கு எதிரானது'' என்று முஸ்லிம்கள் கூறியவுடன், ''சூரிய நமஸ்காரத்தை ஒப்புக்கொள்ளாதவர்கள் கடலில் குதிக்கட்டும்'' என்று நஞ்சைக் கக்குகிறார் 'யோகி' ஆதித்யநாத். தினமணியோ, ''இந்தியாவின் தேசியப் பண்பாட்டுப் பெருமையை இந்து மத நம்பிக்கையாக மாற்ற முற்படுவதாக'' யோகா தினத்தை விமரிசிப்பவர்களைச் சாடுகிறது. யோகா தினத்தை விமரிசிப்பவன் தேச விரோதி என்று கைது செய்யப்பட வேண்டியது மட்டுமே பாக்கி இருக்கிறது.

உடல் ஆரோக்கியத்தைப் பேணும் வழிமுறையாக யோகாசனப் பயிற்சிகள் இன்று பரவலாக அங்கீகரிக்கப்பட்டிருப்பதால், மரபு, தேசியம் என்ற பெயரில் இந்துத்துவக் கண்ணோட்டத்தைப் பரப்புவதற்கு ஷாகாவைக் காட்டிலும் யோகா பயனுள்ளதாக இருக்கும் என்று கணக்கு

தொடர்ச்சி 34-ஆம் பக்கம்...

புதிய ஜனநாயகம்
மார்க்சிய-லெனினிய அரசியல் ஏடு

தொகுதி: 30 இதழ்: 9
ஜூலை 2015

உள்நாடு
தனி இதழ்: ரூ.10.00
ஆண்டு சந்தா: ரூ.120.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US $ 20

அட்டை வடிவமைப்பு: முகிலன்

தொடர்பு முகவரி:
புதிய ஜனநாயகம்,
110, இரண்டாம் தளம்,
63, என்.எஸ்.கே. சாலை,
(அ.பெ.எண்: 2355)
கோடம்பாக்கம்,
சென்னை - 600 024.

மின்னஞ்சல்:
puthiyajananayagam@gmail.com

தொலைபேசி: 94446 32561

# சின்ன மோடி பெரிய மோடி

**ஊழலை ஒழிக்க வந்த உத்தமர் என்று பீற்றிக்கொள்ளும் மோடியின் ஆட்சி, கருப்புப் பண கிரிமினல் லலித் மோடியைக் காப்பாற்றினால்தான் கட்சி, ஆட்சி இரண்டின் மானத்தையும் காப்பாற்றிக்கொள்ள முடியும் என்ற நகைக்கத்தக்க நிலையில் தடுமாறுகிறது.**

லலித் மோடி - சுஷ்மா சுவராஜ், லலித் மோடி - வசுந்தரா ராஜே உறவு விவகாரங்களில் அம்பலத்துக்கு வந்திருக்கும் திரை மறைவு இரகசியங்கள் பா.ஜ.க.வோடு, ஊழலுக்கு எதிரானவராகவும், வலிமையான தலைவராகவும் முன்நிறுத்தப்பட்ட நரேந்திர மோடியின் டவுசரையும் உருவிவிட்டன. லலித் மோடி, சுஷ்மா சுவராஜ், வசுந்தரா ராஜே - இந்த மூவரில் யார் மீது நடவடிக்கை எடுத்தாலும், அது கொள்ளிக்கட்டையை எடுத்து தலையைச் சொரிந்து கொண்டது போன்ற நிலையை உருவாக்கிவிடும் என்ற நெருக்கடிக்குள் சிக்கிக்கொண்டுவிட்ட மோடி, வழக்கமாக காது வரை கிழியும் தன் வாய்க்குப் பூட்டுப்போட்டு ''மன்மோகன் சிங்'' ஆகிவிட்டார். அவரது அமைச்சர்களெல்லாம் ஊடகங்களின் கண்ணில் படாமல் தப்பித்து ஓடுகின்றனர்.

''பொதுப் பணத்தை நானும் தின்ன மாட்டேன், மற்றவர்களையும் தின்ன விட மாட்டேன்'' என்று ஊழலுக்கு எதிராக உதார்விட்டு ஆட்சிக்கு வந்தவர் மோடி. ஆனால், அவரது அமைச்சரே - சுஷ்மா சுவராஜ் - பல்லாயிரம் கோடி ரூபாய் வரி ஏய்ப்பு, மோசடிகளில் ஈடுபட்ட குற்றவாளிக்கு நெருக்கமாக இருந்து உதவி புரிந்திருக்கிறார். ''நாங்கள் ஆட்சிக்கு வந்தால், வெளிநாடுகளில் பதுக்கி வைக்கப்பட்டுள்ள இந்தியர்களின் கருப்புப் பணத்தை நூறு நாட்களில் மீட்டுக் கொண்டு வருவோம்'' எனச் சவடால் அடித்த மோடி, கருப்புப்பணக் குற்றவாளியான மோடியைக் காப்பாற்றுவதா, தனது அமைச்சர்களைக் காப்பாற்றுவதா, காற்றுப் போன பலூனாகிவிட்ட தனது இமேஜைக் காப்பாற்றுவதா என்று தெரியாத நகைக்கத்தக்க கேவலமான நிலைக்கு ஆளாகியிருக்கிறார்.

•••


லலித் மோடியின் மீது 16 பொருளாதாரக் குற்றங்கள் நிலுவையில் இருப்பதால், அவரது கடவுச்சீட்டை வெளியுறவுத்துறை அமைச்சகம் (காங்கிரசு ஆட்சியின் போது) முடக்கிவைத்திருப்பதை எதிர்த்து லலித் மோடி தொடுத்த வழக்கு டில்லி உயர்நீதிமன்றத்தில் விசாரணையில் இருக்கின்ற அதே நேரத்தில், தனது அமைச்சகத்தின் நிலைக்கு எதிராகவும், வெளியுறவுத் துறை செயலர் சுஜாதா சிங்கிற்குத் தெரியாமலும், லலித் மோடிக்கு ஆதரவாக பிரிட்டிஷ் அரசிடம் பரிந்துரை செய்திருக்கிறார். மேலும், இந்தியாவிற்கான பிரிட்டன் தூதரைத் தனிப்பட்ட முறையில் தொலைபேசியில் அழைத்து லலித் மோடிக்கு உதவும்படிக் கோரியிருக்கிறார். இது குறித்து நிதியமைச்சருக்கும் சுஷ்மா தெரிவிக்கவில்லை. காரணம், சுஷ்மாவுக்கும் அருண் ஜெட்லிக்குமிடையிலான கோஷ்டி தகராறு மட்டுமல்ல, ஐ.பி.எல். இலிருந்து லலித் மோடியை விரட்டிய முக்கிய எதிரி அருண் ஜெட்லி என்பதும்தான்.

லலித் மோடிக்கு உதவியது குறித்து கடந்த ஒரு வருடமாக வாய் திறக்காமலிருந்த சுஷ்மா, பூனைக் குட்டி வெளியே வந்தவுடன், ''லலித் மோடி மனைவிக்கு போர்ச்சுகல் மருத்துவமனையில் புற்றுநோய்

அப்பாடக்கராக முன்நிறுத்தப்பட்ட மோடியின் டவுசரை உருவிய மும்மூர்த்திகள்: லலித் மோடி, சுஷ்மா சுவராஜ் மற்றும் வசுந்தரா ராஜே.



அறுவை சிகிச்சை செய்ய வேண்டியிருந்ததாகவும், அதற்கு லலித் மோடி மருத்துவமனைக்கு நேரில் சென்று கையெழுத்திட வேண்டியிருந்ததால், மனிதாபிமான அடிப்படையில் இந்த உதவியைச் செய்ததாகவும்'' விளக்கம் அளித்திருக்கிறார். ஆனால், இந்த விளக்கம் வெளிவந்தவுடனேயே இது பொய் என்பது அம்பலமாகிவிட்டது. போர்ச்சுகல் நாட்டு சட்டங்களின்படி மனைவியின் அறுவை சிகிச்சைக்கு கணவனின் கையெழுத்து தேவை என்று போர்ச்சுகல் நாட்டு சட்டங்கள் கூறவில்லை. கையெழுத்துப் போடுபவர்கள் அதனை இணையத்தின் வழியாக அனுப்பலாம் என்றும் அந்நாட்டின் விதிகள் அனுமதிக்கின்றன என்ற விவரங்களை ஊடகங்கள் அம்பலப்படுத்திவிட்டன. மேலும் லலித் மோடிக்கு சுஷ்மா செய்திருக்கும் 'மனிதாபிமான' உதவியின் விளைவாக, போர்ச்சுகலுக்கு சென்று வருவதற்கு மட்டுமல்ல, அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கு உலகின் எந்தப் பகுதிக்கு வேண்டுமானாலும் சென்று வருவதற்கான பயண ஆவணம் பிரிட்டிஷ் அரசால் லலித் மோடிக்கு வழங்கப்பட்டிருப்பதும் அம்பலமாகியிருக்கிறது.



மனைவியின் அறுவை சிகிச்சை நடந்ததாகக் கூறப்பட்ட மூன்றாவது நாளே, போர்ச்சுகலுக்கு அருகிலுள்ள இபிஸா என்ற உல்லாசத் தீவில் தனது குடும்பத்தாரோடு கேளிக்கை விருந்தைக் கொண்டாடியிருக்கிறார் லலித் மோடி. இதுமட்டுமல்ல, இங்கிலாந்திலிருந்து வெளியேற அனுமதி கிடைத்த இந்த ஓராண்டுக்குள் லலித் மோடி உலகெங்குமுள்ள 25-க்கும் மேற்பட்ட முக்கிய நகரங்களுக்கும் தீவுகளுக்கும் சென்றிருக்கிறார். அங்கெல்லாம் கேளிக்கை விருந்துகளில் கும்மாளமடித்திருக்கிறார்; வியாபார பேரங்களை நடத்தி முடித்திருக்கிறார். மேற்கண்ட காரியங்களுக்காக இங்கிலாந்திலிருந்து வெளியேறுவதற்கு லலித் மோடிக்கு அனுமதி வாங்கிக் கொடுப்பதுதான் சுஷ்மா சுவராஜின் நோக்கமென்பதும், புற்றுநோய் என்பதெல்லாம் மட்டரகமான செண்டிமெண்ட் நாடகம் என்பதும் அம்பலமாகியிருக்கின்றன.

விசயம் இத்தோடு முடியவில்லை. மேற்கண்ட மனிதாபிமான உதவியின் பின்புலமும் அம்பலமாகியிருக்கிறது. சுஷ்மாவின் உறவினர் ஒருவருக்கு இலண்டனில் உள்ள ஸஸ்ஸெக்ஸ் கல்லூரியில் இடம் வாங்கித் தந்திருக்கிறார் லலித் மோடி. சுஷ்மா சுவராஜின் கணவர் சுவராஜ் கௌசல் கடந்த 22 ஆண்டுகளாக லலித் மோடியின் வழக்குரைஞர். சுஷ்மாவின் கணவரும் மகள் பான்சுரி சுவராஜும் லலித் மோடிக்கு ஆதரவாகவும், அரசுக்கு எதிராகவும் கடவுச்சீட்டு முடக்கப்பட்ட வழக்கில் டில்லி உயர்நீதிமன்றத்தில் வாதாடியவர்கள். இன்டோபில் என்ற தனது நிறுவனத்தின் இயக்குநராகப் பதவி ஏற்குமாறு ஏப்ரல்-15, 2015 அன்று சுஷ்மாவின் கணவருக்கு லலித் மோடி கடிதம் அனுப்பியிருக்கிறார். தான் அந்தப் பதவியை வேண்டாமென்று மறுத்துவிட்டதாக தற்போது சுவராஜ் கவுசல் விளக்கமளித்தபோதிலும், லலித் மோடிக்கும் சுஷ்மாவுக்கும் இடையிலான கொடுக்கல் - வாங்கல் உறவுகளை இவை அம்பலமாக்குகின்றன.

●●●

**சு**ஷ்மா - லலித் மோடிக்கு இடையேயான உறவைவிட, ராஜஸ்தான் முதல்வர் வசுந்தரா ராஜேவுக்கும் லலித் மோடிக்கும் இடையேயான உறவு அசாதாரணமானது. பனியா தரகு முதலாளியான கே.கே.மோடியின் மகனும், படிப்புக்காக அமெரிக்கா அனுப்பப்பட்டு அங்கே போதை மருந்து வழக்கில் சிக்கி, தந்தையின் செல்வாக்கினால் இந்தியாவுக்குத் தப்பித்து வந்தவனுமான, பணக்கார வீட்டு உருப்படாத பிள்ளைதான் லலித் மோடி. அடையாளம் தெரியாமல் கிடந்த லலித் மோடி இந்திய கிரிக்கெட் அரங்கையே ஆட்டிப்படைக்கும் அளவிற்கு வளர்ந்ததற்கு அடித்தளமிட்டுக் கொடுத்ததே வசுந்தரா ராஜேதான். பத்தாண்டுகளுக்கு முன்பு ராஜஸ்தான் மாநில முதல்வராக இருந்த வசுந்தரா ராஜே, ஒரு அவசரச் சட்டத்தின் மூலம் அம்மாநில கிரிக்கெட் சங்கத்தின் தேர்தல் விதிகளை மாற்றி, 2005-இல் லலித் மோடியை அதன் தலைவராக்கினார். சூப்பர் சீஃப் மினிஸ்டர் என்று ஊடகங்களும் எதிர்க்கட்சிகளும் கூறும் அளவுக்கு அரசு நிர்வாகத்தில் மட்டுமின்றி, ராஜஸ்தான் பா.ஜ.க. விலும் மோடியின் அதிகாரம் கொடி கட்டிப் பறந்தது.

இதனைத் தொடர்ந்து லலித் மோடி இந்திய கிரிக்கெட் வாரியத்தின் துணைத் தலைவர் பதவியைப் பெற்றதும், அதற்கு இந்தியா சிமெண்ட்ஸ் சீனிவாசன், காங்கிரசின் ராஜீவ் சுக்லா, பா.ஜ.க.வின் அருண் ஜெட்லி மற்றும் சரத் பவார் உதவியதும், இந்த கோஷ்டி இந்திய கிரிக்கெட் வாரியத்தில் தமக்கு எதிரான டால்மியா கோஷ்டியைத் தோற்கடித்ததும், 2008-இல் லலித் மோடி ஐ.பி.எல். என்ற பெயரில் மாபெரும் சூதாட்டத்தை அறிமுகப்படுத்தியதும், ஒரு கட்டத்தில் சீனிவாசன்-லலித்

மோடி கோஷ்டிகளுக்குள் தகராறு ஏற்பட்டு, லலித் மோடி ஓரங்கட்டப்பட்டு, அவரது தில்லுமுல்லுகளும் மோசடிகளும் அம்பலப்படுத்தப்பட்டதும், காங்கிரசு ஆட்சியில் மோடியின் மீது அந்நியச் செலாவணி மோசடி வழக்குகள் பாய்ந்ததும், மோடி நாட்டைவிட்டுத் தப்பியோடியதும், அருண் ஜெட்லி அங்கம் வகித்த கமிட்டியே லலித் மோடிக்கு இந்திய கிரிக்கெட் வாரியத்தில் ஆயுட்காலத் தடை விதித்ததும் இந்திய கிரிக்கெட் சூதாட்ட வரலாற்றில் கல்வெட்டுகளாகப் பதிவாகியிருக்கின்றன.


# ஊழல் – மோடி ஸ்டைல்!

**எ**த்தனை குறைகள் இருந்த போதிலும், மோடியின் ஓராண்டு ஆட்சி ஊழலற்ற ஆட்சி என்று கார்ப்பரேட் முதலாளிகள் கொண்டாடுகின்றனர். அவர்கள் கொண்டாடக் காரணம் இருக்கிறது. இறக்குமதிப் பொருட்களின் மதிப்பைக் கூட்டி பல ஆயிரம் கோடி மோசடி செய்ததாக அதானி மீது தொடரப்பட்ட வழக்கு நிதியமைச்சகத்தில் தூங்குகிறது. சில ஆயிரம் கோடி மதிப்புள்ள வர்த்தக சாம்ராச்சியத்தை நடத்தும் பாபா ராம்தேவ் மீது 7 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கத்தக்க கருப்புப்பண வழக்கு இருந்தது. அதனை மோடி அரசு ரத்து செய்து விட்டது. அலைக்கற்றை வழக்கில் ராசா மீதான வழக்கு தீவிரமாக நடத்தப்படுகின்ற அதே நேரத்தில், அலைக்கற்றை விற்பனையிலும், பின்னர் நிலக்கரி வயல் ஏலத்திலும் ஆதாயமடைந்த தரகு முதலாளிகள் பலர் மீதான கருப்புப் பண வழக்குகள் கிடப்பில் போடப்பட்டிருக்கின்றன. பொதுத்துறை வங்கிகளுடைய வாராக்கடன் 5 இலட்சம் கோடியில் பெரும்பகுதியைத் தரவேண்டிய 12 தரகு முதலாளிகளின் பிடியில்தான் சாலை, மின்சாரம், தொலைத்தொடர்பு உள்ளிட்ட கேந்திரமான பல துறைகள் இருக்கின்றன. இந்த ஊழல்களுக்குப் பொறுப்பான குற்றவாளி சின்ன மோடி அல்ல, பெரிய மோடி.

லலித் மோடியுடனான இத்தகைய நீண்டகால உறவின் அடிப்படையில்தான் மோடி இலண்டனில் தங்குவதற்கு அனுமதி கேட்டு பிரிட்டிஷ் அரசுக்கு விண்ணப்பம் செய்தபொழுது, அவருக்குச் சாட்சியம் அளித்து பத்திரத்தில் கையெழுத்துப் போட்டுக் கொடுத்திருக்கிறார், வசுந்தரா ராஜே. இந்தப் பிரமாண பத்திரத்தை அவர் ராஜஸ்தான் மாநில எதிர்க்கட்சித் தலைவர் என்ற முறையில் பிரிட்டிஷ் அரசிடம் தாக்கல் செய்ததோடு, இது இந்திய அரசுக்குத் தெரியக்கூடாது என்றும் கேட்டுக் கொண்டிருக்கிறார். லலித் மோடி இலண்டனை விட்டு வெளியேற முடியாத நிலையில் இருந்த பொழுது, ராஜே அவரது மனைவியைப் புற்றுநோய் சிகிச்சைக்காக போர்ச்சுகலுக்கும் அழைத்துச் சென்றிருக்கிறார். அடுத்த இரண்டு மாதங்களுக்குள், ராஜஸ்தான் மக்களுக்கு உலகத்தரம் வாய்ந்த புற்றுநோய் சிகிச்சை வழங்குவதற்காக என்று கூறிக் கொண்டு, மோடிக்கு சிகிச்சை அளித்த போர்ச்சுகல் மருத்துவமனை ஜெய்ப்பூரில் ஒரு கிளையைத் தொடங்குவதற்கு 96,000 சதுரமீட்டர் நிலத்தை ஒதுக்கியிருக்கிறார் ராஜே. அதே சமயத்தில் சிகரெட் மீது முந்தைய காங்கிரசு அரசு விதித்திருந்த வரியை 20% குறைத்து, மோடியின் சிகரெட் கம்பெனிக்கு கோடிக்கணக்கில் ஆதாயத்தை ஏற்படுத்தித் தந்திருக்கிறார்.

வசுந்தரா ராஜேயின் மகனும் பா.ஜ.க.வின் எம்.பி.யுமான துஷ்யந்த், தனது மனைவியைப் பங்குதாரராகக் கொண்டு நிகந்த் ஹெரிடேஜ் என்ற ஆடம்பர விடுதியை நடத்தி வருகிறார். இது ஜெயாவின் சொத்துக் குவிப்பு வழக்கில் காட்டப்பட்ட உப்புமா நிறுவனங்களைப் போன்றது. இந்த நிறுவனத்தில் வரவு-செலவு எதுவுமே நடந்ததில்லை எனக் கூறப்படுகிறது. இப்படிபட்ட உப்புமா நிறுவனத்தின் 10 ரூபாய் பெறுமான பங்கை 96,160 ரூபாய் கொடுத்து வாங்கி, அந்நிறுவனத்தில் 11 கோடி ரூபாய் வரை முதலீடு செய்திருக்கிறார், லலித் மோடி. இந்த முதலீட்டிற்கான பணம் கருப்புப் பண சொர்க்கமான மொரிஷியஸிலிருந்து வந்திருக்கிறது. இது மட்டுமல்ல, அரசுக்குச் சொந்தமான தோல்பூர் அரண்மனை கட்டிடத்தை வசுந்தராவின் மகனும் லலித் மோடியும் தங்களுடையதாக்கிக் கொண்டு விட்டனர். ராஜஸ்தானில் இவர்கள் நடத்தியிருக்கும் கூட்டுக் கொள்ளையின் ஒரு சிறிய பகுதிதான் இது என்று தெரிகிறது.

சுஷ்மா சுவராஜின் கணவரும் லலித் மோடியின் வழக்குரைஞருமான சுவராஜ் கௌசல்; லலித் மோடியின் கடவுச்சீட்டு வழக்கில் அவருக்காக வாதாடிய சுஷ்மாவின் மகள் பான்சுரி சுவராஜ்; லலித் மோடியின் வியாபாரக் கூட்டாளியும் வசுந்தரா ராஜேயின் மகனும் பா.ஜ.க. எம்.பி.யுமான துஷ்யந்த்.







கிரிக்கெட் தொடர்பான விவகாரங்களில் மட்டும், லலித் மோடி மீது அந்நியச் செலா வணி மோசடி உள்ளிட்டு 16 பொருளாதாரக் குற்றங்கள் விசாரணையில் உள்ளன; 1,680 கோடி ரூபாய் வரி ஏய்ப்பு செய்திருப்பதாக அவர் மீது குற்றஞ்சுமத்தப்பட்டிருக்கிறது. மோசடிக் குற்றத்துக்காக சென்னையில் ஒரு கிரிமினல் வழக்கு 2010-இல் பதிவு செய்யப் பட்டிருக்கிறது. எல்லாக் கட்சிகளிலும் மோடிக்கு கூட்டாளிகள் இருப்பதாலும், இந்த கொள்ளைக்கூட்ட வலைப்பின்னலில் அங்கம் வகிக்கும் காங்கிரசு, பா.ஜ.க. தலை வர்கள் முதல் பவார் உள்ளிட்ட அரசியல் வாதிகள், பாலிவுட் நடிகர்கள், தரகு முதலாளிகள், கிரிக்கெட் பிரபலங்கள் போன்ற பலரும் இந்த விவகாரம் கிளறப்படு வதை விரும்பவில்லை என்பதாலும்தான் மோடிக்கு எதிரான குற்றங்கள் எதுவும் விசாரிக்கப்படாமல் கிடப்பில் போடப் பட்டிருக்கின்றன.

இப்படிபட்ட குற்றவாளிக்குத்தான் சுஷ்மா சுவராஜும், வசுந்தரா ராஜேயும் தமது அதி காரத்தைப் பயன் படுத்தி உதவியிருக் கிறார்கள். இந்த அதிகார துஷ்பிர யோகம்தான். 2 ஜி ஊழல் வழக்கு விசாரணையை எதிர்கொண்டு வரும் ஆ.ராசாவின் மீது உள்ள குற்றச் சாட்டு, ராசா கையூட்டு வாங் கினார் என்பதல்ல. ஆ.ராசா தனது அதிகாரத்தைப் பயன்படுத்திக் குறிப்பிட்ட சில நிறுவனங்கள் அலைக் கற்றையை ஏலம் எடுக்க உதவினார் என்பது தான். ஆனால் சுஷ்மா, வசுந்தரா ராஜேவுக்கு எதிரான குற்றங்களோ மிகக்கடுமை யானவை. ஒவ்வொரு வழக்கிலும் 7 ஆண்டு கடுங்காவல் தண்டனை விதிக்கத்தக்க கருப்புப்பணத்தை வெள்ளையாக்கும் குற்றங் கள் பலவற்றை செய்து விட்டு, எல்லா கட்சி களிலும் அதிகார வர்க்கத்திலும் தனக்கு இருக்கும் செல்வாக்கினால் தண்டிக்கப் படாமல் தப்பி வரும் ஒரு கிரிமினலுக்கு இவர்கள் உதவியிருக்கிறார்கள். இந்த உதவிக் காக, சுஷ்மாவும் ராஜேவும் மோடியின் மூலம் பெற்றிருக்கும் ஆதாயங்களும் நாள்தோறும் அம்பலமாகி வருகின்றன.



ஐ.பி.எல். போட்டிகளைத் தொடங்கியதில் லலித் மோடிக்கு ஆதரவாக நின்ற பா.ஜ.க.வின் அருண் ஜெட்லி, இந்தியா சிமெண்ட்ஸ் சீனிவாசன், காங்கிரசு கட்சியைச் சேர்ந்த ராஜீவ் சுக்லா மற்றும் தேசியவாத காங்கிரசு கட்சியின் நிறுவனத் தலைவர் சரத் பவார்.

ஆனாலும், ஆ.ராசாவுக்கு எதிராகப் பெருங்கூச்சல் போட்ட பார்ப்பன இந்து மதவெறிக் கும்பல் இவர்களுக்கு வக்கீலாக நின்று வாதாடுகிறது. ஆர்.எஸ்.எஸ். பத்திரிகை தொடர்பாளர் ஜி.வி.எல்.நரசிம்ம ராவ், சுஷ்மா சுவராஜின் 'மனிதாபிமான உதவி'யை நியாயப்படுத்துகிறார். லலித் மோடி மீதான வழக்கு கள் கிடப்பில் போடப்பட்டிருப்பதை சாமர்த்தியமாகப் பயன் படுத்திக் கொண்டு, மோடி மீது நீதிமன்றத்தில் கிரிமினல் வழக்குகள் பதியப்பட்டிருக்கிறதா, அவர் தேடப்படும் குற்ற வாளியா என்று லலித் மோடியின் வக்கீலாகவே கேள்வி எழுப்பு கிறார்கள் பா.ஜ.க. வின் பிரதிநிதிகள்.

●●●

பா.ஜ.க., ஆர்.எஸ்.எஸ். மற்றும் மோடி அரசு - இம்மூன்றும் ஒரே குரலில் சுஷ்மாவையும் ராஜேவையும் ஆதரிப்பதாகக் காட்டிக் கொண்டாலும், நாளுக்கொன்றாக வெளிவரும் ரகசியங்களும் சங்க பரிவாரத்தை பீதிக்குள்ளாக்குகின்றன. பிள்ளையைக் கிள்ளிவிட்டது யார் என்ற கேள்வி பா.ஜ.க.விற் குள்ளேயே எழுப்பப்படுகிறது. டெல்லி மாவட்ட கிரிக்கெட் சங்க விவகாரத்தில் அருண் ஜெட்லியிடம் மண்ணைக் கவ்விய முன்னாள் கிரிக்கெட் வீரரும் பா.ஜ.க.வின் தர்பங்கா தொகுதி எம்.பி.யுமான கீர்த்தி ஆசாத், ‘‘இவை போன்ற பிரச்சினை களைக் கட்சிக்குள் ஏற்படுத்தி, மோடி அரசுக்குத் தலைவலி ஏற் படுத்தி வருவது அருண் ஜெட்லிதான். அவர் தன்னை மிஞ்சி யாராவது கட்சியிலும் ஆட்சியிலும் வளர்ந்துவிட்டால், அவர் களைக் காலி செய்ய தந்திரமான காரியங்களைச் செய்யத் தொடங்கி விடுவார்’’ என வெளிப்படையாகக் குற்றஞ்சுமத்தி யிருப்பதோடு, அருண் ஜெட்லியைப் புல்தரையில் மறைந்திருக்கும் பாம்பு எனச் சாடியிருக்கிறார்.

இது மட்டுமின்றி, ‘‘ஐ.பி.எல். போட்டிகளை ஆப்பிரிக் காவுக்குக் கொண்டுபோனதில் நடந்துள்ள முறைகேடு களுக்காக லலித் மோடியைக் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தி யுள்ள அமைப்புகள், ஐ.பி.எல். போட்டிகளை ஆப்பிரிக்காவில் நடத்த அனுமதி கொடுத்த இந்திய கிரிக்கெட் வாரிய கமிட்டியில் உறுப்பினர்களாக இருந்த அருண் ஜெட்லியை, சரத் பவாரை, ராஜீவ் சுக்லாவை ஏன் விசாரணைக்கு உட்படுத்த வில்லை?’’ எனக் கேட்டு, இந்த விவகாரத்தின் இன்னொரு பக்கத்தை அம்பலப்படுத்தியிருக்கிறார்.

சுஷ்மா, வசுந்தரா ராஜே தொடர்பான செய்தியை வெளியிட்ட இங்கிலாந்தின் சண்டே டைம்ஸ் பத்திரிகை ரூபர்ட் முர்டோக்கிற்கு சொந்தமானது என்றும், ஐ.பி.எல். ஒளிபரப்பு உரிமையைத் தனக்குத் தர வில்லை என்பதற்குப் பழி வாங்கத்தான் முர்டோக் இந்த விவகாரத்தை வேண்டுமென்றே கிளறி யிருப்பதாகவும் குற்றம் சாட்டியிருக்கிறார் லலித் மோடி.

''காங்கிரசு ஆட்சியில் அமைச்சராக இருந்த சசி தரூர் தனது மனைவி சுனந்தா பெயரில் ஐ.பி.எல். கொச்சி அணியை ஏலம் எடுத்ததை அன்று நான் அம்பலப்படுத்தி யதனால்தான், அன்று நிதியமைச்சராக இருந்த பிரணாப் முகர்ஜி அடுக்கடுக்காக என்மீது வழக்கு போட்டார். தற்பொழுது குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜியின் தனிச் செயலர் ஓமிதா பாலுக்கு சர்வதேச ஹவாலா கடத்தல் பேர்வழி நாக்பாலுடன் நெருங்கிய தொடர்பு இருக்கிறது. இந்தியாவிலிருந்து கருப்புப் பணம் வெளியேறி, அது சுவிஸ் வங்கிகளில் போடப்படுவதற்கு நிதியமைச்சகத்தைச் சேர்ந்த உயர் அதிகாரிகளே உடந்தையாக உள்ளனர். மறுக்க முடியுமா?'' என்று இன்னொரு குண்டையும் வீசியிருக்கிறார் லலித் மோடி.

சுஷ்மா-லலித் மோடி உறவு அம்பலமான அடுத்த நாளிலேயே, லலித் மோடிக்கும் வசுந்தரா ராஜேக்கும் இடையே யான முப்பது ஆண்டு கால நட்பும், வர்த்தக உறவுகளும் வெளிச்சத்திற்கு வந்தன. இதனைத் தொடர்ந்து லலித் மோடியைத் தேசியவாத காங்கிரசு கட்சித் தலைவர் சரத் பவார், இந்தி திரைப்பட நடிகர் ஷாருக் கான், மும்பய் போலீசு கமிஷனர் ராகேஷ் மிஷ்ரா உள்ளிட்டுப் பலரும் இலண்டனில் சந்தித் திருப்பது வெளியானது. லலித் மோடிக்கு ஆதரவாக பத்திரிகை





கல்வித் தகுதி மோசடி வழக்கில் சிக்கிக் கொண்டுள்ள மத்திய மனிதவள மேம்பாட்டுத் துறை அமைச்சர் ஸ்மிருதி இராணி மற்றும் 200 கோடி ரூபாய் ஊழல் புகாரில் சிக்கிக் கொண்டுள்ள மகாராஷ்டிரா மாநில பெண்கள் மற்றும் குழந்தைகள் நல அமைச்சர் பங்கஜா முண்டே.

யாளர் பிரபு சாவ்லா, முன்னாள் உச்ச நீதிமன்ற நீதிபதிகள் போன்றோர் பிரிட்டிஷ் நீதிமன்றத்தில் கருத்து தெரிவித்திருப் பதும் அம்பலமாகியிருக் கிறது.

ஒருவகையில் லலித் மோடியை ஜெய லலிதாவுடன் ஒப்பிடலாம். கட்சிகள், ஊடகங்கள், அதி கார வர்க்கம், நீதித்துறை ஆகிய அனைத்திலும் உள்ள பிரமுகர்களைத் தனக்காக அணிவகுத்து நிற்க வைத்திருக்கிறார். தன் மீது தாக்குதல் வரும் பட்சத்தில் யாருடைய இடுப்புத் துணியை உருவுவதற்கும் அவர் தயங்கமாட்டார்.

•••

**ல**லித் மோடி மலத்தொட்டிக்குள் கிடக்கும் குண்டு. அவர் மீதான விசாரணையை மன்மோகன் சிங் ஆட்சியும், மோடி ஆட்சியும் கிடப்பில் போட்டிருப்பதற்கு தனிப்பட்ட காரணங்கள் பல இருக்கக் கூடும். எனினும், அந்த குண்டு வெடித்தால் அத்தனை பேரும் மக்கள் மத்தியில் நாறி விடுவோம் என்ற காரணத்தினால், 'பொது நன்மை கருதியே' யாரும் அவரை சீண்டத் தயங்குகிறார்கள். கெடு வாய்ப்பாக சின்ன மோடி என்ற இந்த வெடிகுண்டை செயலி ழக்கச் செய்யும் பொறுப்பு பெரிய மோடியின் தலையில் விடிந்து விட்டது.

பிரதமர் பதவியையும் கட்சித்தலைவர் பதவியையும் சதித்தனமாக கைப்பற்றி யிருக்கும் மோடி - அமித் ஷா கும்பல், ஒரே ஆண்டில் இப்படி சிக்கித் தவிப்பது குறித்து காங் கிரசை விடவும் மகிழ்ச்சியில் திளைப்பவர்கள் பா.ஜ.க. தலை வர்களாகத்தான் இருப்பர் என்ப தில் ஐயமில்லை. அத்வானி, ராஜ் நாத்சிங், சுஷ்மா, சவுகான், ராஜே போன்ற பலரும் தங்களது எதிரி கள் என்று மோடி-ஷா கும்பலுக்கு தெரியும். ராஜஸ்தான் மாநில பா.ஜ.க.வைத் தன் செல்வாக்கின் கீழ் வைத்துக் கொண்டுள்ள

**யார் மீது யார் கல் வீசினாலும் அந்தக் கல் கடைசியில் பிரதமரின் மண்டையைத்தான் பதம் பார்க்கிறது. "சர்வதேச யோகா தினம், பெண் குழந்தைகள் தினம், மன் கி பாத், டிஜிட்டல் இந்தியா" என்று எத்தனை நாட்கள்தான் வடிவேலு கணக்காக வலிக்காதது போல மோடி நடிக்க முடியும்?**

வசுந்தரா ராஜே, ''நானாகப் பதவி விலக மாட்டேன்'' என்று மோடிக்கு தண்ணி காட்டு கிறார். சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு ராஜேவை நீக்கலாம். ஆனால் அவர் மோடிக்கு வெளிப்படையான சவாலாகி விடுவார். கட்சியும் கலகலத்து விடும்.

ராஜேவை நீக்கினால் சுஷ்மாவை நீக்கா மலிருக்க முடியாது. இரண்டு பேரை மட்டும் நீக்கினால், பிறகு வியாபம் ஊழல் சவுகான், மகாராஷ்டிராவில் பங்கஜா முண்டே என்று இந்தப் பட்டியல் நீண்டு கொண்டே போகும். மத்திய மனித வள மேம்பாட்டு அமைச்சர் ஸ்மிருதி இராணி, மகாராஷ்டிரா கல்வி யமைச்சர் வினோத் டாவ்டே, கோவா பொதுப்பணித்துறை அமைச்சர் சுவின் தவாலி கர் ஆகிய மூவரும் தமது கல்வித் தகுதி குறித்து பொய்த்தகவல்களையும், போலிச்சான்றிதழ் களையும் தந்திருப்பது அம்பலமான பிறகும் நடவடிக்கை எடுக்க முடியவில்லை. காங் கிரசு கூட்டணி ஆட்சியிலாவது ஊழல் குற்றச் சாட்டுக்கு ஆளான ஆ.ராசா, பவன் குமார் பன்சால், அஸ்வின் குமார் ஆகியோரை நீக்க முடிந்தது. மோடியின் தனிப்பெரும்பான்மை ஆட்சியோ தடுமாறுகிறது. ஏற்கெனவே மோடியைப் பயந்தாங்கொள்ளி என்று காங்கிரசு கேலி பேசுகிறது. கட்சிக்குள்ளேயும் எதிர்ப்புக் குரல்கள் கிளம்புகின்றன.

அலட்சியப்படுத்தப்பட்டு குமுறிக் கொண்டிருந்த அத்வானி அதனை தொடங்கி வைக்கிறார். தன் மீது ஹவாலா குற்றச்சாட்டு வந்தபோது, தான் உடனே ராஜினாமா செய்ததை நினைவு கூர்ந்து, ''பொதுவாழ்வில் நேர்மையைக் கடைப்பிடிப்பது அவசியம்'' என்று கூறி, மோடிக்கும் தன்னைக் கைவிட்ட ஆர்.எஸ்.எஸ். தலைமைக்கும் சேர்த்து அல்லையில் ஒரு குத்து குத்துகிறார். மோடியை பேசச்சொல், அமித் ஷாவைப் பேசச்சொல் என்று ஆளாளுக்கு தொலைக்காட்சிகளில் சவால் விடுகிறார்கள்.

இதற்கு மேலும் பேசாமலிருக்க முடியாது, பேசவும் முடியாது என்ற நிலையில் இருக்கும் சங்கபரிவாரத்தின் தலைமை, கோவிந்தாச்சார்யாவுக்குப் பின்னால் ஒளிந்து கொண்டு தனது மானத்தைக் காப்பாற்றிக் கொள்ள முயற்சிக் கிறது. ''சுஷ்மாவும் ராஜேவும் ராஜினாமா செய்யவேண்டும். இந்த அரசு மதிப்பீடுகளை இழந்து விட்டது. தன்னுடைய கவுரவம் போய்க்கொண்டிருக்கிறது என்பதை நரேந்திர மோடி உணரவேண்டும்'' என்று பேட்டி கொடுக்கிறார் கோவிந்தாச் சார்யா.

ஊழல் இல்லை என்பதுதான் ஒரு ஆண்டு ஆட்சியின் முக்கிய சாதனை என்று சொல்லி வாய் மூடுவதற்குள் கிளம்பி விட்டது சின்ன மோடி விவகாரம். பதினைந்து நாட்களுக்கும் மேலாக எல்லாத் திசைகளிலிருந்தும் அன்றாடம் அடி விழுந்து கொண்டே இருக்கிறது. யார் மீது யார் கல் வீசினாலும் அந்தக்கல் கடைசியில் பிரதமரின் மண்டையைத்தான் பதம் பார்க் கிறது. ''சர்வதேச யோகா தினம், பெண் குழந்தைகள் தினம், மன் கி பாத், டிஜிட்டல் இந்தியா'' என்று எத்தனை நாட்கள்தான் வடிவேலு கணக்காக வலிக்காதது போல நடிக்க முடியும்?

தன்னுடைய இமேஜைக் காப்பாற்றிக் கொள்ளும் வகையில், உறுதியான நடவடிக் கையாக எதையாவது செய்ய வேண்டும். இறுதியில் பார்த்தால், எதுவும் செய்திருக்கக் கூடாது. இதை எப்படிச் செய்வது என்பது தான் நரேந்திர மோடியின் முன் உள்ள கேள்வி.

● திப்பு

## ல.மோடியை இலண்டனுக்குத் துரத்திய ந.மோடி!

**இ**ன்று லண்டனில் இருக்கும் சின்ன மோடியைப் பிடித்துக் கொண்டுவர வேண்டிய பொறுப்பு பெரிய மோடியின் தலையில் விழுந்திருக்கிறது. ஆனால், லலித் மோடி இலண்டனுக்கு ஓட நேர்ந்ததற்கு காரணமே நரேந்திர மோடிதான் என்ற விவகாரம் எத்தனை பேருக்குத் தெரியும்?

2008-இல் ஐ.பி.எல். சூதாட்டம் லலித் மோடியால் தொடங்கப் பட்டு, ஷாருக்கான், பிரீத்தி ஜிந்தா போன்றோரெல்லாம் ஆளுக்கு ஒரு டீமை விலைக்கு வாங்கி கம்பீரமாக உலா வந்து கொண்டிருந்த நிலையில், தானும் ஒரு டீமை விலைக்கு வாங்கவேண்டுமென அதானி ஆசைப்பட்டார். எனவே, நரேந்திர மோடியும் அவ்வண்ணமே ஆசைப்பட்டார். ந.மோடிக்கு ஒரு அணியை வாங்கித்தருவதாக ல.மோடி வாக்களித்திருந்த நிலையில், அதனை கொச்சி அணி என்ற பெயரில் லவுட்டிக் கொண்டு போய் விட்டார் சுனந்தா புஷ்கர். ஆத்திரமடைந்த ல.மோடி, ஐ.பி.எல். நிர்வாகக் குழுவின் விதிகளை மீறி, ஏலம் தொடர்பான உள் விவகாரங் களைப் போட்டு உடைத்ததுடன், புஷ்கருக்குப் பின்னால் இருந்தது அன்றைய வெளியுறவுத்துறை இணை அமைச்சர் சசிதரூர் என்றும் குற்றம் சாட்டினார். சசி தரூர் பதவி இழந்தார். அதன் தொடர் விளைவாக லலித் மோடி ஐ.பி.எல் இலிருந்து வெளியேற்றப் பட்டார். அதானி விவகாரத்துக்காக அன்று ல.மோடி மீது நட வடிக்கை எடுத்தவர்களில் முக்கியமானவர் அருண் ஜெட்லி.

தோல்வியைச் சீரணிக்க முடியாதவரான அன்றைய குஜராத் முதல்வர் ந.மோடி, சசி தரூரின் 50 கோடி ரூபாய் மதிப்புள்ள கேர்ல் பிரண்டு என்று சுனந்தா புஷ்கரை கீழ்த்தரமான முறையில் ஏசினார். இன்று சுனந்தா புஷ்கரின் சந்தேக மரணத்துக்காக சசிதரூர் விசாரிக் கப்படுகிறார்.

பெரிய மோடியின் ஆசையை நிறைவேற்ற முனைந்து, அதன் விளைவாக பதவி இழந்து இலண்டனுக்கு ஓட நேர்ந்த சின்ன மோடியின் மீது நடவடிக்கை எடுக்கவேண்டிய துர்ப்பாக்கியமான சூழலில் இருக்கிறார் பெரிய மோடி.

■ மேகி நூடுல்ஸ் ■ பால வித்யா மந்திர் போராட்டம் ■ செம்மரக் கடத்தலில் டி.எஸ்.பி.

# மூன்று சம்பவங்கள், ஒரு உண்மை!

**தனக்குத்தானே விதித்துக்கொண்ட கடமைகளைக்கூட நிறைவேற்றாத இந்த அரசுக் கட்டமைவை இனியுமா நாம் முதுகில் சுமக்க வேண்டும்?**

தொடர்பற்றவை போலத் தோன்றும் விசயங்கள் தொடர்பற்றவையாக இருப்பதில்லை. தனித்தனியானவை போலத் தெரிகின்ற விசயங்கள் வேறு வேறு உண்மைகளைச் சொல்வதுமில்லை. மாகி நூடுல்ஸுக்குத் தடை, பால வித்யா மந்திர் என்ற தனியார் பள்ளிக்கு எதிரான பெற்றோர்-ஆசிரியர் போராட்டம், செம்மரக் கடத்தல் மற்றும் கொலையில் ஒரு டி.எஸ்.பி ஈடுபட்டிருப்பது — ஆகிய இம்மூன்று செய்திகளும் சென்ற மாதம் வெளியானவை. மேல் தோற்றத்தில் தொடர்பற்றவை போலத் தோன்றினாலும், ஒருங்கிணைந்த முறையில் பார்க்கும்போது, இவை இந்த அரசமைப்பின் தோல்வியை வெவ்வேறு கோணங்களில் நமக்கு எடுத்துக் காட்டுகின்றன.

•••

மாகி நூடுல்ஸ், நெஸ்லே என்ற ஸ்விஸ் பன்னாட்டு நிறுவனத்தின் தயாரிப்பு. இதன் விற்பனை ஆண்டுக்கு சுமார் 2000 கோடி ரூபாய். 2014 மார்ச் மாதம் உ.பி. மாநிலம் பாராபங்கி நகரின் கடைகளில் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த மாகி நூடுல்ஸ் பாக்கெட்டுகளைச் சோதனையிட்ட உணவு மற்றும் மருந்துப் பொருட்கள் பாதுகாப்புக்கான நிர்வாக அதிகாரி வி.கே.பாண்டே, அதில் அனுமதிக்கப்பட்ட அளவான 2.5 பி.பி.எம்.ஐ விட அதிகமாக, 17.2 பி.பி.எம். அளவிற்கு காரீயம் கலந்திருப்பதைக் கண்டுபிடித்து, இதனை உறுதி செய்யும் பொருட்டு கோரக்பூரிலுள்ள பிராந்திய சோதனைக்கூடத்துக்கு அனுப்பினார். காரீயம் மட்டுமின்றி, சாப்பிடுபவர்களின் நாக்கை அடிமையாக்கும் நச்சு வேதிப் பொருளான மோனோ சோடியம் குளுடோமேட் என்ற அஜினமோட்டோவும் இதில் கலந்திருப்பதாக கோரக்பூர் சோதனைக்கூடம் கூறியது. நெஸ்லே நிறுவனம் இதனை ஏற்க மறுத்து, சென்ற ஜூலை, 2014-இல் கொல்கத்தாவில் உள்ள மத்திய உணவு ஆய்வுக்கூடத்துக்கு மேல் முறையீடு செய்தது. கொல்கத்தா ஆய்வுக்கூடமும் மேற்கூறிய முடிவை உறுதி செய்ததைத் தொடர்ந்து, சென்ற மாதம் உ.பி. மாநிலம் முழுவதும் மாகி பாக்கெட்டுகள் கடைகளிலிருந்த அகற்றப்பட்டன.

ஒரு ஆண்டுக்கு முன்னரே தொடங்கிய இந்தப் பிரச்சினை, இப்போதுதான் வெளியே வந்திருக்கிறது. ‘‘அளவுக்கு அதிகமாக காரீயம் கலந்திருப்பது, அஜினமோட்டோவை சேர்த்து விட்டு, சேர்க்கப்படவில்லை என்று பாக்கெட்டில் அச்சிட்டிருப்பது, மாகி ஓட்ஸ் மசாலா நூடுல்ஸ் - என்ற சோதனைக்குட்படுத்தி ஒப்புதல் பெறப்படாத பொருளை விற்பனைக்கு விட்டது’’ ஆகிய மூன்று முறைகேடுகளைக் காட்டி, தில்லியில் உள்ள இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையம் (FSSAI), மாகி பாக்கெட்டுகளைச் சோதனைக்கு உட்படுத்துமாறு மாநில உணவுப் பாதுகாப்பு ஆணையர்களுக்கு அறிவுருத்தியது. மக்களின் கோபத்துக்கு வடிகாலாக, பல மாநில அரசுகள் மாகி பாக்கெட்டுகளை கடைகளிலிருந்து அகற்ற உத்தரவிட்டிருக்கின்றன.

இருந்தபோதிலும், தனக்கெதிரான குற்றச்சாட்டுகளை நெஸ்லே நிறுவனம் ஏற்றுக் கொள்ளவில்லை. முன்னர் கோக், பெப்சியில் பூச்சி மருந்து அளவுக்கதிகமாக கலந்திருக்கிறது என்ற குற்றச்சாட்டு எழுந்தபோது, இந்தியாவின் நிலத்தடி நீரி

நெஸ்லே தயாரிப்பான மாகி நூடுல்ஸை முற்றிலுமாகத் தடை செய்யக் கோரி கொல்கத்தாவில் சி.பி.டி.ஆர். என்ற மனித உரிமை அமைப்பு நடத்திய ஆர்ப்பாட்டம்.



லேயே பூச்சி மருந்து அதிகமிருக்கிறது, அதற்கு நாங்கள் என்ன செய்ய முடியும் என்று அந்நிறுவனங்கள் திமிராகப் பதிலளித்ததைப் போல, இந்தியாவில் விளையும் வெங்காயத்தில் அதிக அளவுக்கு காரீயம் கலந்திருப்பதால், அந்த வெங்காயத்தை மூலப்பொருளாகப் பயன்படுத்தும் மாகியிலும், காரீயம் அதிகமாக இருக்கக்கூடும் என்று கூறுகிறது நெஸ்லே. அதுமட்டுமல்ல, அஜினமோட்டோவைப் பயன்படுத்தக் கூடாது என்று இந்திய அரசின் எந்த சட்டமும் தடை விதிக்கவில்லை என்றும் கூறியிருக்கிறது.




''மாகி நூடுல்ஸ் பிரச்சினை கிடக்கட்டும், டெல்லி தெருக்களில் விற்கப்படும் பானிபூரியில் உள்ள மலம் கலந்த தண்ணீர் டைபாய்டை உருவாக்கும்'' எனத் தரநிர்ணய ஆணையம் தனது இணையத்தில் எச்சரிக்கிறது. பொதுமக்களின் மீது ரொம்பதான் அக்கறை!

மாகி நூடுல்ஸ் பாக்கெட்டுகளை கடைகளிலிருந்து அப்புறப்படுத்தியதையே நெஸ்லேக்கு விதிக்கப்பட்ட மாபெரும் தண்டனை போலச் சித்தரித்துக் காட்டி, உணவில் நஞ்சுவைத்த கொடுங்குற்றத்திலிருந்து நெஸ்லே நிறுவனத்தை விடுவிக்கின்றது அரசு. இயல்பிலேயே பன்னாட்டு நிறுவனச் சார்பு கொண்டவையும், நெஸ்லே போன்ற நிறுவனங்களின் விளம்பரங்களால் பெரும் ஆதாயம் அடைபவையுமான ஊடகங்கள் இந்த விசயத்தில் அரசுக்கு எதிராகவோ, நெஸ்லேவுக்கு எதிராகவோ கேள்வி எழுப்புவதில்லை.

பாக்கெட் உணவு விளம்பரங்களுக்குப் பலியாகாமல் தங்கள் பிள்ளைகளைப் பாதுகாத்துக் கொள்வது பெற்றோரின் பொறுப்பு என்று கூறி சாமர்த்தியமாகப் பிரச்சினையைத் திசை திருப்புகின்றன. இத்தகைய நச்சுப் பொருட்களின் விற்பனையை அங்கீகரித்து, ஊக்குவிக்கும் அரசையும், உணவுப் பொருட்களின் தரக்கட்டுப்பாட்டுக்குப் பொறுப்பேற்க வேண்டிய அதிகார வர்க்கத்தையும் குற்றத்திலிருந்து விடுவிக்கின்றன ஊடகங்கள்.

320 கோடி மதிப்புள்ள மாகி பாக்கெட்டுகளை சிமென்ட் ஆலைகளுக்கு எரிபொருளாக கொடுத்திருக்கிறது நெஸ்லே. இப்படி செய்வதைத் தவிர அதற்கு வேறு வழியில்லை என்பதே உண்மை. இருந்த போதிலும், ''தங்கள் பொருளில் எந்தக் குற்றமும் இல்லை என்ற போதிலும், வாடிக்கையாளர்கள் தங்கள் மீது வைத்திருக்கும் நம்பிக்கையைக் காப்பாற்றும் பொருட்டு, தாங்கள் செய்திருக்கும் தியாகமாக'' இதனைச் சித்தரித்துக் கொள்கிறது நெஸ்லே.

●●●

**செ**ன்னை அடையாறில் உள்ள பால வித்யா மந்திர், உயர் நடுத்தர வர்க்கத்தினரின் பிள்ளைகள் படிக்கின்ற சி.பி.எஸ்.இ. பள்ளி. வர்க்கம், போராட்டம் போன்ற சொற்களையே கட்டோடு வெறுப்பவர்களான இந்த வர்க்கத்தினருக்கு, வர்க்க ஏற்றத்தாழ்வு தோற்றுவிக்கும் அவமதிப்பு எத்தகையது என்பதை உணர்த்தியிருக்கிறது இந்தப் பள்ளியின் நிர்வாகம்.

நீதிபதி சிங்காரவேல் கமிட்டி நிர்ணயித்திருக்கும் கட்டணத்தைப் போல மூன்று மடங்குக்கு மேல் கட்டணம் வசூலிக்கிறது இந்தப் பள்ளி. வசூலிக்கும் தொகைக்கு ரசீது தருவதில்லை. தாமதமாகப் பணம் கட்டினால் நாளொன்றுக்கு 500 ரூபாய் அபராதம். 12 - ஆம் வகுப்பு முடித்தவுடன் ஐ.ஐ.டி. போன்ற உயர்கல்வி நிறுவனங்களில் நுழைவதற்குத் தயார்படுத்துவதற்காக மெரிட்டஸ் என்றவொரு வகுப்பு - அதற்கு ஆண்டுக்கு 90,000 ரூபாய். பாதியில் வேண்டாமென்று கருதினாலும் 1.8 லட்சத்தையும் கட்டியாக வேண்டும். இப்படிப்பட்ட கொள்ளைகள் எல்லை மீறிப் போகவே, அரசு நிர்ணயித்த கட்டணத்தை வசூலிக்குமாறு பெற்றோர் மத்தியில் கோரிக்கைகள் எழத்தொடங்கின.

உடனே பள்ளி நிர்வாகம், பெற்றோருக்கு கீழ்க்கண்டவாறு சுற்றறிக்கை அனுப்பியது. ''சிங்காரவேல் கமிட்டி நிர்ணயித்த கட்டணத்தைக் கட்டும் பெற்றோர், கட்டணத்தை பள்ளிக்கு வந்து வரிசையில் நின்று கட்ட வேண்டும். அந்த மாணவர்களுக்கு அரைநாள் தான் வகுப்பு நடத்தப்படும். கேன்டீனில் சாப்பிட முடியாது. கழிவறை பயன்படுத்தவும் கட்டுப்பாடு உண்டு. விளையாட்டுப் பயிற்சி கிடையாது.''

''நிர்வாகம் சொல்கின்ற கட்டணத்தை செலுத்தும் பெற்றோர் கியூவில் நிற்க வேண்டியதில்லை. ஆன்லைனில் பணம் கட்டலாம். மாலை 3.40 வரை வகுப்பு உண்டு. அம்மாணவர்களுக்கு கேன்டீன், கழிப்பறை வசதி உண்டு. விளையாட்டு, நடனப் பயிற்சியுடன், 59 வகை கல்விச் சேவைகள் வழங்கப்படும்.''

சினிமா கொட்டகைகளின் பெஞ்சு டிக்கெட்டைப் விடவும், ஓட்டல்களில் போடப்பட்ட ஜனதா சாப்பாட்டை விடவும் கேவலமான முறையில் மாணவர்களை இழிவுபடுத்திய இந்த சுற்றறிக்கையை அந்தப் பள்ளியின் ஆசிரியர்களாலேயே சீரணிக்க முடியவில்லை. வித்யா மந்திர், டி.ஏ.வி. பத்மா சேஷாத்ரி போன்ற பள்ளிகளை அக்கிரகாரங்கள் - மேட்டுத்தெருக்களாகவும், அரசுப்

பள்ளிகளைச் சேரிகளாகவும் மாற்றியிருக்கும் கல்வி தனியார் மயம் என்ற புதிய வருணாசிரமக் கொள்கையை மனப்பூர்வமாக ஏற்றுக் கொண்டவர்களான இப்பள்ளி மாணவர்களின் பெற்றோர், வர்க்க ரீதியான அவமதிப்பின் அநாகரிகத்தைப் பட்டுத் தெரிந்து கொண்டார்கள். பால வித்யா மந்திரை நடத்தும் பிராமணோத்தமர்கள், கல்வி வியாபாரிகளாக அவதரித்திருக்கும் சாராய வியாபாரிகளைப் போலவே ரவுடித்தனமாக நடந்து கொள்வதை அதிர்ச்சியுடன் எதிர்கொண்டார்கள்.

ஆம். மாணவர்களிடையே ஏற்றத்தாழ்வு காட்டக்கூடாது என்று கூறிய பள்ளியின் தலைமை ஆசிரியர், தலைமை நிர்வாக அதிகாரி மட்டுமின்றி, 8 ஆசிரியர்களும் அங்கிருந்து பள்ளியின் வேறு கிளைக்கு தூக்கியடிக்கப்பட்டார்கள். ஒரு வார காலம் போராட்டம் தொடர்ந்ததன் விளைவாக சிங்காரவேல் கமிட்டியும் சி.பி.எஸ்.இ. அதிகாரிகளும் தலையிட நேர்ந்ததாலும், தவிர்க்கவியலாமல் பள்ளி நிர்வாகம் ஊடகங்களில் அம்பலமாகிவிட்டதாலும், அரசு நிர்ணயித்த கட்டணத்தை மட்டும் வசூலிப்பதாக நிர்வாகம் ஒப்புக்கொள்ள நேர்ந்தது.

இருப்பினும், இதன் பிறகு பத்திரிகைகளுக்குப் பேட்டியளித்திருக்கும் பள்ளியின் நிர்வாகக் குழு தலைவர் சி.எச்.ராம், ''அரசு சொல்லும் கட்டணத்தை வசூலிப்போம். அதே நேரத்தில் இந்தக் கட்டணக் குறைப்பின் காரணமாக, ஆசிரியர்களைக் குறைப்போம். அவர்களுடைய சம்பளத்தைக் குறைப்போம். சிறப்பு வகுப்புகளைத் தனியே நடத்துவோம்'' என்று கூறியிருக்கிறார். முடிவில் வெற்றி பெற்றிருப்பது தனியார் பள்ளியா, அரசின் மேலாண்மையா?

•••

**ஆ**ம்பூருக்கு அருகிலுள்ள பாலூரைச் சேர்ந்த செம்மரக் கடத்தல் பேர்வழியான பா.ம.க. வைச் சேர்ந்த சின்னபையன் என்பவரை மிரட்டி, அவரிடமிருந்து 7 டன் செம்மரக் கட்டைகளைப் பிடுங்கியது மட்டுமின்றி, அவரைக் கூலிப்படையை அமர்த்திக் கொலையும் செய்திருக்கும் பலே கிரிமினல், வேலூர் மதுவிலக்கு அமலாக்க பிரிவு டி.எஸ்.பி. தங்கவேல் என்பது அம்பலமாகிவிட்டது.

''டி.எஸ்.பி. தங்கவேலுதான் செம்மரங்கள் எப்போது வரும் என்பது பற்றியும், அவற்றை வெளியே அனுப்புவது பற்றியும் எங்களுக்குச் சொல்வார். சின்னப்பையன் கொலை விசயத்திலும் டி.எஸ்.பி. சொன்னதைத்தான் செய்தோம்'' என்று இந்தக் கொலை வழக்கு தொடர்பாகக் கைது செய்யப்பட்டிருக்கும் கடத்தல் கும்பலைச் சேர்ந்த நாகேந்திரன் மற்றும் அவரது மனைவி ஜோதி லட்சுமி ஆகியோர் ஆம்பூர் போலீசிடம் வாக்குமூலம் தந்திருக்கின்றனர்.

இந்தத் தகவலை உடனே தங்கவேலுவுக்கு சொல்லி, தலைமறைவாவதற்கு ஏற்பாடு செய்து விட்டு, முன் ஜாமீனுக்கும் மனுப்போட்டு விட்டு, குற்றவாளியை வலை வீசித் தேடுவதாக அறிவித்தது ஆம்பூர் போலீசு. 12 நாட்களுக்கு மேல் இந்த நாடகத்தை நடத்த முடியாமல் போகவே, வேறு வழியின்றி தங்கவேலு கைது செய்யப்பட்டார்.

தங்கவேலுவின் முகம் பத்திரிகை காமெராக்களில் பதிவாகிவிடக் கூடாது என்பதற்காகத் திட்டமிட்டே இரவு நேரத்தில் அவரை நீதிபதி வீட்டுக்கு ஆட்டோவில் கொண்டு வந்து இறக்கிய ஆம்பூர் போலீசு, நீதிபதியின் வீட்டைச் சுற்றி விளக்கை அணைத்து இருட்டாக்கியது. வாசல் வழியாக நுழையாமல் கொல்லைப்புறமாக நுழைந்தது. ஒரு கான்ஸ்டபிள் தயாராக குனிந்து நிற்க, அவர் முதுகில் பச்சைக்குதிரையேறி காம்பவுண்டு சுவரைத் தாண்டிக் குதித்த தங்கவேலுவை, தயாராக நின்ற இருசக்கர வாகனத்தில் அழைத்து சென்றது போலீசு. இருப்பினும் இத்தனையும் தாண்டி ஊடகங்கள் தங்கவேலுவைப் படம் பிடித்து விட்டன.

அடுத்தமுறை நீதிமன்றத்துக்கு வந்த தங்கவேலு ஒளிந்து மறைந்து வரவில்லை. போலீசாருக்கு, தலைமை தாங்கி செல்லும் தோரணையில், கைகளை, அங்கும், இங்குமாக நீட்டி, 'ஜாலி'யாக பேசியபடி அந்தக் கிரிமினல் நடந்து சென்றதையும், போட்டோவுக்கு போஸ் கொடுத்ததையும், அவர் பின்னால், போலீசார், 'பவ்யமாக' நடந்து சென்ற காட்சியையும் பத்திரிகைகள் விவரித்தன.

விசாரணையின் போது, 4 அ.தி.மு.க. பிரமுகர்கள், 11 போலீசு அதிகாரிகள், 12 வனத்துறை அதிகாரிகள், 10 கடத்தல்காரர்கள் இந்தக் குற்றத்தில் சம்பந்தப்பட்டிருப்பதாக முதலில் சொன்ன தங்கவேலு, அடுத்த சில நாட்களில் போலீசுக்கும் அரசியல்வாதிகளுக்கும் எவ்வித

சிறு தொழிலாகவும், குடிசைத் தொழிலாகவும் நொறுக்குத் தீனிகளைத் தயாரிப்போரைச் சந்தையில் இருந்து அப்புறப்படுத்தும் நோக்கில் கொண்டு வரப்பட்டுள்ள உணவுப் பாதுகாப்பு தரச் சட்டத்தை எதிர்த்து தமிழக உணவுப் பொருள் உற்பத்தியாளர் சங்கம் மதுரையில் நடத்திய ஆர்ப்பாட்டம்.



தொடர்பும் இல்லை என்று சாதித்திருக்கிறார்.

இந்த வழக்கில் பல லட்சம் ரூபாய் கை மாறி தங்கவேலுவைக் காப்பாற்றுவதற்கான வேலைகள் நடைபெறுவதாக வெளிப்படையாக குற்றம் சாட்டியிருக்கிறார் செம்மரக் கட்டைகள் கடத்தல் பிரிவைச் சேர்ந்த ஆந்திர டி.எஸ்.பி. வெங்கடேஸ்வரன். தங்கவேலுவை விசாரித்து வரும் தனிப்படையினர் யார் தெரியுமா? அவருடன் ஒரே பேட்ச்சில் பயிற்சி பெற்ற, ஒண்ணாக உட்கார்ந்த சரக்கடித்த அங்காளி பங்காளிகள்தான் அவரை விசாரித்து வரும் தனிப்படை!




அரசு நிர்ணயித்த கட்டணத்தை மட்டுமே வாங்கக் கோரிய மாணவர்கள்-பெற்றோர்களைக் கீழ்த்தரமாக அவமதித்த பால வித்யா மந்திர் நிர்வாகத்தைக் கண்டித்து பெற்றோர்களும் அப்பள்ளி ஆசிரியர்களும் பள்ளியின் முன்பு நடத்திய ஆர்ப்பாட்டம்.

●●●

**மே**ற்சொன்ன மூன்று சம்பவங்களிலிருந்தும் தெரியவரும் உண்மைகள் என்ன? உணவுத் தரக் கட்டுப்பாட்டுத் துறையாகட்டும், கல்வித்துறையாகட்டும், போலீசாகட்டும் - அரசின் இந்த உறுப்புகள் எதுவும் தாமே கூறிக்கொள்ளும் நோக்கங்களை இம்மியளவும் நிறைவேற்றுபவையாக இல்லை.

இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையம் (FSSAI) என்று மிகவும் டாம்பீகமாகப் பெயர் வைத்துக் கொண்டிருந்த போதிலும், நெஸ்லே, பிரித்தானியா போன்ற நிறுவனங்கள் இந்த அமைப்பின் சோதனைச் சாலையில் சான்றிதழ் பெற்றால்தான் பொருளை சந்தைப்படுத்த முடியும் என்று சட்டமே இல்லை. இந்த நிறுவனங்கள் தமது சோதனைச்சாலைகளில் சோதித்துப் பார்த்து விட்டதாகக் கூறி தருகின்ற சான்றிதழுக்கு கீழே இந்த ஆணையம் கையெழுத்து மட்டுமே போடுகிறது.

இந்த அமைப்பிடம் இருப்பவை வெறும் 4 சோதனைச்சாலைகள். மாநில அரசுகளிடமும் போதிய சோதனைச்சாலைகள் கிடையாது. ஒரு ஒப்பீடு சொல்லவேண்டுமானால், சீனாவில் 2 லட்சம் பேருக்கு ஒரு உணவுத்தர சோதனைச்சாலை. இந்தியாவிலோ சுமார் ஒரு கோடிப் பேருக்கு ஒன்று என்ற அளவிலேயே உள்ளது. அதேபோல, ‘‘தங்களது விளம்பரங்கள் உண்மையானவை’’ என்று கார்ப்பரேட் நிறுவனங்கள் வழங்கும் உறுதிமொழியை அரசு அங்கீகரிக்கிறதே தவிர, பொய்யான விளம்பரங்களைச் சோதிக்கவோ, தண்டிக்கவோ கூட சட்டங்கள் இல்லை.

அப்படியே இதனை வித்யா மந்திர் விவகாரத்துடன் பொருத்திப் பாருங்கள். சிங்கார வேல் கமிட்டி கூறும் கட்டணத்துக்கு மேல் வசூலிக்காத தனியார் பள்ளி இருக்கிறதா? மழலையர் வகுப்புக்கே ஒரு லட்சம் என்ற அளவுக்கு கல்விக் கொள்ளை சிரிப்பாய் சிரித்த போதிலும், எந்தப் பள்ளியின் மீதும் நடவடிக்கை எடுக்கப்பட்டதில்லை.

அடுத்து, இந்தக் கமிட்டிகளாலும் ஆணையங்களாலும் கட்டுப்படுத்தப்பட வேண்டியவர்கள் என்று சொல்லப்படுவோர்தான், இந்த ஆணையங்களை மறைமுகமாகக்கூட அல்ல, நேரடியாகவே கட்டுப்படுத்துகின்றனர்.

கோலா பானங்களில் பூச்சி மருந்துகளும் நச்சு வேதிப் பொருட்களும் அளவுக்கதிகமாக இருப்பதை, அறிவியல் மற்றும் சுற்றுச் சூழலுக்கான மையம் அம்பலப்படுத்தியதைத் தொடர்ந்து, இத்தகைய உணவுப் பொருட்களை சோதிக்கவும் கண்காணிக்கவும் 2006இல் உணவுப் பாதுகாப்பு மற்றும் தர நிர்ணயச் சட்டம் இயற்றப்பட்டு, அதற்கான ஆணையமாக FSSAI உருவாக்கப்பட்டது. உணவு மாதிரிகளைச் சோதிக்கும் குழு, அறிவியல் குழு, விளம்பரக் கண்காணிப்பு குழு போன்ற குழுக்கள் இந்த ஆணையத்தால் நியமிக்கப்பட்டன. அந்தக் குழுக்களில் நிரம்பியிருந்தவர்கள் கோக், நெஸ்லே, யூனிலிவர், ஐ.டி.சி., பிரிட்டானியா போன்ற பன்னாட்டுக் கம்பெனிகளின் அதிகாரிகள். அதாவது குற்றவாளிகள்தான் கண்காணிப்பாளர்கள்!

சமச்சீர் பாடத்திட்டம் வேண்டுமா, வேண்டாமா என்று தீர்மானிக்க, தனியார் மெட்ரிக் பள்ளி, சி.பி.எஸ்.இ. பள்ளி நிர்வாகிகள் கொண்ட குழு அமைக்கப்பட்டதைப் போல! டி.எஸ்.பி தங்கவேலுவை விசாரிக்க ஏ.டி.எஸ்.பி.யோ, எஸ்.பி.யோ நியமிக்கப்பட்டிருப்பதைப் போல!

இவ்வாறு அமைக்கப்படும் குழுக்களின் மூலம் அரசு குற்றவாளிகளை விடுவிக்கின்றது. சட்டப்படி குற்றம் என்று கருதப்பட்டவற்றை இனி சட்டபூர்வமானதென்றும் மாற்றுகின்றது.

சான்றாக, தமிழகத்தில் ஜூன்,1,1976-க்கு முன் மதுரை, சென்னை பல்கலைக்கழகங்களிடம் அங்கீகாரம் பெற்றிருந்த

சுமார் 40 மெட்ரிக் பள்ளிகளைத் தவிர, தமிழகத்தில் தற்போது இயங்கும் ஆயிரக்கணக்கான மெட்ரிக் பள்ளிகள் முதல் மழலையர் பள்ளிகள் வரையிலான அனைத்தும் சட்ட விரோதமானவை என்றும், இந்தப் பள்ளிகளை அங்கீகரிப்பதற்காகத் தமிழக அரசு இயற்றியிருக்கும் மெட்ரிக் பள்ளிகளுக்கான நெறிமுறைகளும் சட்டவிரோதமானது என்றும், பா.ம.க.வைச் சேர்ந்த முன்னாள் மத்திய அமைச்சர் வேலு சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்திருந்தார். இதனை மறுக்க முடியாத தமிழக அரசு, சட்ட விரோத மெட்ரிக் பள்ளிகள் முதல் மழலையர் பள்ளிகள் வரையிலான அனைத்தையும் சட்டபூர்வமாக்கும் வகையில் புதிய சட்டமியற்றுவதற்கு ஒரு ஆண்டு அவகாசம் கேட்டது. நீதிமன்றமும் அவகாசம் வழங்கியிருக்கிறது. (நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ், 19.6.15)



செம்மரக் கடத்தல் மற்றும் கொலைக் குற்றங்களுக்காகக் கைது செய்யப்பட்டுள்ள டி.எஸ்.பி. தங்கவேலுவை அரசு வி.ஐ.பி. போல அழைத்துச் செல்லும் தமிழக போலீசு.

சட்டத்தின் ஆட்சியை நிலைநிறுத்துவதே நோக்கம் என்று கூறிக்கொள்ளும் நீதிமன்றம், கல்விக் கொள்ளையைச் சட்டபூர்வமானதாக மாற்றுவதற்கு துணை நிற்கிறது. தனியார் கொள்ளையைத் தடுப்பதற்காக என்று கூறிக்கொண்டு அமைக்கப்பட்ட சிங்கார வேல் கமிட்டி, கொள்ளையர்களின் ஏஜெண்டாக இருந்து ஆண்டுதோறும் அவர்களுடைய கோரிக்கைக்கு ஏற்ப கட்டணத்தை ஏற்றிக் கொடுக்கிறது.

மோடியின் துணிச்சலான நடவடிக்கை என்பதைப் போல பெரிதும் பீற்றிக் கொள்ளப்படும் மாகி விவகாரத்தில், நெஸ்லேவுக்கு எதிராக அரசு கிரிமினல் வழக்கு ஏதும் தொடுத்திருக்கிறதா என்றால், இல்லை. நுகர்வோரின் சார்பாக தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையத்திடம் (NCDRC) முறையிட்டிருக்கிறது. இதைக் காட்டிலும் அயோக்கியத்தனம் வேறு இருக்க முடியாது.

அதே நேரத்தில், பாக்கெட் உணவுகளில் உப்பு, சர்க்கரை போன்றவை எந்த அளவு இருக்கலாம் என்று தீர்மானிக்க தர நிர்ணய ஆணையம் ஒரு நிபுணர் குழுவை அமைத்திருக்கிறது. இந்திய உணவுப் பொருள் சந்தையில் சிறு, நடுத்தர உற்பத்தியாளர்கள் செல்வாக்கு செலுத்துவதால், உணவுப் பொருட்களைத் தரப்பரிசோதனைக்கு உட்படுத்துதல் என்ற பெயரில், அவர்களை வெளியேற்றுவதும், பன்னாட்டு நிறுவன ஆதிக்கத்தை உத்திரவாதப் படுத்துவதும்தான், மாகி பிரச்சினையைச் சாக்கிட்டு அமைக்கப்பட்டிருக்கும் இந்த நிபுணர் குழுவின் நோக்கமாக இருக்கும் என்று நிச்சயமாக சந்தேகிக்கலாம்.

இத்தகைய சந்தேகத்தை உறுதிப்படுத்தும் விதத்தில், ''மாகி நூடுல்ஸ் பிரச்சினை கிடக்கட்டும், கையேந்தி பவன் பானி பூரியில் உள்ள மலம் கலந்த தண்ணீர் டைபாய்டை உருவாக்கும்'' என்று எச்சரிக்கிறது தர நிர்ணய ஆணையத்தின் இணையதளம். மாநகராட்சிக் குழாய்களில் சாக்கடைத் தண்ணீர் வழங்கும் அரசு, கையேந்திபவனில் நுகர்வோரின் நலனைப் பாதுகாக்கிறதாம்!

உணவுத் தரக் கட்டுப்பாட்டு நிறுவனம், போலீசு, பள்ளி கல்வித்துறை முதலான துறைகளும் சரி, அவற்றுக்கான நோக்கங்கள், விதிகள், நெறிகள் போன்றவையும் சரி - அனைத்தும் ஆளும் வர்க்கங்கள் தமது நலனுக்கேற்ப வடிவமைத்துக் கொண்டவைதான். இந்த நிறுவனங்களையும் விதிமுறைகளையும் எல்லா மக்களுக்கும் பொதுவானவை என்று பிரச்சாரம் செய்து நம்பவைப்பதன் மூலம்தான் மக்களிமிருந்து ஆள்வதற்கான நியாயவுரிமையைப் பெற்றிருக்கின்றன ஆளும் வர்க்கங்கள்.

ஆனால் அவர்கள், தாங்கள் உருவாக்கிய நிறுவனங்களையும் நெறிகளையும் தாங்களே மீறுகிறார்கள். இந்த அரசமைப்பின் வரம்புக்கு உட்பட்டு, இத்தகைய முறைகேடுகளைக் கட்டுப்படுத்த மேற்கொள்ளப்படும் ஒவ்வொரு முயற்சியும், முன்னிலும் பெரிய முறைகேட்டுக்கு வழி வகுக்கிறது. 'சட்டத்தின் ஆட்சி' என்ற இடையூறைத் தகர்த்துத் தரைமட்டமாக்கியபடி, மத்திய அமெரிக்காவின் வாழைப்பழக் 'குடியரசு'களின் நிலைக்கு வழுக்கிச் சரிகிறது 'இந்திய ஜனநாயகம்'.

அடையாறு மேட்டுக்குடி வர்க்கம் தெருவுக்கு வந்ததும், கொலைக் குற்றவாளி பகிரங்கமாக போலீசின் முதுகில் பச்சைக்குதிரை தாண்டுவதும், உணவில் நஞ்சு கலந்த பன்னாட்டு நிறுவனங்களுக்கே தரநிர்ணய அதிகாரம் வழங்கப்படுவதும் இந்த அரசுக் கட்டமைவின் மக்கள் விரோதத் தன்மையை மட்டும் காட்டவில்லை. இந்திய ஆளும் வர்க்கத்தின் தோல்வியையும், அது ஆளும் அருகதை இழந்து நிற்பதையும் வெவ்வேறு கோணங்களில் பறைசாற்றுகின்றது.

● சூரியன்

# “பிணந்தின்னிகள்!”

**அரசு அதிகாரத்தில் உள்ள மாஃபியாக்கள் பொதுச் சொத்துக்களைக் கொள்ளையடிப்பதை அம்பலப்படுத்திய இரு பத்திரிக்கையாளர்கள் துடிதுடிக்க கொல்லப்பட்டனர்.**

பெருமையாகச் சித்தரிக்கப்படும் ‘சட்டத்தின் ஆட்சி’ தோல்வியடைந்து கிடப்பதை, கடந்த ஜூன் மாதத்தில் மகாராஷ்டிராவிலும் உ.பி.யிலும் அடுத்தடுத்து இரண்டு பத்திரிகையாளர்கள் கொடூரமாக கொல்லப்பட்டுள்ள நிகழ்வுகள் மீண்டும் நிரூபித்துக் காட்டுகின்றன.

உ.பி.யைச் சேர்ந்த பத்திரிகையாளரான ஜகேந்திரா, ஆளும் சமஜ்வாதி கட்சியின் பால்வளத்துறை அமைச்சரான ராம்மூர்த்தி சிங் வர்மாவின் சட்டவிரோத சுரங்கக் கொள்ளையையும், நிலப்பறிப்பையும் எதிர்த்து உள்ளூர் பத்திரிகைகளில் தொடர்ந்து எழுதி வந்தார். ஒரு அங்கன்வாடி பெண் ஊழியர் மீது பாலியல் வன்முறையை ஏவி அம்பலப்பட்டுள்ள அமைச்சர் வர்மாவின் சட்டவிரோத, சமூகவிரோத சுரங்கக் கொள்ளையை ‘‘பேஸ் புக்’’கில் அவர் தோலுரித்துக் காட்டினார்.


கடந்த ஜூன் முதல்நாளன்று பிற்பகலில் ஷாஜகான்பூரின் சர்தார் பஜார் பகுதியிலுள்ள அவரது வீட்டுக்கு போலீசாரின் துணையுடன் வந்த அமைச்சரின் அடியாட்கள், அவரது வீட்டைச் சோதனை நடத்துவதாகக் கூறித் தகராறு செய்து ஜகேந்திராவை மிருகத்தனமாக அடித்து உதைத்துவிட்டு, அவர் மீது மண்ணெண்ணெயை ஊற்றிக் கொளுத்திவிட்டு தப்பியோடினர். பலத்த தீக்காயங்களுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு உயிருக்குப் போராடிய அவர், அமைச்சர் வர்மாவையும் அவரது அடியாட்கள் மற்றும் துணைநின்ற 5 போலீசுக்காரன்களையும் தண்டிக்கக் கோரி மாஜிஸ்டிரேட் முன்னிலையில் வாக்குமூலம் அளித்துவிட்டு, கடந்த ஜூன் 8-ஆம் தேதியன்று மாண்டுபோனார்.

இக்கொடுஞ்செயலுக்கு எதிராகப் பத்திரிகையாளர்களும், எதிர்க்கட்சிகளும், உழைக்கும் மக்களும் போராடியதைத் தொடர்ந்து, குற்றம் சாட்டப்பட்ட 5 போலீசுக்காரன்கள் தற்காலிகப் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்களே அன்றி, அமைச்சர் வர்மா இன்றுவரை கைது செய்யப்படவில்லை. மறுபுறம் தடயவியல் துறையினரைக் கொண்டு, ஜகேந்திரா தனக்குத்தானே மண்ணெண்ணெய் ஊற்றிக் கொண்டு தற்கொலை செய்து கொண்டுள்ளதாக உ.பி. அரசு அறிவித்துள்ளது. மற்றவர்கள் அவர் மீது மண்ணெண்ணெய் ஊற்றி எரித்திருந்தால் உடலின் மேல்பாகம் எரிந்திருக்கும் என்றும், உடலின் கீழ்பாகம் கருகியிருப்பதால் இது தற்கொலைதான் என்று தடயவியல் - புலனாய்வு அதிகாரிகளைக் கொண்டு அறிக்கை வெளியிட வைத்தும், அமைச்சரால் பாலியல் வன்முறைக்கு ஆளான அங்கன்வாடி பெண் ஊழியரை மிரட்டி சாட்சி சொல்ல வைத்தும், ஜகேந்திரா குடும்பத்தாருக்கு நிவாரணத் தொகை கொடுத்து வாயடைக்கச் செய்தும் இந்தப் படுகொலையை மூடிமறைக்க முயற்சிக்கிறது ஆளும் சமஜ்வாதி அரசு.

இப்படுகொலை ஏற்படுத்திய அதிர்ச்சி அடங்குவதற்குள்ளாகவே, ம.பி.யில் பத்திரிகையாளரான சந்தீப் கோத்தாரி சுரங்க மாஃபியா கும்பலால் உயிரோடு எரித்துக் கொல்லப்பட்டுள்ளார். ம.பி.யின் சுரங்க மாஃபியாக்களின் சூறையாடலையும், மங்கனீசு கனிமவளக் கொள்ளையையும், அவர்களது கூட்டாளிகளான அதிகார வர்க்கத்தையும் ஓட்டுக்கட்சிப் பிரமுகர்களையும் தோலுரித்துக் காட்டி, சந்தீப் கோத்தாரி தொடர்ந்து உள்ளூர் பத்திரிகைகளில் எழுதி வந்தார். அதற்காகவே அவரையும் அவரது குடும்பத்தாரையும் இக்கொள்ளையர்கள் தொடர்ந்து மிரட்டி வந்தனர். அவர் மீது பல பொய்வழக்குகளைச் சோடித்து தொல்லை கொடுத்தனர்.

சுரங்க மாஃபியாக்களின் பகற்கொள்ளையை எதிர்த்து அவர் தொடுத்துள்ள ஒரு வழக்கைத் திரும்பப் பெறச் செய்ய நிர்ப்

ஆளும் சமஜ்வாதி கட்சியின் அமைச்சரான ராம் மூர்த்தி சிங் வர்மாவின் சட்டவிரோத சுரங்கக் கொள்ளையை அம்பலப்படுத்தியதால் உயிரோடு எரித்துக் கொல்லப்பட்ட உ.பி.யின் பத்திரிகையாளர் ஜகேந்திரா. சுரங்க மாஃபியா கும்பலால் உயிரோடு எரித்துக் கொல்லப்பட்ட ம.பி. பத்திரிகையாளர் சந்தீப் கோத்தாரி.





பந்தித்து அவர் மறுத்ததால், கடந்த ஜூன் 19 அன்று மோட்டார் சைக்கிளில் தனது நண்பருடன் சென்று கொண்டிருந்தபோது, குண்டர்களால் கடத்திச் செல்லப்பட்டார். கொடூரமாக சித்திரவதை செய்து, அவரை உயிரோடு எரித்துக் கொன்றுவிட்டு மகாராஷ்டிராவின் வார்தா மாவட்டம் சிந்தி ரயில் நிலையம் அருகே அவரது பிணத்தை சுரங்க மாஃபியாக்கள் வீசியெறிந்துள்ளனர்.

பத்திரிகையாளர்கள் மட்டுமல்ல, நாடெங்கும் ஊழல் கொள்ளையர்களையும் சாராய கும்பலையும் சமூக விரோத குற்றக் கும்பல்களையும் அம்பலப்படுத்திப் போராடிய எத்தனையோ இளைஞர்கள் கொடூரமாகக் கொல்லப்பட்டுள்ளனர். ஊழல் கொள்ளைகளுக்கு எதிராக, தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் மூலம் தகவல் பெற முயல்பவர்கள் கூட குறிவைத்து கொல்லப்படுகின்றனர். அதிகார வர்க்கம், போலீசு, நீதித்துறையின் உதவியுடன் கிரிமினல் குற்றக் கும்பலை முறியடித்துவிடலாம் என்ற நம்பிக்கையில் எழுதுபவர்களையும் போராடுபவர்களையும், அதே அதிகார வர்க்க, போலீசு, நீதித்துறையின் துணையுடன் கிரிமினல் குற்றக் கும்பல்கள் அழித்தொழிக்கின்றனர்.

கிரிமினல் குற்றக் கும்பல்களின் அட்டூழியங்கள் தலைவிரித்தாடும் நிலையில், மாவோயிஸ்டு புரட்சியாளர்கள் வன்முறைப் பாதையைக் கைவிட்டு ஜனநாயக நீரோட்டத்தில் சங்கமிக்க வேண்டும் என்று ஆளும் வர்க்கங்களும் தேசிய ஊடகங்களும் தொடர்ந்து உபதேசிக்கின்றன. ஆனால் இந்த அரசமைப்பின் சட்டவிதிகளுக்குட்பட்டு, ஜனநாயக முறைப்படி போராடுவோருக்கே இந்தக் கதி என்றால், இது சட்டத்தின் ஆட்சியின் தோல்வியையும், ஆளும் வர்க்கம் ஆளத்தகுதியிழந்து நிற்பதையும், இந்த அரசமைப்பானது எதிர்நிலை சக்தியாக மாறிவிட்டதையும்தான் நிரூபித்துக் காட்டுகிறது.

• தனபால்

# அறிவுத்துறையினரை வதைக்கும் அரசு பயங்கரவாதம்!

புரட்சியாளர்களைச் சிறையில் அடைத்து, அடிப்படை வசதிகளையும் மருத்துவ உதவிகளையும் திட்டமிட்டே புறக்கணித்து நோயையும் மன உளைச்சலையும் தீவிரப்படுத்துவதன் மூலம் மரணத்துக்குள் தள்ளி, அவர்கள் இயற்கையாகவே மரணமடைந்ததாகக் காட்டும் சதியை திட்டமிட்டு ஆட்சியாளர்கள் அரங்கேற்றத் துடிக்கின்றனர். முனைவர் ஜி.என்.சாய்பாபாவும், தோழர் கோபட் காந்தியும் அண்மையில் நடத்திய உண்ணாவிரதப் போராட்டங்களே இதனை நிரூபித்துக் காட்டுகின்றன.

புரட்சிகர அமைப்புகளின் உருவாக்கத்திலும் செயல்பாடுகளிலும் முக்கிய பங்கு வகித்ததோடு, காட்டு வேட்டை என்ற பெயரிலான பழங்குடியின மக்களின் மீதான அரசு பயங்கரவாத அடக்குமுறையை எதிர்த்து கருத்தியல் தளத்திலும் போராடி வந்த டெல்லி ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகப் பேராசிரியரான முனைவர் ஜி.என்.சாய்பாபா, கடந்த 2014 மே 9 அன்று மகாராஷ்டிர மாநில பயங்கரவாதத் தடுப்புப் போலீசாரால் சட்டவிரோதமாகக் கடத்திச் செல்லப்பட்டார். பின்னர் மாவோயிஸ்டு பயங்கரவாதி என்று குற்றம் சாட்டப்பட்டு சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டம் எனும் பயங்கரவாத ''ஊபா'' சட்டத்தின் கீழ் அவர் நாக்பூர் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

சக்கர நாற்காலியின் உதவியுடன் இயங்கிவரும் மாற்றுத்திறனாளியான அவர், இதய நோய், ரத்தக் கொதிப்பு, சிறுநீரகக் கோளாறு முதலானவற்றால் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், சிறை மருத்துவரால் பரிந்துரைக்கப்பட்ட மருந்து - மாத்திரைகளைக்கூட தராமல், சிறை அதிகாரிகள் அவரைப் புறக்கணித்திருக்கின்றனர். மருத்துவர் பரிந்துரைத்துள்ள உணவும் சிகிச்சையும் முறையாக அவருக்கு அளிக்கப்பட வேண்டுமென நாக்பூர் செசன்ஸ் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ள போதிலும், சிறை நிர்வாகம் அதை அலட்சியப்படுத்தியுள்ளது. தொடரும் இக்கொடுமைக்கெதிராக, கடந்த ஏப்ரல் 11 முதலாக தொடர் உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொண்ட அவர், ஏப்ரல் 14 அன்று நினைவிழந்த நிலையில் நாக்பூர் மருத்துவமனையில் கிடத்தப்பட்டார். அங்கு அவருக்கு இதய நோய்க்கான ஆன்ஜியோகிராம் சோதனை செய்யப்பட்ட போதிலும், மருத்துவர்களை நிர்பந்தித்து சிகிச்சையை போலீசார் தாமதப்படுத்தியுள்ளனர். இதன் மூலம் சாய்பாபாவை மரணத்துக்குள் தள்ளுவதே அவர்களின் நோக்கமாக இருந்துள்ளது.

பல்வேறு மனித உரிமை அமைப்பினரும், அறிவுத்துறையினரும் வழக்குரைஞர்களும் இக்கொடுஞ்செயலை எதிர்த்தும், முனைவர் சாய்பாபாவை நிபந்தனையின்றி விடுதலை செய்யக் கோரியும் கடந்த மே மாதத்தில் ஆர்ப்பாட்டங்களை நடத்தத் தொடங்கினர். இதுபற்றிய பத்திரிகை செய்திகளின் அடிப்படையில் மும்பை உயர்நீதிமன்ற நீதிபதிகள் மொகித் ஷா, ஏ.கே.மேனன் ஆகியோர் தாமே இந்த விவ

காரத்தை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு, மாநில அரசும் சிறைத் துறையும் சாய்பாபாவின் உடல் நிலை குறித்து அறிக்கை சமர்ப் பிக்குமாறும், அவர் விருப்பப்படும் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை அளிக்குமாறும் ஜூன் 22 அன்று உத்தரவிட்டனர். அதன் பிறகு, மரணத்தில் விளிம்பில் நிற்கும் அவரது உடல்நிலை காரண மாக, நாக்பூர் செசன்ஸ் நீதிமன்றத்தால் தொடர்ந்து ரத்து செய்யப் பட்ட அவரது பிணை மனுவை மறு பரிசீலனை செய்யவேண்டு மெனவும், இவரைப் பிணையில் விடுவிக்க வேண்டுமென்ற கருத்துக்கு தாங்கள் வந்துள்ளதாகவும், இதுபற்றி மாநில அரசு கருத்து கூறுமாறும் கடந்த ஜூன் 26 அன்று தெரிவித்துள்ளனர். இதனையடுத்து சாய்பாபா மூன்று மாத கால பிணையில் விடுவிக் கப்பட்டுள்ளார்.

முனைவர் சாய்பாபாவைப் போலவே, மாவோயிஸ்டு கட்சியின் அரசியல் தலைமைக் குழு உறுப்பினரான தோழர் கோபட் காந்தி, கடந்த 2009-இல் டெல்லியில் கைது செய்யப் பட்டு, இந்திய அரசுக்கு எதிராக ஆயுதம் தாங்கிய தாக்குதல் நடவடிக்கைக்கு சதித் திட்டம் தீட்டினார் என்று பொய்வழக்கு சோடிக்கப்பட்டு ''ஊபா'' சட்டத்தின் கீழ் திகார் சிறையில் அடைக் கப்பட்டுள்ளார்.

ஏற்கெனவே இதய நோய், இரத்த அழுத்த நோய், இடுப்பு எலும்பு நகர்வினால் ஏற்பட்ட பாதிப்பு, மூட்டுவலி, சிறுநீரக நோய் மற்றும் இதர தொல்லைகளால் அவதிப்படும் 68 வயதான அவருக்கு, கடந்த ஐந்தரை ஆண்டுகளாக படுக்கையும் கழிப்பறை வசதியும் செய்து தராமல், குறுகிய கால இடைவெளியில் துப்புரவு செய்யப்படாத வெவ்வேறு வார்டுகளுக்கு சிறிதும் மனிதாபிமான மின்றி சிறை அதிகாரிகள் அடுத்தடுத்து மாற்றியதன் காரணமாக, அவரது உடல்நிலை மோசமாகியது. அவருக்கு உரிய சிகிச்சை அளிக்குமாறு கடந்த மார்ச் மாதத்தில் டெல்லி செசன்ஸ் நீதிமன்றம் உத்தரவிட்ட போதிலும், சிறை அதிகாரிகள் அதைத் தொடர்ந்து புறக்கணித்து வந்தனர்.

ஒரு அரசியல் கைதிப் போலல்லாமல், தண்டிக்கப்பட்ட கிரிமினல் குற்றவாளியைப் போல நடத்தப்படுவதையும், சிறை நிர்வாகத்தின் அடிப்படை மனித உரிமை மீறல்களையும் எதிர்த்து அவர் கடந்த மே 30 அன்று உண்ணாவிரதப் போராட்டத்தைத் தொடங்கினார். 18 நாட்களாக அவர் தொடர்ந்து போராடிய நிலையில், நீதிமன்ற உத்தர வுக்குப் பின்னர் சிறை நிர்வாகம் அடிப்படை வசதிகளைச் செய்து கொடுக்கவும், அவரது நோய் களுக்குச் சிகிச்சை அளிக்கவும் ஜூன் 19 அன்று முன்வந் துள்ளது.

தோழர் கோபட் காந்தி



அரசாங்கத்தின் கருத்துக்கு மாறுபட்ட கருத்தை முன் வைத்து நாட்டின் மீதும் மக் களின் மீது அக்கறை கொண்டு இலட்சியத்துடன் செயல்படும் கோபட் காந்தி போன்ற அறிவுத் துறையினரும் புதிய சமுதாயச் சிந்தனையாளர்களும் சிறையில் கொடுமைப்படுத்தப்படுகிறார் கள். சிறையில் ராஜ உபச்சாரம் செய்ததோடு, ஊழல் குற்றவாளி ஜெய லலிதா - சசிகலா கும்பலை விடுதலை செய்யும் அரசும் நீதித்துறையும் சிறைத் துறையும், மாற்றுத் திறனாளியான பேராசி ரியர் சாய்பாபாவை கிஞ்சித்தும் மனிதாபி மானமின்றி சிறையலடைத்து வதைக் கிறது. ஒருவர் மீது பயங்கரவாதக் குற்றம் சாட்டப்பட்டுவிட்டால், எல்லாவகை மனித உரிமை மீறல்களும் அவமானப் படுத்தல்களும் நியாயப்படுத்தப்படு கின்றன. பா.ஜ.க.வின் மைய அமைச்சர் ஸ்மிருதி இரானி, ஆம் ஆத்மி கட்சியின் டெல்லி சட்ட அமைச்சர் ஜிதேந்திர சிங் தோமர், மகாராஷ்டிரா கல்வி அமைச்சர் வினோத் டாங்டே, கோவா பொதுப்பணித் துறை அமைச்சர் சுவின் தவாலிகர் ஆகி யோர் பட்டபடிப்பு சான்றிதழ் மோசடி செய்து அமைச்சராகி நாட்டை வழிநடத்து கிறார்கள். ஆனால் கல்வியாளர்களும் புரட்சிகர சிந்தனையாளர்களும் அரசு பயங் கரவாதத்தை எதிர்ப்போரும் கைது செய்யப் பட்டு சிறையில் வதைபட்டுக் கொண்டிருக் கின்றனர். அவசர நிலை பாசிச ஆட்சிக் காலத்தைவிட கொடுமையான இருண்ட காலத்தில் நாடும் மக்களும் தள்ளப் பட்டிருப்பதையே இது மீண்டும் நிரூ பித்துக் காட்டுகிறது.

● குமார்



முனைவர் ஜி.என்.சாய்பாபா

## மியான்மரில் புகுந்து தீவிரவாதிகள் மீது தாக்குதல்:

# சுயதம்பட்ட மோடியின் இன்னுமொரு ஆக்ஷன் சினிமா!

**வெற்றுச் சவடால்களால் தன்னை தேசபக்த நாயகனாகச் சுயதம்பட்டம் அடித்துக் கொண்ட மோடியின் "எல்லை தாண்டிய தீவிரவாத எதிர்ப்பு" சினிமா, வந்த வேகத்திலேயே டப்பாவுக்குள் சுருண்டுவிட்டது.**

பாசிச மோடியைப் புதிய ரட்சகனாக, செயல்வீரனாக, வளர்ச்சியின் நாயகனாக விளம்பரப்படுத்தி, பல விதங்களிலும் பில்ட் -அப் கொடுத்து ஊடகங்களும் இந்துத்துவப் பரிவாரங்களும் தூக்கி நிறுத்திய போதிலும், அத்தனையும் சரிந்து விழுந்து, நாடு முழுவதும் கடும் அதிருப்தியையும் வெறுப்பையும்தான் மோடி அரசு எதிர்கொண்டிருக்கிறது. கார்ப்பரேட் அடியாளும் பாசிசக் கோமாளியுமான மோடி கும்பலின் பராக்கிரமங்களைச் சித்தரிக்கும் பல விளம்பரப் படங்களை அடுத்தடுத்து வெளியிட்ட போதிலும், அவையனைத்தும் புஸ்வாணமாகிவிட்டன. இந்நிலையில் அனைத்து அரங்குகளிலும் தோல்வியடைந்துள்ள மோடி கும்பல், இவற்றை மூடிமறைக்கவும், மக்களின் கவனம் எப்போதும் தன்னை நோக்கியே இருக்கவும் கிரிமினல்தனமாக யோசித்து, ''எல்லை தாண்டிய தீவிரவாத எதிர்ப்பு'' என்ற புத்தம் புது ஆக்ஷன் சினிமாவை அண்மையில் வெளியிட்டது.

கடந்த ஜூன் 9 அன்று அதிகாலை நேரத்தில் இந்திய ராணுவப் படையினர், இந்திய-மியான்மர் எல்லையை தாண்டிச் சென்று மியான்மரில் பதுங்கியிருந்த தீவிரவாதக் குழுக்களின் இரண்டு முகாம்கள் மீது அதிரடித் தாக்குதல் நடத்தியதாகவும், தீவிரவாதிகளில் ஏறத்தாழ 50 பேர் கொல்லப்பட்டு 50 பேர் படுகாயமடைந்து காட்டுக்குள் தப்பியோடிவிட்டதாகவும் மோடி அரசும் ஊடகங்களும் பரபரப்பூட்டும் செய்திகளை வெளியிட்டன.

இந்திய ராணுவத்தின் டோக்ரா ரெஜிமெண்ட்டைச் சேர்ந்த வாகனத்தின் மீது வடகிழக்கிந்திய தேசிய இன ஆயுதக் குழுக்கள் கடந்த ஜூன் 4 அன்று நடத்திய தாக்குதலில் 18 சிப்பாய்கள் கொல்லப்பட்டு 14 பேர் படுகாயமடைந்தனர். இதற்குப் பதிலடி கொடுக்கும் வகையில் இந்திய ராணுவத்தின் கமாண்டோ படையினர் ஜூன் 9 அன்று மியான்மருக்குள் புகுந்து ஆயுதக் குழுக்களின் முகாம்கள் மீது இந்த அதிரடித் தாக்குதல் நடத்தியதாகத் தொடர்ந்து ஒளிபரப்பிய தொலைக்காட்சிகள், இதனைத் தீவிரவாதத்துக்கு எதிரான மோடி அரசின் உறுதியான நடவடிக்கையாகச் சித்தரித்தன.

மோடி கும்பலின் காமெடி பீசாகிய மத்திய இராணுவத்துறை இணையமைச்சர் ராஜ்யவர்தன் சிங் ரத்தோர், நாடெங்கும் பரபரப்பாக வெளியிடப்பட்ட இந்த சினிமாவுக்குப் பிரமோஷன் கொடுக்கக் கிளம்பினார். மோடி அரசின் உறுதியான துணிச்சலான முடிவினால்தான் இத்தகைய சாதனை நிகழ்ந்துள்ளது என்றும், இந்தியாவுக்கு எதிரான பயங்கரவாதச் செயல்களை ஊக்குவிக்கும் அண்டை நாடுகளுக்கு இது ஒரு எச்சரிக்கை என்றும், நட்பு நாடான மியான்மருக்குள் புகுந்து தாக்குதல் நடத்தியது போன்றே எந்த நாடாக இருந்தாலும் உள்ளே புகுந்து தீவிரவாதிகளை ஒழிக்க தயங்க மாட்டோம் என்றும் பாகிஸ்தானை எச்சரித்து வீராவேச உதார் விட்டார்.

ஆனால், ''இந்திய அரசும் ஊடகங்களும் கூறுவது அப்பட்டமான பொய். எங்களது முகாம்கள் மீது எந்தவிதத் தாக்குதலும் நடத்தப்படவில்லை. அப்படி தாக்குதல் நடத்தப்பட்டிருந்

கடந்த ஜூன் 4 அன்று வடகிழக்கிந்திய தேசிய இன ஆயுதக் குழுக்களின் குண்டுவீச்சுத் தாக்குதலில் 18 சிப்பாய்களைப் பலி கொண்டு சிதிலமடைந்து கிடக்கும் இந்திய ராணுவத்தின் வாகனம்.



தால், எமது தரப்பில் கொல்லப்பட்ட ஒருவரது உடலையாவது பகிரங்கமாகக் காட்டத் தயாரா?'' என்று நாகா தேசிய விடுதலை கவுன்சிலின் கப்லாங் குழுவினர் தங்களது மறுப்பு அறிக்கையின் மூலம் இந்திய அரசுக்குச் சவால் விட்டுள்ளனர். இந்திய அரசுடன் போடப்பட்ட போர் நிறுத்த ஒப்பந்தத்தை முறித்துக் கொண்டதாக கடந்த மார்ச் 27 அன்று அறிவித்துள்ள இக்குழுவும், அசாமின் உல்ஃபா சுதந்திரக் குழு, காம்டபூர் விடுதலை அமைப்பு, போடோலாந்து தேசிய ஜனநாயக முன்னணி - ஆகிய குழுக்களும் இந்திய அரசுக்கு எதிராக ஒருங்கிணைந்து போராட, தென்கிழக்காசியாவின் மேற்குப் பிராந்திய ஐக்கிய தேசிய விடுதலை முன்னணி [United National Liberation Front of Western South East Asia (UNLFW)] என்ற கூட்டமைப்பை உருவாக்கியுள்ளதாக கடந்த ஏப்ரல் 17 அன்று அறிவித்துள்ளன.




2009-இல் ராணுவச் சிப்பாய்கள் தங்களுக்குள் எடுத்துக் கொண்ட குரூப் போட்டோவை, இவர்கள்தான் மியான்மரில் புகுந்து தீவிரவாதிகள் மீது அதிரடித் தாக்குதல் நடத்திய அதிரடிப்படையினர் என்று ஊடகங்கள் பரபரப்பாக வெளியிட்ட ''உல்டா'' படம்.

இதுவொருபுறமிருக்க, இத்தாக்குதல் எங்கள் நாட்டிற்குள் நடக்கவேயில்லை என்றும், எந்த வெளிநாட்டுச் சக்தியும் எங்கள் மண்ணைப் பயன்படுத்த அனுமதிக்க மாட்டோம் என்றும் மியான்மர் அதிபர் மாளிகை அலுவலக இயக்குநரான ஷாவ் ஹித்தே என்பவர் அறிக்கை வெளியிட்டுள்ளார். மோடி கும்பலின் ஆஸ்தான கோயபல்சாகிய ''துக்ளக்'' சோ கூட, இது இந்திய எல்லைக்குள் நடந்ததா, அல்லது அதைக் கடந்து மியான்மர் எல்லையினுள் நடந்ததா என்பது தெளிவாகாத நிலை உருவாக்கப்பட்டிருக்கிறது என்று இந்த நடவடிக்கையின் சந்தேகத் தன்மையைத் தனது தலையங்கத்தில் போகிற போக்கில் சுட்டிக் காட்டியிருக்கிறார்.

இருப்பினும் மோடி கும்பலின் ராம்போ பொய்யை மூடி மறைத்துவிட்டு, காங்கிரசு அரசை விஞ்சும் வகையில் மோடி அரசானது எல்லை தாண்டிச் சென்று தீவிரவாதிகளைத் தாக்கத் துணிந்துள்ளதாக 'தேசிய' ஊடகங்கள் உடுக்கையடித்தன. இந்தியாவுக்கான இஸ்ரேலியத் தூதர் டேனியல் கார்மனிடம் பேட்டி எடுத்து தனது வீரதீரத்தை மோடி கும்பல் பறைசாற்றிக் கொண்ட போதிலும், மோடி கும்பலின் பொய்யும் மோசடியும் அடுத்தடுத்து அம்பலமாகியதால், அது இன்னுமொரு கேலிக் கூத்தாகிப் போனது. அதன் பிறகு, குப்புற விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டவில்லை என்ற கதையாக, எல்லை தாண்டிச் சென்று தாக்குதல் நடத்தினாலும் இப்படி தண்டோரா போட்டு விளம்பரப்படுத்துவது ராஜதந்திரம் அல்ல என்றும், மோடி அரசு நிதானத்துடனும் முதிர்ச்சியுடனும் செயல்பட வேண்டுமென்றும் இப்போது 'தேசிய' ஊடகங்கள் அடக்கி வாசிக்கின்றன.

தாங்கள் எல்லை தாண்டினால் அதனை சாதனையாக சவடால் அடித்துக் கொள்ளும் மோடி கும்பல்தான், தமிழக மீனவர்கள் இலங்கை ராணுவத்தால் கொல்லப்படுவதை, ''நீஎல்லை தாண்டுவதால்தான் சுடுகிறார்கள்'' என்று இக்கொலைகளையும் தாக்குதல்களையும் நியாயப்படுத்துகிறது. 2001 இறுதியில் நடந்த இந்திய நாடாளுமன்றத்தின் மீதான தீவிரவாதத் தாக்குதலைத் தொடர்ந்து பாக். எல்லையில் 5 லட்சம் படைகளைக் குவித்த பா.ஜ.க. அரசு, அமெரிக்காவின் கட்டளைப்படி படைகளைத் திருப்பியழைத்து, தனது சரணாகதியை மூடிமறைத்துக் கொண்டு வெற்று சவடால் அடிக்கத் தான் முடிந்துள்ளது. இந்த லட்சணத்தில் குடிகாரன் தெருவில் உதார் விடுவதைப் போல, இந்தப் பாசிசக் கோமாளிகள் பாகிஸ்தானுக்கு எதிராக இப்போது சவுண்டு விடுகின்றனர்.

''நாங்கள் ஒன்றும் மியான்மர் கிடையாது, பகல்கனவு காண்பதை நிறுத்துங்கள்; மியான்மரிலிருந்து பாகிஸ்தான் முற்றிலும் வேறுபட்டது'' என்று பாகிஸ்தான் உள்துறை அமைச்சர் சவுதாரி நிசார் அலி கான் இந்தியாவைப் பகிரங்கமாகவே எச்சரித்தார். எல்லை தாண்டிய தீவிரவாத எதிர்ப்பு என்று பகட்டு ஆரவார வீரவசனம் பேசிய மோடி கும்பல், அதன் பிறகு வாயே திறக்கவில்லை. குறுகிய தேசிய வெறியையும் போர்வெறியையும் கிளறிவிட்டு, மட்டரகமான வெற்றுச் சவடால்களால் தன்னைத் தேசபக்த நாயகனாகச் சுயதம்பட்டம் அடித்துக் கொண்ட மோடியை, சூரப்புலியாகக் காட்டிய ''எல்லை தாண்டிய தீவிரவாத எதிர்ப்பு'' சினிமாவும் வந்த வேகத்திலேயே டப்பாவுக்குள் சுருண்டுவிட்டது.

இதுவும் போதாதென்று, நேபாள நிலநடுக்கத்தில் சிக்கிய மக்களை மீட்க வந்த புதிய ரட்சகனாக, ஐந்து பைசா கொடுத்துவிட்டு ஐந்து ரூபாய்க்கு விளம்பரம் செய்து கொள்ளும் அற்பவாதியான மோடி கும்பலையும் அதன் விசுவாச ஊடகங்களையும் நேபாள மக்கள் விரட்டியடித்த கதை சந்தி சிரிக்கிறது. இந்நிலையில், மோடி கும்பலும் 'தேசிய' ஊடகங்களும், இப்போது உள்ளூர் ரட்சகனாக இருந்த மோடி, உலக ரட்சகனாக அவதாரம் எடுத்துள்ளதாக சாமியாடிக் கொண்டு, ''உலக அமைதிக்காக மோடியின் யோகசனம்'' எனும் இன்னுமொரு கேவலமான கூத்தை வெட்கமின்றி விளம்பரப்படுத்திக் கொண்டிருக்கின்றன.

● மனோகரன்

## “தனியார் வங்கிகள் வளர பொதுத்துறை வங்கிகளை ஒழித்துக்கட்டு!”

# - இதுதான் மோடி பிராண்டு ‘வளர்ச்சி’!


அரசு வங்கிகளுக்குத் தேவையான நிதியைத் தர மறுப்பதன் மூலம், அவற்றைக் குறுக்கு வழியில் தனியார்மயமாக்க முயலுகிறது, மோடி அரசு.

மன்மோகன் சிங் அரசு மிச்சம் வைத்து விட்டுப் போனதுறைகளை, எவ்வளவு விரைவாக முடியுமோ அவ்வளவு விரைவாக இந்தியத் தரகு முதலாளிகளுக்கும் ஏகாதிபத்திய நிறுவனங்களுக்கும் படையல் போடும் வேலையை வெளிப்படையாகவும் கமுக்கமாகவும் என இரண்டு வழிகளிலும் நிறைவேற்றி வருகிறது, மோடி அரசு. காப்பீடு துறையில் அந்நிய முதலீட்டு வரம்பை 49 சதவீதமாக உயர்த்துவது; இராணுவத் தளவாடங்கள் உற்பத்தியில் இந்தியத் தரகு முதலாளிகளை அனுமதித்திருப்பதோடு, பன்னாட்டு ஏகபோக நிறுவனங்கள் அத்துறையில் 49 சதவீதம் அளவிற்கு முதலீடு செய்வதற்கும், சில குறிப்பிட்ட இனங்களில் 100 சதவீதம் அளவிற்கு அந்நிய முதலீட்டை அனுமதிப்பது; பல்வேறு உயிர் காக்கும் மருந்துப் பொருட்களைக் காப்புப் பட்டியலில் இருந்து விடுவித்து, அவற்றின் விலைகளைத் தீர்மானிக்கும் உரிமையை ஏகபோக நிறுவனங்களுக்கு அளிப்பது என்பவையெல்லாம் வெளிப்படையாக நடந்திருக்கும் அதே சமயம், பொதுத்துறை வங்கிகளைத் தனியார்மயமாக்கும் திட்டம் மிகவும் கமுக்கமாகவும் சதித்தனமாகவும் அரங்கேறி வருகிறது.

கடந்த ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலுக்கான பிரச்சாரம் நடைபெற்று வந்த சமயத்தில், அமெரிக்கத் தலைநகர் வாஷிங்டனில் அமைந்துள்ள சர்வதேச பொருளாதாரத்திற்கான பீட்டர்சன் இன்ஸ்டிட்யுட் என்ற சிந்தனைக் குழாம்-குடிமைச் சமூக அமைப்பில் உயர் பொறுப்பிலிருந்த இந்தியரான அரவிந்த் சுப்பிரமணியன் இந்திய பொதுத்துறை வங்கிகளை ஒழித்துக்கட்ட வேண்டியதை வலியுறுத்தி கட்டுரையொன்றை எழுதியிருந்தார். பொதுத்துறை வங்கிகளை, இந்திய அரசின் கழுத்தில் தொங்கும் தேவையற்ற சுமையாகச் சாடியிருந்த அவரைத்தான், தனது தலைமைப் பொருளாதார ஆலோசகராக நியமித்துக் கொண்டார், மோடி. இதனைத் தொடர்ந்து பொதுத்துறை வங்கிகளைச் சீரமைப்பது தொடர்பான வழிகளை ஆராய்வதற்காக மன்மோகன் சிங் அரசால் நியமிக்கப்பட்ட நாயக் கமிட்டி, தனது அறிக்கையை பிரதமர் மோடியிடம் அளித்தது. இவையிரண்டும் பொதுத்துறை வங்கிகளைத் தனியார்மயமாக்க மோடி அரசு வெறித்தனமாக முயலும் என்பதை எடுத்துக் காட்டின என்றால், மோடி அரசின் இரண்டு பட்ஜெட் (2014-15, 2015-16) அறிக்கைகளும் அதனைத் தெட்டத்தெளிவாக உறுதிப்படுத்தின.

பொதுத்துறை வங்கிகளின் அழிவில்தான் தனியார் வங்கிகள் வளர முடியும் எனக் கூறும் அரவிந்த் சுப்பிரமணியத்தின் கட்டுரை, அதற்காகப் பொதுத்துறை வங்கிகளை நைச்சியமான முறையில் கொன்றுவிட வேண்டும் என வெளிப்படையாகவே பரிந்துரைக்கிறது. ‘‘இந்திய வங்கித் தொழிலில் 75 சதவீத பங்கு இன்னமும் பொதுத்துறை வங்கிகளிடம் தான் உள்ளன. மேலும் மேலும் தனியார் வங்கிகளைத் திறப்பதன் மூலம் பொதுத்துறை வங்கிகளின் இந்த செல்வாக்கைக் குறைத்துவிட முடியும் என்பதற்கு எந்த உத்தரவாதமும் கிடையாது. பொதுத்துறை வங்கிகளின் இந்தச் செல்வாக்கைச் சுருக்காமல், தனியார் வங்கிகள் வளர்வதற்கான வாய்ப்பே இல்லை. நல்ல இலாபமீட்டும் பொதுத்துறை வங்கி

அரசு வங்கிகளைக் கொல்வதற்குத் தயாராகிவரும் தனியார்மயக் கோடாரிகள்: ரிசர்வ் வங்கி கவர்னர் ரகுராம் ராஜன், பிரதமரின் தலைமைப் பொருளாதார ஆலோசகர் அரவிந்த் சுப்பிரமணியன் மற்றும் நாயக் கமிட்டியின் தலைவர் பி.ஜே.நாயக்.


களைத் தனியார்மயமாக்குவதை இந்திய அரசியல் சூழல் அனுமதிக்காது. அதற்குப் பதிலாக, வாராக் கடன் பிரச்சினையால் மோசமான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ள பொதுத்துறை வங்கிகளைக் கவிழ்ப்பதன் மூலம்தான் ஒட்டுமொத்த பொதுத்துறை வங்கிகளின் செல்வாக்கைக் குறைக்க முடியும்'' என்கிறது, அவரது கட்டுரை.

பொதுத்துறை வங்கிகளைக் கொல்லைப் புற வழியில் தனியார்மயமாக்க ரிசர்வ் வங்கியை ஒரு கருவியாகப் பயன்படுத்த வேண்டும் எனப் பரிந்துரைக்கும் அவரது கட்டுரை, ''வாராக் கடன் பிரச்சினையால் தடுமாறும் பொதுத்துறை வங்கிகளைக் கைதூக்கிவிடும் நோக்கில் அரசு அந்த வங்கிகளில் மேலும் மூலதனமிட முயலும் பொழுது, அத்தகைய 'பெயில் அவுட்' நடவடிக்கைகளை ரிசர்வ் வங்கி தலையிட்டுத் தடுக்க வேண்டும். பொருளாதார மந்த நிலையில் இத்தகைய பெயில் அவுட் நடவடிக்கைகள் நிதிப் பற்றாக்குறையை மேலும் அதிகரிப்பதை அனுமதிக்க முடியாது; திறமையற்ற வங்கிகள் அரசின் ஆதரவோடு உயிர் பிழைத்திருப்பதை அனுமதிக்கக் கூடாது என ரிசர்வ் வங்கி அரசிடம் உறுதியாக எடுத்துச் சொல்ல வேண்டும். நாட்டின் பொருளாதார நிலை எந்தளவிற்கு மோசமாக உள்ளதோ, அந்தளவிற்கு ரிசர்வ் வங்கி கவர்னருக்கு பொதுத்துறை வங்கிகளை பெயில் அவுட் செய்வதற்கு எதிராகப் பேச வாய்ப்புகள் கிடைக்கும். மோசமடைந்த பொதுத்துறை வங்கிகளைத் தீர்த்துக் கட்டுவதை ஒருபுறமும், இலாபகரமான வங்கிகளைத் தனியாருக்குக் கைமாற்றிவிடுவதை இன்னொருபுறமும் செய்வதற்கு இந்த வாய்ப்புகளை ரிசர்வ் வங்கி கவர்னர் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்'' என்றவாறு பொதுத்துறை வங்கிகளைத் தனியார்மயமாக்கும் திட்டத்தை விவரிக்கிறது, அரவிந்த் சுப்பிரமணியத்தின் கட்டுரை. பொதுத்துறை வங்கிகளுக்கு ''சைலண்டாக'' சங்கு ஊதச் சொல்லும் இந்தக் கட்டுரைக்கு அவர் வைத்திருக்கும் தலைப்பு - ''சாகடித்துச் சீர் திருத்துவோம் (Reform by death)''

நாயக் கமிட்டி அறிக்கையும் வாராக் கடன் பிரச்சினையை முன்வைத்து பொதுத்துறை வங்கிகளைத் தனியார்மயமாக்கக் கோருகிறது. ''பொதுத்துறை வங்கிகளின் நிதி நிலைமை கவலைக்கிடமாக இருப்பதற்கு அரசின் தலையீடும் நிர்வாகத் திறமையின்மையும்தான் காரணம்'' எனக் கூறும் நாயக் கமிட்டி, இதற்குத் தீர்வாக, ''மைய அரசு பொதுத்துறை வங்கிகளில் உள்ள தனது பங்கு மூலதனத்தை 50 சதவீதமாகக் குறைத்துக் கொள்வதோடு, வங்கி முதலீட்டு கம்பெனி என்ற புதிய நிறுவனத்தைத் தொடங்கி, அதனிடம் இப்பங்கு மூலதனத்தையும் வங்கிகளை நிர்வகிக்கும் பொறுப்பையும் ஒப்படைக்க வேண்டும். முதலீட்டாளர் என்ற முறையில் அரசு பொதுத்துறை வங்கிகள் மூலம் கிடைக்கும் இலாபத்தை எண்ணிக் கொண்டிருப்பதைத் தாண்டி வேறெந்த வகையிலும் வங்கி நடவடிக்கைகளில் தலையிடக் கூடாது'' எனப் பரிந்துரைக்கிறது.

அரவிந்த் சுப்பிரமணியன் போலவே பி.ஜே.நாயக்கும் அமெரிக்க இறக்குமதி சரக்குதான். 2008-இல் அமெரிக்காவில் வெடித்த சப்-பிரைம் (வீட்டுக் கடன்) மோசடியில் குற்றஞ்சாட்டப்பட்ட ஏகாதிபத்திய நிதி நிறுவனங்களுள் ஒன்றான மார்கன் ஸ்டான்லியின் முன்னாள் தலைமை செயல் அதிகாரியான அவர், இந்தியாவில் செயல்படும் தனியார் வங்கியான ஆக்ஸிஸ் வங்கியின் தலைவராகவும் பணியாற்றியிருக்கிறார். இரத்த வெறி கொண்டு அலையும் செந்நாய் கூட்டம் போல, ரகுராம் ராஜன், அரவிந்த் சுப்பிரமணியன், பி.ஜே.நாயக் உள்ளிட்ட ஏகாதிபத்திய அடிவருடி நிபுணர்கள் கும்பல் இந்தியாவின் நிதித்துறையை முற்றிலுமாகத் தனியார்மயமாக்கத் துடிக்கிறார்கள்.



மாணவர்களுக்குக் கல்விக் கடன் வழங்க மறுத்த இந்திய அரசு வங்கி நிர்வாகத்தைக் கண்டித்து கேரள மாநிலம் கோழிக்கோட்டில் இந்திய மாணவர் சங்கத்தால் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டம். (கோப்புப் படம்)

•••

2000-ஆம் ஆண்டின் முதல் எட்டு ஆண்டுகளில் இந்தியப் பொருளாதாரம் கண்ட வளர்ச்சிக்கும், அம்பானி சகோதரர்கள், அதானி, ரூயா உள்ளிட்ட இந்தியத் தரகு முதலாளிகள் உலகக் கோடீசுவரர்களாக வளர்ந்ததற்கும் அடிப்படையாக இருந்தது பொதுத்துறை வங்கிகள் வழங்கிய கடன்கள்தான். 1999-இல் அடிக்கட்டுமானத் துறைக்குப் பொதுத்துறை வங்கிகள் வழங்கிய கடன் வெறும் 724 கோடி ரூபாய்தான். இது 2012-13-இல் 78,605 கோடி ரூபாயாக அதிகரித்தது. அரசு-தனியார் கூட்டு அடிப்படையில் (Public Private Partnership) தொடங்கப்பட்ட அடிக்கட்டுமான திட்டங்களில் தனியார் பங்களிப்பு என்பது பூஜ்யம்தான். அத்திட்டங்கள் அனைத்தும் வங்கிகளின் கடனைப் பெற்று உருவாக்கப்பட்ட அரசு திட்டங்கள்தான் என்கிறார், ரிசர்வ் வங்கியின் துணை கவர்னர் கே.சி.சக்கரவர்த்தி.

பொருளாதார வளர்ச்சி என்ற போர்வையில் கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு



வங்கிப் பணிகள் அவுட்சோர்சிங் முறையில் தனியார்மயமாக்கப்படுவதைக் கண்டித்து பொதுத்துறை வங்கி ஊழியர் சங்கம் டெல்லியிலுள்ள இந்திய அரசு வங்கியின் தலைமை அலுவலகத்தின் முன் நடத்திய ஆர்ப்பாட்டம். (கோப்புப் படம்)

வாரி வழங்கப்பட்ட இத்தகைய கடன்கள்தான் பொதுத்துறை வங்கிகளைப் பெரும் நெருக்கடிக்குள் தள்ளின. பொதுத்துறை வங்கிகளை நிதி நெருக்கடிக்குள் தள்ளியிருக்கும் வாராக் கடனில் பெரும் பகுதி ஒரு முப்பது நிறுவனங்களிடம் தேங்கியிருப்பதாக செப்.2013-இல் மையப் புலனாய்வு துறை வெளிப்படையாகக் குற்றஞ்சுமத்தியது. அரசியல் செல்வாக்குமிக்க கிங் ஃபிஷர் உள்ளிட்ட 406 நிறுவனங்கள் பொதுத்துறை வங்கிகளுக்குச் செலுத்த வேண்டிய கடன் நிலுவை 70,300 கோடி ரூபாயாகும் என அனைத்திந்திய வங்கி ஊழியர் சங்கம் கடந்த ஆண்டு அம்பலப்படுத்தியிருக்கிறது. 36 தனியார் அனல் மின்சார உற்பத்தியாளர்களுக்கு வழங்கப்பட்ட 2,09,000 கோடி ரூபாய் கடன் வசூலிக்க இயலாத சிக்கலில் இருப்பதாக கிரெடிட் சூயிஸ் என்ற ஏகாதிபத்திய தர மதிப்பீட்டு நிறுவனம் தெரிவித்திருக்கிறது.

இந்த வாராக் கடன்கள் ஒருபுறமிருக்க, கடனைக் கட்டாமல் ஏய்த்து வரும் தரகு முதலாளிகள் வாங்கிய கடனுக்கான வட்டியைத் தள்ளுபடி செய்து, கடன் தொகையிலும் ஒரு பகுதியைத் தள்ளுபடி செய்து, திருப்பிக் கட்டுவதற்கான தவணை முறைகளை நீட்டிப்புச் செய்து தரும் அயோக்கியத் தனத்தைக் கடன் மறுசீரமைப்பு என வங்கி நிர்வாகங்கள் அழைக்கின்றன. இவ்வாறு மறுசீரமைக்கப்பட்ட கடன்களின் பட்டியலை எடுத்துக் கொண்டால், அது இன்னொரு கொள்ளையாக விரிகிறது.

2008-இல் வெடித்த பொருளாதார நெருக்கடிக்குப் பிந்தைய ஐந்தாண்டுகளில் வாராக் கடன் பட்டியலுக்குள் கொண்டு வராமல் தந்திரமாக மறுசீரமைக்கப்பட்ட கடன் தொகை ஐந்து இலட்சம் கோடி ரூபாயாகும் என சி.பி.ஐ. குற்றஞ்சுமத்தியிருக்கிறது. அந்த ஐந்தாண்டுகளில் அரசுடமை வங்கிகளின் இலாபத்திலிருந்து 1.41 இலட்சம் கோடி ரூபாய் வாராக் கடனுக்காக ஒதுக்கப்பட்டு, கடன் தள்ளுபடி செய்யப்பட்டிருப்பதாக அம்பலப்படுத்தியிருக்கிறது, வங்கி ஊழியர் சங்கம்.

இப்படி பொதுத்துறை வங்கிகளில் உள்ள மக்களின் சேமிப்பை தொழில் கடன்கள் என்ற பெயரில் கொள்ளையடித்து, அதன் மூலம் தங்களின் சொத்து மதிப்புகளை உயர்த்திக் கொண்டுள்ள இந்தியத் தரகு முதலாளிகள் கும்பல், வாராக் கடனால் வங்கிகள் நொடித்துப் போயிருப்பதால், அவற்றைத் தனியார்மயமாக்கித் தங்களிடம் ஒப்படைக்குமாறு கோருகிறார்கள். இது மாட்டை இரண்டு முறை தோலுரிப்பதற்கு ஒப்பானது. இம்மாபாதகத்தைக் கச்சிதமாகவும் விரைவாகவும் முடித்துக் கொடுக்க முனைந்துள்ளது, மோடி அரசு.

தனது பொருளாதார ஆலோசகரான அரவிந்த் சுப்பிரமணியன் பொதுத்துறை வங்கிகளைச் சத்தமில்லாமல் தனியார்மயமாக்குவதற்கு என்ன வழியை முன்வைத்தாரோ, அதே வழியை, பொதுத்துறை வங்கிகளுக்கு ஒதுக்கப்படும் நிதியைக் கடுமையாக வெட்டுவதன் மூலம், போதுமான அளவிற்கு இலாபம் ஈட்டாத பொதுத்துறை வங்கிகளைச் சந்தையை நோக்கித் தள்ளிவிடும் (தனியார்மயமாக்கும்) முதல்கட்ட நடவடிக்கையைத் தொடங்கியிருக்கிறது, மோடி அரசு.

மன்மோகன் சிங் ஆட்சியிலும்கூடப் பொதுத்துறை வங்கிகளில் மறுமூலதனமிடுவதற்கு பட்ஜெட்டில் ஒதுக்கப்படும் நிதி வெட்டப்படுவது வாடிக்கையாக இருந்தாலும், மோடி ஆட்சியில் இந்த வெட்டு கடுமையாகியிருப்பதோடு, ‘திறமையாகச் செயல்படாத’ பொதுத்துறை வங்கிகளைத் தனியார்மயமாக்கும் சதித்தனத்தையும் உள்ளடக்கியதாகப் புதிய பரிணாமத்தை எட்டியிருக்கிறது. மோடி அரசின் முதல் பட்ஜெட்டில் (2014-15) பொதுத்துறை வங்கிகளில் மறுமூலதனமிடுவதற்கு 11,200 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்படுவதாக கணக்குக் காட்டப்பட்டது. இந்தத் தொகை அதற்கு முந்தைய பட்ஜெட்டைக் காட்டிலும் 2,800 கோடி ரூபாய் குறைவானது என்பது ஒருபுறமிருக்க, ஒதுக்கப்பட்ட நிதியும் பொதுத்துறை வங்கிகளுக்கு முழுமையாகத் தரப்படவில்லை. பட்ஜெட்டில் 11,200 கோடி ரூபாய் நிதி ஒதுக்குவதாக அறிவித்துவிட்டு, வெறும் 6,990 கோடி ரூபாய்தான் பொதுத்துறை வங்கிகளுக்குத் தரப்பட்டது. இந்த ஆண்டு பட்ஜெட்டிலோ, கடந்த பட்ஜெட்டில் ஒதுக்கப்பட்ட நிதியைவிட மிகக் குறைவாக 7,940 கோடி ரூபாய்தான் ஒதுக்கப்பட்டுள்ளது.

மோடி அரசுக்கு முந்தைய ஆட்சிக் காலங்களில் பொதுத்துறை வங்கிகளில் மறுமூலதனமிடுவதற்குக் குறைவாக நிதி ஒதுக்கப்பட்டாலும், அந்த நிதி அனைத்து வங்கிகளுக்கும் கிடைப்பதற்கு ஏற்றவாறு, அவற்றின் தேவை கணக்கில் கொள்ளப்பட்டு பகிர்ந்தளிக்கப்படும் நடைமுறை பின்பற்றப்பட்டது. ஆனால், மோடி அரசோ பொதுத்துறை வங்கிகளுக்கு நிதியைப் பகிர்ந்தளிப்பதற்கு அவற்றின் இலாபத்தை மையமாகக் கொண்ட புதிய விதியைப் புகுத்தியது. இந்த விதியும் கூட ஒரு நியாயமான முறையில் உருவாக்கப்படாமல், வாராக் கடனால் நெருக்கடிக்குள் சிக்கிக் கொண்டுள்ள வங்கிகளைப் புறக்

கணிக்கும் தீய நோக்கத்தின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த விதியின்படி 22 பொதுத்துறை வங்கிகளுள் 9 வங்கிகளுக்கு மட்டுமே மறுமூலதன நிதியைப் பெறும் தகுதியிருப்பதாகக் கூறப்பட்டு, மீதமுள்ள 13 வங்கிகளும் நட்டாற்றில் விடப்பட்டன.

அரசின் நிதி கிடைக்காத இந்த 13 வங்கிகளுள் ஏழு வங்கிகள் தங்களுக்குத் தேவையான மூலதனத்தைச் சந்தையிலிருந்து திரட்டிக் கொள்ள அனுமதித்திருப்பதன் மூலம், அவற்றைக் கொல்லைப்புற வழியில் தனியார்மயத்தை நோக்கித் தள்ளிவிட்டுள்ளது, மோடி அரசு. இப்படி அனுமதி அளிக்கப்பட்ட அதே சமயத்தில், ஏகாதிபத்திய தரநிர்ணய நிறுவனமான மூடி, சென்ட்ரல் வங்கி மற்றும் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி ஆகிய இரண்டும் மூலதனமிடுவதற்கு ஏற்றவையல்ல என அறிவித்திருக்கிறது. அரசும் நிதி ஒதுக்காது, சந்தையிலிருந்தும் நிதி திரட்ட முடியாது என்ற நிலையில் இந்த இரண்டு வங்கிகளும் தமது கடையை மூடிவிட்டு, வேறொரு பெரிய வங்கியோடு இணைய வேண்டிய கட்டாயத்திற்குள் தள்ளப்பட்டுள்ளன.

ஒருபுறம் வாராக் கடன் நெருக்கடி, இன்னொருபுறம் அரசின் நிதியுதவி மறுக்கப்படுவது என்ற இரட்டை இடியைப் பொதுத்துறை வங்கிகள் சந்தித்து வரும் இந்த நிலையில்தான், ஏகாதிபத்திய நாடுகளாலும் பன்னாட்டு வங்கிகளாலும் வரையறுக்கப்பட்டுள்ள ''பாசல் 3'' விதிகளை நிறைவேற்ற வேண்டிய கட்டாயத்தையும் பொதுத்துறை வங்கிகள் எதிர்கொண்டுள்ளன. ''பாசல் 3'' விதிகள் அமலுக்கு வரும்பொழுது இந்திய வங்கிச் சட்டங்கள் செல்லாக்காசாகிவிடும்.

வங்கிகள் வழங்கும் கடன்களின் மதிப்புக்கு ஏற்ற விகிதத்தில் அவற்றின் மூலதன/சொத்து மதிப்பு இருக்க வேண்டும் என வரையறுக்கிறது, ''பாசல் 3'' விதிகள். இதன் பொருள் கார்ப்பரேட் நிறுவனங்களுக்கும் புதிய பணக்கார நடுத்தர வர்க்கத்திற்கும் கடன்களை வாரிக் கொடுப்பதற்கு ஏற்றவாறு வங்கிகள் தமது மூலதனத்தைப் பெருக்கிக் கொள்ள வேண்டும் என்பது தவிர வேறல்ல. இதன்படி 2018-ஆம் ஆண்டுக்குள் மேலும் 2,40,000 கோடி ரூபாயை மூலதனமானத் திரட்டிக் கொள்ள வேண்டிய இக்கட்டை எதிர்கொண்டுள்ளன பொதுத்துறை வங்கிகள்.

அனைத்துப் பொதுத்துறை வங்கிகளையும் ஒரேவீச்சில் தனியார்மயத்தை நோக்கித் தள்ளிவிடுவதற்குக் கிடைத்த வாய்ப்பாக ''பாசல் 3'' விதிகளைப் பயன்படுத்திக்



உமி கொண்டுவந்தவன் அவல் தின்ற கதையாக அரசுப் பணத்தில் நவீனமான முறையில் சீரமைக்கப்பட்ட டெல்லி பாலம் சர்வதேச விமான நிலையம் ஜி.எம்.ஆர். என்ற தனியார் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டது.

கொள்ள முனைகிறது, மோடி அரசு. இந்தியத் தரகு முதலாளி வர்க்கம் செலுத்த வேண்டிய வாராக் கடன்களையும் மறுசீரமைக்கப்பட்ட கடன்களையும் வசூலித்தாலே பொதுத்துறை வங்கிகளின் மூலதனத் தேவையை ஈடுகட்டிவிட முடியும். ஆனால், அரசோ தரகு முதலாளிகள் மீது கைவைப்பதற்கு மாறாக, தன் வசமுள்ள பொதுத்துறை வங்கிகளின் பங்குகளைச் சந்தையில் விற்று ''பாசல் 3'' விதிகளை நிறைவேற்றத் திட்டமிடுகிறது.

மொத்தமுள்ள 27 பொதுத்துறை வங்கிகளுள் 22 பொதுத்துறை வங்கிகள் மைய அரசின் நேரடிக் கட்டுப்பாட்டிலும், 5 பொதுத்துறை வங்கிகள் இந்திய அரசு வங்கியின் (ஸ்டேட் பாங்கி ஆஃப் இந்தியா) கட்டுப்பாட்டிலும் உள்ளன. இந்த வங்கிகளில் 65 முதல் 80 சதவீதப் பங்குகள் மைய அரசு மற்றும் இந்திய அரசு வங்கிக்குச் சொந்தமாக உள்ளன. இதனைத் தடாலடியாக 52 சதவீதமாகக் குறைப்பதன் மூலம், 1,60,825 கோடி ரூபாயைச் சந்தையிலிருந்து திரட்டத் திட்டமிடும் மோடி அரசு, இது தொடர்பான அறிவிப்பையும் கடந்த டிசம்பரில் வெளியிட்டிருக்கிறது.

இதற்கு ஏற்ப பொதுத்துறை வங்கிகளின் தலைமைப் பதவிகளைத் தனியார்மய ஆதரவாளர்களைக் கொண்டு நிரப்பும் வேலையையும் தொடங்கிவிட்டது, மோடி அரசு. குறிப்பாக, பஞ்சாப் நேஷனல் வங்கி, பரோடா வங்கி, பேங்க் ஆஃப் இந்தியா, கனரா வங்கி மற்றும் இந்தியத் தொழில்வளர்ச்சி வங்கி ஆகியவற்றின் தலைமை நிர்வாக இயக்குநர் பதவிகளை நிரப்புவது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள வேலைவாய்ப்பு விளம்பரங்களில் கூறப்பட்டுள்ள தகுதிகள் பொதுத்துறை வங்கி அதிகாரிகளுக்குப் பொருந்தாதவாறு, கொட்டைபோட்ட பங்குச்சந்தை சூதாட்ட நிபுணர்களை, தனியார் வங்கியாளர்களை அப்பதவிகளில் உட்கார வைப்பதற்கு ஏற்றவாறு உருவாக்கப்பட்டுள்ளன.

விவசாய நிலங்களை அபகரிக்க நிலம் கையகப்படுத்தும் சட்டம், தொழிலாளர்களின் உரிமைகளைப் பறிக்க தொழிலாளர் சீர்திருத்த சட்டம் என்ற வரிசையில் பொதுமக்களின் சேமிப்புகளைத் தங்கு தடையின்றிச் சூறையாடப் பொதுத்துறை வங்கிகளை முற்றிலுமாகத் தனியார்மயமாக்க முயலுகிறது, மோடி அரசு. விவசாயிகளாலும், தொழிலாளர்களாலும், வங்கி ஊழியர்களாலும் கடுமையாக எதிர்க்கப்படும் இவற்றைத்தான் மோடி அரசு 'வளர்ச்சி' என அழைக்கிறது.

● செல்வம்

# பகற்கொள்ளைக்குப் பச்சைக் கொடி!

**ரயில்வே துறையைத் தனியார் முதலாளிகள் விழுங்குவதற்கும், இனி காசு உள்ளவனுக்கு மட்டுமே ரயில் என்று மாற்றவும் மாமா வேலை செய்கிறார் மோடி.**

குஜராத் முதல்வராக இருந்தபோது 2013 -இல் இந்தியா டுடே நடத்திய கருத்தரங்கில் பேசிய மோடி, ''அரசாங்கம் போட்ட சாலைகளில் தனியார் வாகனங்கள் போகும்போது, தனியார் விமானங்கள் அரசின் விமான நிலைய ஓடுபாதைகளில் பறக்கும்போது, ஏன் அரசாங்க தண்டவாளத்தில் தனியார் ரயில்கள் ஓடக்கூடாது?'' என்று தனியார்மயமாக்கலை வெறியோடு ஆதரித்துப் பேசினார். பிரதமரான பின்னர், மேகாலயாவில் கடந்த ஆண்டு நவம்பரில் நடந்த ரயில் சேவை தொடக்க விழாவில் பேசிய மோடி, ரயில்வே என்பது 'வளர்ச்சி'யின் வாகனம், ரயில் நிலையங்களைத் தனியாரிடம் கொடுத்து விமான நிலையங்களைப் போல நவீனப்படுத்த வேண்டுமென்றார். மோடியின் நோக்கமே காங்கிரசு அரசை விஞ்சும் வகையில் தனியார்மயமாக்கலைத் தீவிரமாக்குவதுதான்.

அந்த நோக்கத்துடன், நட்டத்தில் இயங்கும் ரயில்வே துறையை மேம்படுத்துவது பற்றி ஆராயப் போவதாக கூறிக்கொண்டு ஒரு குழுவை அமைத்தார். அந்தக் குழுவுக்கு பகவத் கீதை, இராமாயணம், மகாபாரதம் பற்றிய நூல்களை எழுதியுள்ள நம்பகமான இந்துத்துவ விசுவாசியும், தனியார்மய தாசரும், ரயில்வே வாரிய சீரமைப்பு ஆலோசனைக் குழுவின் தலைவராகவும் உள்ள விவேக் தேவராய் என்பவரைத் தலைவராக நியமித்தார். அந்தக் குழுவும் 'விரைவாக'ஆய்வு செய்து, மோடி என்ன எதிர்பார்த்தாரோ, அதன்படி அடுத்த 5 ஆண்டுகளுக்குள் ரயில்வேயை தனியார் முதலாளிகள் விழுங்குவதற்கான செயல் திட்டத்தைத் தமது பரிந்துரைகளாக கடந்த மார்ச் மாதத்தில் சமர்ப்பித்தது.

''பயணிகள் போக்குவரத்தையும் சரக்கு போக்குவரத்தையும் கொண்டுள்ள தற்போதைய ரயில்வே மண்டலங்களில், ஒன்றில் ஏற்படும் நட்டத்தை மற்றது ஈடு செய்து கொள்வதற்கு மாறாக, ரயில்வே மண்டலங்களைத் தனித்தனியாகப் பிரிக்க வேண்டும். எந்த மண்டலத்தில் நட்டம் அதிகமாக உள்ளதோ அதனை தனியாருக்கு விற்றுவிட வேண்டும். ரயில்வே துறையை உள்கட்டமைப்புக் கழகம், போக்குவரத்துக் கழகம் என்று இரண்டாகப் பிரிக்க வேண்டும். தண்டவாளங்கள் போடுவது, சிக்னல்களை நிர்வகிப்பது முதலானவற்றைக் கொண்ட உள் கட்டமைப்புக் கழகத்தை அரசு நிர்வகிக்க வேண்டும். போக்குவரத்துக் கழகத்தை தனியார் நிர்வகிக்க வேண்டும். ரயில்பெட்டிகள், என்ஜின்களைப் பராமரிக்கத் தனியாருக்கு அனுமதியளிக்க வேண்டும்.

தற்போது ரயில்வே துறை பராமரித்து வரும் ரயில்வே பள்ளிகள், மருத்துவமனைகள், ரயில்வே பாதுகாப்புப் படை முதலானவற்றைத் தனியாரிடம் ஒப்படைத்துவிட வேண்டும்.



இரயில்வேதுறையை தனியார் முதலாளிகள் விழுங்குவதற்குப் பரிந்துரைத்துள்ள தனியார்மய தாசரும், ரயில்வே வாரிய சீரமைப்பு ஆலோசனைக் குழுவின் தலைவருமான விவேக் தேவராய்

புறநகர் ரயில்கள் போன்ற அதிக இலாபமில்லாத ரயில் போக்குவரத்தை மாநில அரசுகளிடம் கொடுத்துவிட வேண்டும். பயணிகள் கட்டணத்தையும் சரக்கு ரயில் கட்டணத்தையும் நிர்ணயிப்பதில் அரசு தலையிடக் கூடாது. சந்தை நிலவரத்துக்கு ஏற்ப தனியார் நிறுவனங்களே கட்டணத்தை நிர்ணயித்துக் கொள்ள அனுமதிக்க வேண்டும்.

அடுத்த 4 ஆண்டுகளில் ஓய்வு பெறவுள்ள ஏறத்தாழ 2.25 லட்சம் தொழிலாளர்களுக்கு மாற்றாக புதிய தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்தக் கூடாது. அடுத்த ஆண்டிலிருந்து 7-வது ஊதியக்குழுவின் புதிய சம்பள விகிதங்கள் அமலுக்குவரும்போது ரயில்வே துறையில் கூடுதல் செலவாகும் என்பதால், ஏறத்தாழ 10 லட்சம் தொழிலாளர்களைக் குறைக்க வேண்டும். அவர்கள் செய்துவந்த பணிகளைத் தனியார் ஒப்

பந்த நிறுவனங்களின் பொறுப்பில் விட்டுவிட வேண்டும். தனியாருக்கும் ரயில்வே துறைக்கும் உள்ள பிரச்சினைகளையும் தாவாக்களையும் தீர்த்துக் கொள்ளவும், கட்டண நிர்ணயத்தைக் கண்காணிக்கவும் ஒழுங்குமுறை ஆணையத்தை உருவாக்க வேண்டும்’’

-என ரயில்வே துறையை தனியார் முதலாளிகள் விழுங்குவதற்கான திட்டத்தை, அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கான கால இலக்குடன் அறிக்கையாகக் கொடுத்துள்ளது இக்குழு.

அதாவது, ரயில் தண்டவாளங்களை அரசாங்கம் பராமரிக்க, தனியார் முதலாளிகள் அதில் ரயில் விடுவார்களாம். பொதுச் சொத்தில் மஞ்சள் குளிப்பார்களாம்! இப்பரிந்துரைகளைச் செயல்படுத்தினால், தற்போது பல தடங்களில் இயக்கப்பட்டு வரும் ரயில்களால் லாபமில்லை என்று நிறுத்தப்படும். வருமானம் அதிகமுள்ள பெரு நகரங்களுக்கு மட்டும் கூடுதல் கட்டணத்துடன் அம்பானி ரயில், அதானி ரயில்கள் சென்ட் மணக்க பளபளப்பாக இயக்கப்படும். சிறு நகரங்களுக்கும் ஊரகப் பகுதிகளுக்கும் செல்லும் ரயில்களும், சாமானிய மக்கள் பயன்படுத்தும் முன்பதிவில்லா இரண்டாம் வகுப்புப் பெட்டிகளும் ஒழிக்கப்படும்.

நட்டம் அதிகமாக உள்ள ரயில்வே மண்டலங்கள் தனியாருக்குத் தாரை வார்க்கப்பட்டு, கோடிக்கணக்கிலான ரயில்வே சொத்துக்கள் பறிபோகும். ஒழுங்குமுறை ஆணையத்தின் மூலம் ஏற்கெனவே பொதுத்துறை நிறுவனமான தொலைத்தொடர்புத்துறை முடமாக்கப்பட்டதைப் போல, ரயில்வே துறையும் முடமாக்கப்படும். இலட்சக்கணக்கான தொழிலாளர்களின் வேலை பறிபோகும். ஒப்பந்த சேவை அடிப்படையில் அற்பக் கூலிக்கு தொழிலாளர்கள் சுரண்டப்படுவார்கள். சீசனுக்கு ஏற்பவும், கிராக்கிக்கு ஏற்பவும் சாதாரண ரயில்களிலும் கட்டணங்கள் அதிகரிக்கப்படும். இதனால் காசு உள்ளவனுக்கு மட்டுமே ரயில் என்று மாற்றப்படும்.

இருப்பினும், முதலீடுகள் அதிகரிப்பதன் மூலம் ரயில்வே துறையை லாபகரமானதாக்கி, ‘வளர்ச்சி’யைச் சாதிக்க தனியார்மயம் அவசியம் என்று இதனை மோடி நியாயப்படுத்துகிறார். பேருந்துகளை வாங்கி தனியார் முதலாளிகள் இயக்குவதைப் போல, மூலதன அழுத்தமும் குறைவான லாபமும் கொண்ட ரயில்களை தனியார் முதலாளிகள் வாங்கி இயக்குவதற்கு மடியில் பணத்தைக் கட்டிக் கொண்டு தயாராக இருப்பதைப் போல பல திட்டங்களை மோடி கும்பல் அறிவித்த போதிலும் யாரும் முதலீடு செய்ய வரவில்லை. அரசாங்கம் தொலைபேசி இணைப்பை ஏற்படுத்திக் கொடுத்தால், அதில் நான் டெலிபோன் கனெக்ஷன் கொடுக்கிறேன் என்று தனியார் தொலைபேசி நிறுவனங்கள் பொதுச் சொத்தில் மஞ்சள் குளித்ததைப் போல, அரசாங்கம் தண்டவாளம் போட்டு, ரயிலையும் கொடுத்தால் நான் அதிக கட்டணத்துக்கு அந்த ரயிலை ஓட்டுவேன் என்கிறார்கள் தனியார் முதலாளிகள். இதற்கு மாமா வேலை செய்கிறார் மோடி.

இந்திய ரயில்களில் அன்றாடம் 2.30 கோடி மக்கள் பயணிக்கின்றனர். பேருந்து போக்குவரத்தை விட, ரயில் போக்குவரத்துதான் மலிவானது, வசதியானது என்று சாமானிய மக்களும் நடுத்தர வர்க்கத்தினரும் பெரிதும் பயன்படுத்தி வருகின்றனர். ஏற்கெனவே சாமானிய மக்கள் பயன்படுத்தும் முன்பதிவு செய்யப்படாத ரயில்பெட்டிகளை அதிகரிப்பதற்கு மாறாக ஏ.சி., பெட்டிகளின் எண்ணிக்கையை அதிகரிப்பது, தூங்கும் வசதி கொண்ட இரண்டாம் வகுப்பு ரயில் பெட்டிகளின் எண்ணிக்கையைக் குறைப்பது, பாசஞ்சர் ரயிலை எக்ஸ்பிரஸ் ரயிலாக்குவது, எக்ஸ்பிரஸ் ரயிலை சூப்பர் பாஸ்ட் ஆக்குவது, பயணிகள் ரயில் கட்டண அதிகரிப்பு, தட்கல் திட்டத்தில் மாற்றம், பிரீமியம் ரயில், பிளாட்பார டிக்கெட் கட்டண அதிகரிப்பு - என அடுத்தடுத்து தாக்குதலை ஏவியது போதாதென்று, இனிமேல் ரயில்களை இத்தகையோர் பயன்படுத்தவே கூடாது என்று வர்க்கவெறியுடன் ரயில்வே துறையை தனியார்மயமாக்கக் கிளம்பியுள்ளது மோடி அரசு. தனியார் முதலாளிகளுக்கு இலாப உத்திரவாதம் வேண்டுமென்பதால், பணக்காரர்கள் மட்டுமே பயன்படுத்தக் கூடியதாக பயணிகள் ரயில்களை மாற்றுவது என்பதே மோடியின் திட்டம். இப்போது சென்னையில் தொடங்கப்பட்டுள்ள பளபளப்பான குளுகுளு மெட்ரோ ரயிலின் அநியாயக் கட்டணத்தால், அதில் யாரும் பயணிக்க முடியாமல் வேடிக்கை பார்க்கத்தான் முடிகிறது. அதேபோல அனைத்து ரயில்களையும் மாற்றுவதுதான் மோடியின் நோக்கம்.



குறைந்த எண்ணிக்கையிலான தொழிலாளரைக் கொண்டு அதிக லாபத்தை ஈட்டுவதுதான் தனியார் முதலாளிகளின் நோக்கமாக உள்ளபோது, தனியார்மயத்தால்

சேவை அதிகரிக்கும் என்பது வடிகட்டிய பொய். இந்திய ரயில்வேயில், ரயில் பெட்டிகளையும், பெட்டிகளிலுள்ள கழிப்பறைகளையும் சுத்தப்படுத்துவது, ரயில் பயணத்தில் உணவு தயாரித்து பரிமாறுவது, ரயில் நிலைய கழிவறைகளைப் பராமரிப்பது முதலானவை ஏற்கெனவே தனியாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. தனியார் என்றால் நிர்வாகம் சிறப்பாக இருக்கும்; தனியார்மயம் என்றால் சேவை நன்றாக இருக்கும் என்ற பொய்யை ரயில் பெட்டிகளின் கழிப்பறைகளே நாறடித்துக் கொண்டிருக்கின்றன.

பிரிட்டனில் 1990-களில் ரயில்வேதுறை தனியார்மயமாக்கப்பட்ட பின்னர் ஏற்பட்ட விளைவுகள் குறித்து அரசியல் பொருளாதார நிபுணர்களால் ஆய்வு செய்யப்பட்டு 2013-ஆம் ஆண்டில் ''சமூக கலாச்சார மாற்றம் குறித்த ஆய்வு மையம்'' என்ற அமைப்பால் அறிக்கையாக வெளியிடப்பட்டது. ''தி கிரேட் டிரெயின் ராபரி'' (மாபெரும் ரயில் கொள்ளை) என்று தலைப்பிட்டு, தனியார்மயதாசர்களின் முகத்தில் காறி உமிழாத குறையாக, தனியார்மயத்தால் சேவை அதிகரிக்கவில்லை, கட்டணக் கொள்ளைதான் தீவிரமாகியுள்ளது என்று அந்த அறிக்கை அம்பலப்படுத்திக் காட்டியுள்ளது.

இருப்பினும், இலட்சக்கணக்கானோருக்கு வேலைவாய்ப்பளித்து, கோடிக்கணக்கான சொத்துக்களுடன் அடிக்கட்டுமான வசதிகளைக் கொண்டுள்ள நாட்டின் முதுகெலும்பான ரயில்வே துறையை, நாட்டுக்கும் மக்களுக்கும் சேவைசெய்யும் மிகப் பெரிய பொதுத்துறை நிறுவனத்தை, மக்களின் வாழ்வோடு நெருக்கமான பிணைப்பைக் கொண்ட ரயில்வே துறையைத் தனியார் முதலாளிகள் விழுங்கி ஏப்பம் விடுவதற்காக அத்துறையைத் தனியார்மயமாக்க வெறியோடு அலைகிறது மோடி கும்பல். இந்த அநியாயத்தையும் பேரழிவையும் நாம் இன்னமும் சகித்துக் கொண்டிருக்கத்தான் முடியுமா?

● மனோகரன்



# "ஆகா... அரசுப் பள்ளி! ஐயோ... தனியார் பள்ளி!"

**- கல்வியில் தனியார்மயத்தை ஒழிக்கக் கோரும் கல்வியுரிமை மாநாட்டின் அறைகூவல்!**

கடந்த ஐந்தாண்டுகளுக்கு முன்பு தனியார் பள்ளிகளின் கட்டணக் கொள்ளைக்கு எதிராகத் தமிழகமெங்கும் பல்வேறு இடங்களில் பெற்றோர்கள் தன்னிச்சையான முறையில் போராடி வந்த சமயத்தில், கடலூர் மாவட்டத்தில் புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணியும், மக்கள் உரிமைப் பாதுகாப்பு மையமும் போராடிய பெற்றோர்களுக்கும் மாணவர்களுக்கும் ஆதரவு தெரிவித்து களத்தில் நின்றன. இந்தப் போராட்டங்களின் ஊடாகவும், மக்கள் உரிமைப் பாதுகாப்பு மையத்தின் முன்முயற்சியின் காரணமாகவும் அம்மாவட்டத்தில் கல்வி உரிமைக்கான பெற்றோர் - மாணவர் சங்கம் உருவாக்கப்பட்டது.

இந்த சங்கம் தனியார் பள்ளிகளின் கட்டணக் கொள்ளை, சட்டவிரோத அடாவடித்தனங்களை எதிர்த்து அடுத்தடுத்து பல்வேறு போராட்டங்களை எடுத்ததோடு, சமச்சீர் கல்வி திட்டத்தை ஜெயா அரசு ரத்து செய்ததை எதிர்த்தும் போராடியது. இப்போராட்டங்களின் தொடர்ச்சியாக, அரசுப் பள்ளிகளில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறை உள்ளிட்ட அடிப்படை வசதிகளைச் செய்துதரக் கோரி கல்வித்துறை அதிகாரிகளை நிர்ப்பந்திக்கும் வகையிலான போராட்டங்களை முன்னெடுத்தது. இப்போராட்டங்கள் அனைத்தும் கல்வியில் தனியார்மயம் புகுத்தப்பட்டிருப்பது சமூகத்திற்குக் கேடானது; அதனை ஒழிக்காமல் மாணவர்களின் கல்வியுரிமையை மீட்டெடுக்க முடியாது என்ற உண்மையை உணர்த்தும் விதத்தில் நடத்தப்பட்டன.

இப்போராட்டங்களின் ஒரு பகுதியாக கல்வியில் தனியார்மயத்தை ஒழிக்கக் கோரும் கல்வியுரிமை மாநாடு கடந்த நான்காண்டுகளாகத் தொடர்ந்து விருத்தாசலத்தில் நடத்தப்பட்டது. இந்தக் கல்வியாண்டின் தொடக்கத்தில் மாணவர்களின் கல்வியுரிமையை உறுதி செய்யும் விதத்திலும், அரசுப் பள்ளிகளின் அவசியத்தை வலியுறுத்தியும், அரசுப் பள்ளிகளில் மாணவர்களைச் சேர்க்கக் கோரும் பிரச்சார இயக்கத்தை விருத்தாசலம் பகுதியில் மக்கள் உரிமைப் பாதுகாப்பு மையமும் கல்வி உரிமைக்கான பெற்றோர் மாணவர் சங்கமும்




இணைந்து நடத்தின. கடந்த மே மாதம் நடத்தப்பட்ட இப்பிரச்சார இயக்கத்தின் தொடர்ச்சியாக ''ஆகா . . . அரசுப் பள்ளி! ஐயோ. . . தனியார் பள்ளி?'' என்ற தலைப்பில் ஐந்தாவது கல்வி தனியார்மய ஒழிப்பு மாநாடு ஜூன் 13 அன்று விருத்தாசலம், வானொலித் திடலில் நடத்தப்பட்டது.

விருத்தாச்சலம் கொளஞ்சியப்பர் அரசு கலைக் கல்லூரியிலிருந்து தப்பாட்டம் முழங்க தொடங்கிய பேரணியில், தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களி லிருந்து வந்திருந்த மக்கள் உரிமைப் பாதுகாப்பு மைய உறுப்பினர்களும், புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணியைச் சார்ந்த தோழர்களும், பள்ளி மாணவர் களும் பங்கேற்றனர்.

இப்பேரணி முடிந்து நடந்த மாநாட்டில் சிறப்புரை யாற்றிய மக்கள் கலை இலக்கியக் கழகத்தைச் சேர்ந்த தோழர் துரை சண்முகம், ''கல்வியை பற்றி பேசு கிறோம் என்றாலே, இந்தச் சமூகத்தைப் பற்றி பேசு கிறோம் என்று பொருள். கிரானைட் மாஃபியா, மணல் மாஃபியா போல, கல்வியையும் கொள்ளையடிப்பதற் கான ஒரு பண்டமாக மாற்றியிருக்கும் தனியார் பள்ளி முதலாளிகள் என்ற மாஃபியா கும்பலிடமிருந்து கல்வியையும் நம் பிள்ளைகளையும் மீட்டெடுப்பது அவசியம்'' என வலியுறுத்தினார்.

''10-ஆம் வகுப்பில் 400 மதிப்பெண்கள் எடுத்தால் தனியார் பள்ளியில் சேர்ந்து படிக்க ரூ.30,000 தருவ தாக அரசே கூறுகிறது. இதன் மூலம் அரசுப் பள்ளிகள் தரமற்றது என்ற பிரச்சாரத்தை அரசே திட்டமிட்டுச் செய்கிறது. ஒவ்வொரு தனியார் பள்ளியையும் நடத்து பவர்கள் ஓய்வு பெற்ற அதிகாரிகளும், ஆட்சியாளர் களும், அதிகார வர்க்கமும்தான். அதனால்தான் அரசோடு இணைந்து திட்டமிட்டு அரசு பள்ளிகளை முடக்க எல்லா காரியங்களையும் செய்கிறார்கள்'' எனக் குறிப்பிட்டு, தனியார் பள்ளிகளின் ஏஜெண்டாக அரசு மாறியிருப்பதை அம்பலப்படுத்தினார் முது கலைப் பட்டதாரி ஆசிரியர் சங்கத்தை சேர்ந்த ந.குணசேகரன்.

''அரசுப் பள்ளிகளையும், அரசு உதவி பெறும் பள்ளி களையும் கண்காணிக்க உதவி தொடக்க அலுவலர் களும், கூடுதல் உதவி தொடக்க கல்வி அலுவலர் களும் இருக்கிறார்கள். ஆனால், தனியார் பள்ளிகளைக் கண்காணிப்பதற்கு ஆளே கிடையாது. இவற்றை யெல்லாம் தடுக்கவேண்டுமென்றால், தனியார் பள்ளி களை அரசே ஏற்று நடத்தவேண்டும். அதற்கு பெற்றோர்கள் ஒருங்கிணைந்து போராடவேண்டும்'' என்றார் ஓய்வு பெற்ற உதவி தொடக்க கல்வி அலுவலர் கோ.சீனுவாசன்.

இடைநிலைப் பட்டதாரி ஆசிரியர் சங்கத்தின் மாநில சிறப்புத் தலைவர் கோ.செல்வராஜ், புலவர் சிவ ராமசேது, மருத்துவர் வள்ளுவன், பு.மா.இ.மு.வைச் சேர்ந்த முருகானந்தம், மக்கள் உரிமைப் பாதுகாப்பு மையத்தின் ஒருங்கிணைப்பாளர் வழக்குரைஞர் ராஜு, வழக்குரைஞர் மீனாட்சி மற்றும் வழக்குரைஞர் புஷ்ப தேவன் ஆகியோரும் மாநாட்டில் பங்கேற்று உரை யாற்றினர்.

அரசு மற்றும் தனியார் பள்ளிகளில் பயிலும் மாணவர்களையும் பெற்றோர்களையும் ஈர்த்திருந்த இம்மாநாடு, ''தனியார் கல்விக் கொள்ளையைக் கட்டுப்படுத்திவிடலாம் என நம்பிக் கொண்டிருப்பது பேதமையானது. கல்வி தனியார்மயமாக்கப்படுவதை ஒழித்துக் கட்டுவதுதான் இதற்குத் தீர்வு. அரசுப் பள்ளி கள்தான் இதற்கு ஒரே மாற்று. அரசுப் பள்ளிகளை வலுப்படுத்துவதன் வாயிலாகவே கல்வி தனியார்ம யத்தை ஒழித்துக் கட்ட முடியும். இதை நாம்தான் - பெற்றோர்களும், மாணவர்களும், ஜனநாயக சக்தி களும் இணைந்துதான் செய்யமுடியுமே தவிர, அரசிடம் மயிலே மயிலே இறகு போடு எனக் கெஞ்சிக் கொண்டிருந்தால் நடவாது. சாராயக் கடைகளை நடத்தி தமிழ்ச் சமூகத்தைச் சீரழித்துவரும் தமிழக அர சிடம் அறத்தை எதிர்பார்க்க முடியாது'' என்பதை வலியுறுத்தும் விதத்தில் அமைந்தது.

— கல்வி உரிமைக்கான பெற்றோர் - மாணவர் சங்கம்,
கடலூர் மாவட்டம்.

# “நம்ம கை உசரணும், முதலாளி கை கீழே போகணும்!”

## குட்டக் குட்ட குனிந்து கொண்டிருந்த கோவை- சி.ஆர்.ஐ. தொழிலாளர்களின் வர்க்க சீற்றம்.

‘‘சட்டவிரோதக் கதவடைப்பை நீக்கு! இல்லையேல் குடும்பத்தோடு எங்களைச் சிறையிலடை!!’’ என்ற கோரிக்கையுடன், கடந்த மார்ச்-26ஆம் தேதி தொடங்கி 90 நாட்களுக்கும் மேலாக உறுதியான போராட்டத்தை தொடர்ந்து வருகின்றனர், கோவை சி.ஆர்.ஐ. பம்ப் நிறுவனத்தின் தொழிலாளர்கள்.

கோவை - சின்னவேடம்பட்டி, சி.ஆர்.ஐ. நிறுவனக் கிளை ஆலை கதவடைப்பு செய்யப்பட்டிருக்கிறது. 1987-இல் இராஜேந்திரா இண்டஸ்ட்ரீஸ் என்ற பெயரில் குடிசைத் தொழிலாகத் தொடங்கப்பட்ட சி.ஆர்.ஐ., இன்று கோவை மாவட்டத்தில் ஆறு கிளைகள், சீனாவில் ஒரு கிளை என்று வளர்ந்திருக்கிறது. இந்நிறுவனத்தால் உற்பத்தி செய்யப்படும் விவசாயம், தொழிற்சாலை மற்றும் வீட்டு உபயோகத்திற்கான நீரிறைக்கும் இயந்திரங்கள் உள்நாட்டில் மட்டுமின்றி, 120 நாடுகளுக்கு ஏற்றுமதியாகின்றன. இன்று இந்நிறுவனத்தின் ஆண்டு வணிகம் ரூ.1100 கோடி.

சின்னவேடம்பட்டி கிளையில் பணியாற்றும் 160 பேரில் 50 பேர்தான் நிரந்தர தொழிலாளர்கள். மற்றவர்கள் தற்காலிக தொழிலாளர்கள். 5 முதல் பத்தாண்டுகளுக்கும் மேலாக, தற்காலிகத் தொழிலாளர்களாகவே பணிபுரியும் இவர்களது அதிகபட்ச சம்பளம் 6000 ரூபாய். முதலாளி சவுந்திரராஜன் சைக்கிளை உருட்டிக் கொண்டு கம்பெனிக்கு வந்துகொண்டிருந்த காலத்திலிருந்தே உழைத்து வரும் இத்தொழிலாளர்கள்தான் இன்று நடுத்தெருவில் நிறுத்தப்பட்டிருக்கிறார்கள்.

தொழிலாளர்களை வெளியேற்றுவதற்கான முயற்சியை 2012-இலேயே தொடங்கி விட்டார் சி.ஆர்.ஐ. முதலாளி. ‘‘ஒப்பந்தத் தொழிலாளியாக மாறிக் கொள்ளுங்கள். உங்களுக்கு இ.எஸ்.ஐ., பி.எஃப். வசதிகளை இனி வழங்கமுடியாது’’ என்று திமிராக அறிவித்தார். 20 ஆண்டுகளுக்கும் மேலாக உழைத்த தொழிலாளர்களைச் சக்கையைப் போல வீசியெறிந்துவிட்டு, அவர்களைவிடக் குறைவான கூலிக்கு வடமாநிலத் தொழிலாளர்களை அமர்த்திக்கொள்வதே சவுந்திரராஜனின் திட்டம். சி.ஆர்.ஐ.யின் மற்றக் கிளைகளிலெல்லாம் வடமாநிலத் தொழிலாளர்கள் நிரப்பப்பட்டு விட்டனர்.

முதலாளியின் பேச்சை நம்பி சங்கம் கூடத் தொடங்காமல் 25 ஆண்டுகாலம் விசுவாசமாக உழைத்த தொழிலாளிகள், இதன் பின்னர்தான் பு.ஜ.தொ.மு. சங்கத்தை தொடங்கினர். பணிநிரந்தரம் உள்ளிட்ட உரிமைகளுக்காக சங்கம் போராடத் தொடங்கியது.

பணி நிரந்தரத்துக்காக பு.ஜ.தொ.மு. நடத்திய போராட்டத்தின் விளைவாக, 20 ஆண்டுகளுக்கும் மேலாகப் பணிபுரியும் 31 தொழிலாளர்களை நிரந்தரமாக்க வேண்டுமென்று தொழிலாளர் நல ஆய்வாளர் உத்தரவிட வேண்டியதாயிற்று. உடனே, உயர் நீதிமன்றத்துக்குச் சென்ற சி.ஆர்.ஐ. முதலாளி, நீதிபதி கர்ணனிடம் இதற்கு இடைக்காலத் தடை வாங்கினார்.

சங்கம் தொடங்கியதற்காக, தொழிலாளர்களைத் தொடர்ந்து பழிவாங்கும் நிர்வாகத்தின் அடாவடித்தனங்கள், நட்டம் என்று பொய்க்கணக்கு காட்டுவது போன்ற தில்லுமுல்லுகளை தொழிலாளர் துறை ஆணையர் முன் ஆதாரங்களுடன் பு.ஜ.தொ.மு. அம்பலப்படுத்தியது. சி.ஆர்.ஐ நிர்வாகமோ வாய்தாவுக்கு வராமல் இழுத்தடித்தது. தொழிலாளர்துறை முதல் நீதிமன்றம் வரை அனைத்தையும் விலைக்கு வாங்க முடிந்த போதிலும், அடிமைகளாக நடந்து கொள்ள வேண்டிய தொழிலாளர்கள் தன்னை எதிர்த்துக் கேள்வி கேட்பதை சவுந்திரராஜனால் சகிக்க முடியவில்லை.

எனவே, தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு அதுவரை வழங்கப்பட்டு வந்த கல்வி உதவித்தொகை, சங்க உறுப்பினர்களின் பிள்ளைகளுக்கு மறுக்கப்பட்டது. 8 மணி நேரத்தில் முடிக்கக்கூடிய வேலையை 4 மணிநேரத்தில் செய்து முடித்துத் தருமாறு நிர்ப்பந்திப்பது, இலக்கை எட்டவில்லை என்று கூறி சம்பளத்தில் பிடித்தம் செய்வது, பரிச்சயமில்லாத துறைகளுக்கு தொழிலாளர்களைப் பந்தாடுவது, சட்டப்படியான விடுமுறையைக் கூடத் தர மறுப்பது - என்று பல வடிவங்களில் சங்கத்தின் மீது தாக்குதல் தொடுத்தது நிர்வாகம். வக்கிரத்தின் உச்சமாக மற்ற கிளைகளில் 30% போனஸ், சின்னவேடம்பட்டி கிளைக்கு மட்டும் 8.33% தான் என்று அறிவித்தார் சவுந்திரராஜன். கோட்டு சூட்டு போட்டுக்கொண்டு மிடுக்காக உலக நாடுகளைச் சுற்றி வந்தாலும், முதலாளி சவுந்திரராஜனின் புத்தி பண்ணையார்த்தனமும் தெள்ளவாரித்தனமும் கலந்தது. தொழிலாளர்களோ சுயமரியாதை உணர்வும் புத்திக்கூர்மையும் நிறைந்தவர்கள். சங்கத்தை ஒழிப்பதாக எண்ணிக்கொண்டு ஆலைவாயிலில் வைக்கப்பட்டிருந்த அறிவிப்புப் பலகையை ஆள்வைத்து திருடிப் பார்த்தார் சவுந்திரராஜன். அப்புறம் கொடிக்கம்பத்தை பிடுங்கிப் போட்டார். கடைசியாக, சங்கத்தைக் கலைத்தால் போனஸ்,






கல்வி உதவித்தொகை என்று தொழிலாளிகளுக்கு ஆசை காட்டியும் பார்த்தார். எதுவும் பலிக்கவில்லை.

தொடர்ச்சியான பழிவாங்கும் நடவடிக்கைகளை எதிர்த்து, வேலைநிறுத்தம் செய்யப்போவதாக தொழிலாளர்கள் அறிவித்த உடனே, கதவடைப்பு செய்து விட்டு, காண்டிராக்டில் தயாரித்த தரமற்ற பம்புகளில் சி.ஆர்.ஐ. என்று முத்திரை குத்தி விற்கத் தொடங்கினார் சவுந்தரராஜன். போலி சி.ஆர்.ஐ. பம்புகளை வாங்காதீர் என்று இந்த பித்தலாட்டத்தை அம்பலப்படுத்தினர் தொழிலாளர்கள்.

இது சட்டவிரோதமான கதவடைப்புதான் என்று தொழிலாளர் நல ஆணையர் ஒப்புக்கொள்ள வேண்டியதாயிற்று. இருந்தபோதிலும், முதலாளிக்கு எதிராக ஒரு துரும்பைக்கூட அசைக்கவில்லை அரசு. ''முதலாளி தமது மகளின் திருமண வேலைகளில் மும்மரமாக இருப்பதால் பேச்சுவார்த்தைக்கு வர முடியாது'' என்று சி.ஆர்.ஐ. நிர்வாகம் திமிராக அறிவித்தது. அதுவரை வயிற்றில் ஈரத்துணிகட்டி காத்திருக்குமாறு கூறுகிறது அதிகார வர்க்கம்.

இப்படி தொழிலாளிகளின் தாலி அறுத்து, மகளுக்கு ஆயிரம் பவுன் போட்டுத் திருமணம் நடத்தும் சி.ஆர்.ஐ. முதலாளியின் வக்கிரத்தை திருமண முகூர்த்தம் நடைபெறும் சவுந்திரராஜனின் கிராமம் முழுவதும் பிரச்சாரம் செய்து மதிப்பிழக்கச் செய்தனர் தொழிலாளர்கள். ஜூன் 12 அன்று திருமண வரவேற்பு நடைபெறும் கோவை கொடிசியா அரங்கின் வாசலில், சவுந்தரராஜனால் கொலை செய்யப்பட்ட சி.ஆர்.ஐ. கம்பெனியைச் சங்கு ஊதி சேகண்டி அடித்துப் பாடையில் கொண்டு செல்வோம் என்று அறிவித்து, அந்தப் பாடை தூக்கும் விழாவுக்கு சவுந்திரராஜனின் வீட்டிற்கே சென்று பத்திரிகையும் வைத்தனர்.

இந்நடவடிக்கைகளால் பீதியடைந்தார் சவுந்திரராஜன். உடனே, மூன்று மாதங்களாகத் தூங்கிக் கொண்டிருந்த அரசு எந்திரம் துள்ளி எழுந்தது. ஜெயலலிதா பதவியேற்பைக் கண்டித்து மே 22-ஆம் தேதி ஒட்டிய சுவரொட்டியைக் காரணம் காட்டி, ஜூன் 10 அன்று பு.ஜ.தொ.மு.வின் மாநில துணைத் தலைவர் விளவை இராமசாமியையும் அவரது மகனும் பு.மா.இ.மு. மாவட்ட செயற்குழு உறுப்பினருமான திலீபனையும் கைது செய்தது போலீசு. இராமசாமி பிணையில் வந்தவுடன் மீண்டும் பொய்வழக்குப் போட்டு சிறையில் அடைக்கப்பட்டார். அவரைக் குண்டர் சட்டத்தில் சிறைவைப்பதே அரசின் திட்டம்.

இதுவன்றி, 5 சங்க முன்னணியாளர்கள், போராட்டப் பந்தலில் சமையல் செய்து கொண்டிருந்த தொழிலாளிகள் போன்றோர் மீதும் பொய்வழக்கு போடப்பட்டு சிறை வைக்கப்பட்டனர். தொழிலாளர் குடும்பத்தினர் மிரட்டப்பட்டனர். போலீசு ஆய்வாளர் ஜோதியும் சரவணம்பட்டி போலீசும் சவுந்திரராஜனிடம் கவ்விய காசுக்கு அதிகமாகவே குரைத்தனர்.

ஜூன் 12 அன்று திருமண வரவேற்பு நடந்த கொடிசியா அரங்கைச் சுற்றி மூன்றடுக்கு பாதுகாப்பு. கல்யாணக் கறி சோறுக்காக போலீசு காத்து நிற்க, பசிக்கும் பட்டினிக்கும் பணிந்துவிடாத தொழிலாளர்கள், திட்டமிட்டவாறு காந்திபுரம் பேருந்து நிலையத்தில் போராட்டத்தில் ஈடுபட்டனர். கைது செய்யப்பட்ட தொழிலாளிகளின் தாய்மார்களும் மனைவிமார்களும் சிறை செல்ல அஞ்சவில்லை. பேச்சுவார்த்தைக்கு வந்த அதிகாரிகளைக் கேள்விகளால் துளைத்தெடுத்தனர்.

''பதினோரு வருசம் மண்டி போட்டாச்சு. இனிமே நம்ம கைதான் உசர இருக்கணும். முதலாளி கை கீழத்தான் போகணும்'' என்று ஆவேசமாகச் சொன்னார் ஒரு தொழிலாளியின் தாய். ஊதிய உயர்வு, போனசு என்ற கோரிக்கைகளின் வரம்பைத் தாண்டி, சி.ஆர்.ஐ. என்ற ஒரு நிறுவனத்தின் முதலாளிக்கெதிரான போராட்டம் என்ற எல்லையையும் தாண்டி, அந்தத் தாயின் குரலில் ஒலிப்பது தொழிலாளி வர்க்கத்தின் நெஞ்சில் கனன்று கொண்டிருக்கும் வேட்கையல்லவா!

— பு.ஜ.தொ.மு., கோவை.

## அரசு:

3


# அனைவருக்கும் பொதுவானதோ, ஜனநாயகமானதோ அல்ல!

அரசியல்வாதிகளும், முதலாளிகளும் இணைந்த ஒரு ஒட்டுவகைப் (ஒட்டு மாங்காய் போல) பிரிவினர் தான் இன்று கட்சிகளையும் அரசுகளையும் ஆள்கிறார்கள்; நிர்வகிக்கிறார்கள். இதன் விளைவாக அரசு சொத்துக்களையும், அரசு கஜானாவையும், நாட்டின் இயற்கை வளங்களையும் கார்ப்பரேட் முதலாளிகள் சட்டபூர்வமாகவே, கொள்கை முடிவுகளின்படியே பகற்கொள்ளையடிப்பது அதிகரித்து வருவதோடு, இவர்களின் வரி ஏய்ப்பு, தில்லுமுல்லுகளும் அதிகரித்துள்ளன. இவற்றில் புதுப்புது நுட்பங்களும் புகுத்தப்பட்டுள்ளன. இந்த வழிமுறைகளில் ஈட்டப்படும் கருப்பு பணமும் பன்மடங்கு பெருகிவிட்டது. அவற்றை வெளிநாடுகளுக்குக் கடத்தும் ஹசன் அலி போன்ற ஹவாலா ஏஜெண்டுகளும், நீரா ராடியா போன்ற அரசியல் தொழில் புரோக்கர்களும், அவர்களின் செல்வாக்கும் அதிகார பலமும் பன்மடங்கு அதிகரித்துள்ளன.

ஹசன் அலி ஒரு நபர் அல்ல; அவனுக்குப் பின்னால் கார்ப்பரேட் முதலாளிகள், மத்திய-மாநில அமைச்சர்கள், தேசியக் கட்சிகளின் பெருந்தலைவர்கள், உயர்மட்ட அதிகாரிகள், நீதிபதிகள், ஆயுதக் கடத்தல்-போதை மருந்து கடத்தல் கும்பல்கள் ஆகியவர்கள் உள்ளனர். அவன் மீது கைவைத்தால் இந்த அத்தனை சக்திகளையும் எதிர்த்து நிற்க வேண்டும்; ஹசன் அலியும் அவனது கூட்டாளிகளும் ஏறத்தாழ 2,000 கோடி ரூபாய் வரி ஏய்ப்பு செய்துள்ளனர். அவன் தாவூத் இப்ராஹிமுடனும் ஆயுதக் கடத்தல் பேர்வழி ஆதனன் கஷோகியுடனும் தொடர்பு வைத்துள்ளான். 35,000 கோடி ரூபாய்களை ஹவாலா வழிமுறை மூலம் (அதாவது சட்டவிரோதமான பணப் பரிமாற்றத்தின் மூலம்) வெளிநாடுகளுக்கு அனுப்பியுள்ளான் என்று அரசாங்கமே குற்றம் சாட்டியுள்ளது. (டைம்ஸ் ஆஃப் இந்தியா, 10.3.11); 1984-இல் ஒரு டாக்டர் மீது ஆசிட் வீசித் தாக்கிய வழக்கு ஹசன் அலி மீது உள்ளது. இந்த வழக்கு தொடர்பான பதிவேடுகளைக் கண்டுபிடிக்க முடியவில்லை என்று போலீசு சொல்லியுள்ளது. 2008-இல் மூன்று பாஸ்போர்ட்டுகள் வைத்திருந்ததாக இவன் மீது வழக்கு உள்ளது.

தற்போது குதிரைப் பண்ணை அதிபராக உள்ள ஹசன் அலியின் வருமானம் ஆறு ஆண்டுகளில் 54 ஆயிரம் கோடி ரூபாயாக அதிகரித்துள்ளது என்று நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மத்திய கணக்கு தணிக்கை அதிகாரியின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. 2001-02-ஆம் ஆண்டில் இவனது ஆண்டு வருமானம் 528.9 கோடி ரூபாயாக இருந்துள்ளது. அடுத்த ஆண்டில் (2002-03-இல்) 5404 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது. பின்னர் 2006-07ஆம் ஆண்டு 54,268 கோடி ரூபாயாக அதிகரித்துள்ளது என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (தினமலர், 21.3.11). 2002-லிருந்து 2006-ஆம் ஆண்டுக்குள் - அதாவது நான்காண்டுகளில் அவனது வருமானம் 10 மடங்கு அதிகரித்துள்ளது.

கருப்புப் பண மற்றும் ஹவாலா கடத்தல் பேர்வழி ஹசன் அலி மற்றும் அதிகாரத் தரகர் நீரா ராடியா. (கோப்புப் படம்)





சாதாரணமாக இதே விகிதத்தில்தான் அவனது சொத்து அதிகரித்திருக்கும் என்று கணக்கிட்டால் கூட, 2006-லிருந்து 2010-ஆம் ஆண்டிற்குள், அதாவது அடுத்த நான்காண்டுகளில் இன்னும் ஒரு 10 மடங்கு அதிகரித்து 2010-ஆம் ஆண்டில் அவனது வருமானம் 5,40,000 கோடி ரூபாயாக உயர்ந்திருக்கும் என்று சொல்லலாம். எனவேதான், அமலாக்கப்பிரிவு, வருமான வரித்துறை, சி.பி.ஐ. போன்ற விசாரணை அமைப்புகள் அவன் மீது வழக்குகள் போடவே தயங்குகின்றன; மரியாதையுடன் அழைத்து வந்து பிஸ்கட், டீ தந்து விசாரித்து விட்டு மரியாதையாக அனுப்பி வைக்கின்றன.

அம்பலமானது ஒரு ஹசன் மட்டுமல்ல, அம்பலம் ஆகாமல் பல ஹசன் அலிகள் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை முக்கியமாகக் கவனத்தில் கொள்ள வேண்டும். விசாரணை அமைப்பு

கள் இவனைப் போன்றவர்கள் மீது காரசாரமில்லாத குற்றப்பத்திரிகையைத் தாக்கல் செய்யும்; நாட்டின் திறமை வாய்ந்த வழக்குரைஞர்கள் இவர்களுக்காக வாதாடுவார்கள். குற்றம் நிரூபிக்கப்படவில்லை என்று உச்சநீதி மன்றமே இவர்களை விடுதலை செய்யும்.

ஹசன் அலிகளையும் நீரா ராடியாக்களையும்; அமலாக்கத்துறை, வருமான வரித்துறை அதிகார வர்க்கத்தினரையும்; சி.பி.ஐ.யையும், தலைசிறந்த வழக்குரைஞர்கள், உயர்நீதி மன்ற, உச்சநீதி மன்ற நீதிபதிகளையும் தங்களது செல்லப் பிராணிகள் போல் ஊட்டி வளர்க்கும் ஒரு புதிய ஒட்டு வகை ஆளும் வர்க்கக் கட்சிகளுடைய ஏதோவொரு கூட்டணிதான் இத்தேர்தல்களில் ஆட்சிக்கு வரும். இவர்களின் ஒரே நோக்கமே மக்கள் பணத்தையும் நாட்டின் வளங்களையும் பகற்கொள்ளையடிப்பதுதான்!



தொலைபேசி ஒழுங்குமுறை ஆணையம் டெல்லியில் நடத்திய ஆலோசனைக் கூட்டம் (கோப்புப் படம்). அதிகார வர்க்க நிபுணர்களைக் கொண்டு உருவாக்கப்பட்ட இத்தகைய ஒழுங்குமுறை ஆணையங்கள் மற்றும் கமிட்டிகள்தான் இப்பொழுது அரசின் இடத்தில் அமர்ந்துகொண்டு கேந்திரமான பொருளாதாரத் துறைகளை நிர்வகித்து வருகின்றன.

எனவே, இன்றைய நிலையில் முதலாளித்துவ தேர்தல் முறையில் மக்கள் ஏதாவது ஒரு கோடீசுவரனைத்தான் எம்.எல்.ஏ.ஆகவோ, எம்.பி.ஆகவோ தேர்ந்தெடுக்க முடியும். கோடீசுவரர்கள்தான் அமைச்சர்களாகவும் முதலமைச்சர்களாகவும் பிரதமர்களாகவும் இருப்பார்கள். இவர்களின் நோக்கம் - செயல்பாடுகள் பற்றி மேலே பார்த்தோம். இப்படிப்பட்ட கோடீசுவரர்களால், கோடீசுவரர்களுக்காக நடத்தப்படும் ஆட்சி, மக்கட்தொகையில் ஆகப் பெரும்பான்மையாக உள்ள உழைக்கும் மக்களுக்காகப் பாடுபடும் என்பது நடக்கவே நடக்காது.

**கார்ப்பரேட்டுகள் மீதான அரசு அதிகாரம் விலகுதல்; அரசின் மீதான கார்ப்பரேட் அதிகாரம் இறுகுதல்.**

ஆறாவதாக, ஏகாதிபத்திய மேல்நிலை வல்லரசுகளின் உலக மேலாதிக்கம் மற்றும் உலகமயமாக்கலின் கீழ் ஒரு புதியவகை காலனியாதிக்கம் - அதாவது, மறுகாலனியாக்கம், இந்தியா போன்ற பின்தங்கிய நாடுகளில் அமல்படுத்தப்படுகிறது. தங்களது வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் தடையாகவுள்ள தேசிய அரசு, தேசங்களின் இறையாண்மை, அவற்றின் சட்டங்கள் ஆகியவற்றைத் தகர்ப்பதுடன், இத்தகைய தேசிய அரசுகளுடன் சேர்த்து கட்டியெழுப்பப்பட்டுள்ள முதலாளித்துவ ஜனநாயகத்தையும் தகர்த்து அரசமைப்பை முடக்கி அவற்றைத் தங்களின் (சர்வதேசியமாகியுள்ள ஏகாதிபத்திய நிதிமூலதனம் மற்றும் மேல்நிலை வல்லரசுகளின்) ஆணைக்கு ஆடும் கைப்பாவைகளாக மாற்றி உள்ளன. இவற்றின் கருவிகளான உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம், உலக வர்த்தகக் கழகம் ஆகியவைதான் இந்தியா போன்ற பின்தங்கிய நாடுகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட முதலாளித்துவ ஜனநாயக அரசாங்கங்களைக் கட்டுப்படுத்துகின்றன; ஆட்டுவிக்கின்றன.

சந்தைக்கு எல்லாம் தெரியும் என்ற புதிய தாராளவாத முழக்கத்தின் அடிப்படையில், சந்தையின் விதிகளே ஜனநாயகத்தின் விதிகளாகவும் மாற்றப்பட்டிருக்கின்றன. அரசுக்கும் குடிமக்களுக்கும் இடையிலான அரசியல் ரீதியான உறவை, முதலாளிக்கும் நுகர்வோனுக்கும் இடையிலான பொருளாதார உறவின் சட்டகத்தில் வைத்து, குடிமகனின் அரசியல் உரிமையை, நுகர்வோனின் பொருளாதார உரிமையாக மாற்றும் புதிய அரசியல் வரையறை உருவாக்கப்பட்டிருக்கிறது. வேலையின்மை, வறுமை, தற்கொலைகள் போன்ற அனைத்தும் பெருகி வருவதற்கு ஊழல், அயோக்கிய அரசியல்வாதிகள்தான் காரணம் என்றும், தகுதியான, நேர்மையான, நிர்வாக நுணுக்கங்கள் அறிந்த அதிகார வர்க்கத்தினரிடம் கொள்கை முடிவுகள் எடுக்கும் அதிகாரத்தைக் கொடுப்பதன் மூலமே இத்தகைய பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியும் என்றும் பிரச்சாரம் செய்யப்படுகிறது. அதிகார வர்க்கத்தின் கையில் முடிவெடுக்கும் அதிகாரங்களும் மாற்றிக் கொடுக்கப்பட்டுள்ளன.

கழிவுநீர் அகற்றுதல், குப்பை வாருதல் தொடங்கி கல்வி, தொழில் வளர்ச்சி உள்ளிட்ட அரசின் நடவடிக்கைகள் மற்றும் பொதுத்துறையைச் சீரமைத்தல், தனியாருக்கு விற்றல் - ஆகிய அனைத்து பிரச்சினைகள் தொடர்பான முடிவுகள் எடுக்கும் அதிகாரமும் ஏகாதிபத்திய நிறுவனங்கள் மற்றும் தரகு அதிகாரவர்க்க முதலாளித்துவ நிறுவனங்கள் சார்ந்த வல்லுனர்களிடம் விடப்படுகின்றன.

மேலும், ஜனநாயக அமைப்பிற்கு வெளியே இந்நிறுவனங்கள் இருப்பதால், தமது முறைகேடுகள் தொடர்பாக மக்களுக்குச் சம்பிரதாயபூர்வ விளக்கத்தினைக்கூட இவை அளிப்பதில்லை. இந்நிறுவனங்கள் அளிக்கின்ற ஆய்வறிக்கைகள் நாடாளுமன்றத்திற்கும் மக்களுக்குமே இரகசியமாக்கப்பட்டு, அதிகார வர்க்கம், பன்னாட்டு நிறுவனங்கள், சர்வதேச நிதி நிறு

வனங்கள் என்ற வட்டத்திற்குள்ளேயே புதைந்து விடுகின்றன. இவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுக்குப் பதிலளிக்கும் பொறுப்பிலிருந்து அதிகார வர்க்கத்தையும் மக்களுக்குப் பதிலளிக்கும் பொறுப்பிலிருந்து மக்கள் பிரதிநிதிகள் எனப்படுவோரையும் விடுவித்து விடுவதன் மூலம் அம்மணமான கார்ப்பரேட் அதிகார வர்க்கத்தின் ஆட்சியே இன்று இந்தியாவில் நடந்து வருகின்றது. கார்ப்பரேட் முதலாளி வர்க்கத்தின் மீது அரசு ஏற்கெனவே விதித்திருந்த கட்டுப்பாடுகள், ஒழுங்குமுறைகள் அனைத்தும் ரத்து செய்யப்பட்டு வருகின்றன. இதன் மூலம் ஜனநாயக அமைப்பின் அதிகாரத்திலிருந்து கார்ப்பரேட் முதலாளி வர்க்கம் விடுவிக்கப்பட்டு வருகின்றது.

**மக்கள் நலன் சார்ந்த துறைகளிலும், முதலாளி வர்க்கத்தைக் கண்காணித்து நெறிப்படுத்தும் துறைகளிலும் அரசு எந்திரம் வெட்டிக் குறைக்கப்படுகிறது. கார்ப்பரேட் முதலாளிகளின் புதிய தேவைகளை ஈடு செய்யும் திசையில் அதிகார வர்க்கமும் போலீசும் இராணுவமும் மென்மேலும் பெருக்கப்படுகிறது.**

இவ்வாறு மக்கள் நலன் சார்ந்த துறைகளிலும், முதலாளி வர்க்கத்தைக் கண்காணித்து நெறிப்படுத்தும் துறைகளிலும் அரசு எந்திரம் வெட்டிக் குறைக்கப்படுகிறது. கார்ப்பரேட் முதலாளிகளின் புதிய தேவைகளை ஈடு செய்யும் திசையில் அதிகார வர்க்கமும் போலீசும் இராணுவமும் மென்மேலும் பெருக்கப்படுகிறது. மேலும் பொதுத்துறை தொழில் நிறுவனங்கள் மற்றும் அரசு இலாக்காகளிலும் மக்கள் நலன் சார்ந்த துறைகளிலும் ஆட்குறைப்பு மற்றும் அவுட்சோர்சிங் முதலான முறைகளைப் புகுத்தி அரசு நிர்வாகமும் தனியார்மயமாக்கப்பட்டு வருகின்றது. கார்ப்பரேட் முதலாளிகளும் ஏகாதிபத்திய தொண்டூழிய தன்னார்வ குழுக்களும் அரசின் இயற்கையான கூட்டாளிகள் என்று முன்வைக்கப்பட்டு, அவர்கள் அரசு எந்திரத்தின் ஒரு பகுதியாக மாற்றப்பட்டு வருகின்றனர்.

ஐக்கிய முற்போக்கு கூட்டணி ஆட்சியில் சோனியா தலைமையில் இயங்கி வந்த தேசிய ஆலோசனை கவுன்சில் குடிமைச் சமூக அமைப்புகளைச் சேர்ந்த பிரபலங்களைக் கொண்டுதான் உருவாக்கப்பட்டது.



அரசு அதிகார நிறுவனங்களில் கார்ப்பரேட் முதலாளிகள் மற்றும் அரசு சாரா வல்லுனர்கள், தன்னார்வ குழுக்களின் இயக்குனர்கள் பங்கேற்கின்றனர். அரசுப் பணிகள் தனியாருக்கு அவுட்சோர்சிங் செய்யப்படுகின்றன. அரசுத்துறை தனியார் துறை கூட்டுத் திட்டங்கள் பெருகி வருகின்றன. பொதுத்துறை நிறுவனங்கள் படிப்படியாக தனியாருக்கு விற்கப்பட்டு வருகின்றன. முன்பு அரசு ஏகபோகமாக இருந்து வந்த தொலைபேசி, மின்சாரம் போன்ற துறைகளில் அத்துறைகளுக்குரிய அமைச்சரவைகளுக்கு வெளியே, அதற்கும் மேலே, சுயேச்சையான அதிகாரம் கொண்ட 'ஒழுங்குமுறை ஆணையங்கள்' உருவாக்கப்பட்டு, அதன் மூலம் அரசுத்துறைகளை திட்டமிட்டு நட்டப்படுத்தி, அப்புறம் அவற்றை ஒழிக்கும் சதித்திட்டங்களும் அமல்படுத்தப்பட்டு வருகின்றன.

அரசு அதிகாரிகள் மற்றும் அமைச்சர்கள் போன்றோர் தனியார் முதலாளிகளுடன் தொடர்பு வைத்திருப்பது ஊழலுக்கு வழிவகுக்கும் என்றும், அத்தகைய உறவுகள் முறைகேடானவை என்றும், நடவடிக்கைக்கு உரியவை என்றும் ஏற்கெனவே கைக்கொள்ளப்பட்டு வந்த மரபுகள் கைவிடப்பட்டிருப்பது மட்டுமல்ல, பொருளாதாரக் கொள்கை முடிவுகள் எடுக்கும் முன்னர் எஃப்.ஐ.சி.சி.ஐ., சி.ஐ.ஐ. போன்ற தரகு அதிகார வர்க்க முதலாளிகளின் சங்கங்களை அரசே அழைத்து கலந்தாலோசிக்கிறது. மக்கள் நலனையும் மக்கள் பிரதிநிதிகளையும் புறந்தள்ளிவிட்டு, சமூகத்தின் பிரதிநிதியாகவும் அரசு அதிகாரத்தின் அங்கமாகவும் பெரும் கார்ப்பரேட் முதலாளிகள் வர்க்கத்தை நியமிக்கும் இந்த நடவடிக்கையை நியாயப்படுத்துவதற்காக 'கார்ப்பரேட் சமூகப் பொறுப் புணர்ச்சி' என்ற புதியதொரு கோட்பாடு புகுத்தப்பட்டுள்ளது.

வேர்மட்ட ஜனநாயகம் என்ற பெயரில் ஏகாதிபத்திய தொண்டூழிய தன்னார்வ குழுக்கள் அரசின் அங்கீகாரம் பெற்ற அதிகார மையங்களாக ஆக்கப்பட்டுள்ளன. ஏகாதிபத்தியங்களின் கண்களாகவும் காதுகளாகவும்




சென்னை மாநகராட்சியின் சில மண்டலங்களில் குப்பை அகற்றும் பணிகளைத் தனியார்மயமாக்குவதைக் கண்டித்து ரிப்பன் மாளிகை முன்பு சென்னை மாநகராட்சி துப்புரவு பணியாளர்கள் நடத்திய ஆர்ப்பாட்டம்.

விளங்கும் இந்த ஐந்தாம்படை அமைப்புகள், அரசுக்கும் மக்களுக்கும் இடையிலான பாலமாக மாற்றப்பட்டுள்ளன. மேலிருந்து கீழ் என்ற அதிகாரப்படிநிலை முறை நிராகரிக்கப்பட்டு, உலக வங்கி, ஆசிய வளர்ச்சி வங்கி ஆகிய சர்வதேச நிதிநிறுவனங்கள் மத்திய, மாநில அரசுகளைப் புறந்தள்ளி நகராட்சிகளையும் ஊராட்சிகளையும் நேரடியாகத் தொடர்பு கொண்டு திட்டங்களை அமல் நடத்துகின்றன. அவற்றிற்கு எதிரான மக்களின் எதிர்ப்புகளை முனை மழுங்கச் செய்கின்றன.

நீர்வள மேம்பாடு, சாலை போடுதல், கல்வி, காடுவள நிர்வாகம், உள்கட்டுமானப் பணிகள் போன்ற இதுகாறும் அரசின் பொறுப்பு, கடமை என்று கூறப்பட்டு வந்த துறைகள் பலவற்றிலும் தனியார்துறை புகுத்தப்பட்டுள்ளது. நேரடியாக பொதுநலனுடன் தொடர்புள்ள இந்தத் துறைகளிலெல்லாம் தனியார் புகுத்தப்படுவதால், பொதுச் சொத்துக்கள் கார்ப்பரேட் முதலாளி வர்க்க ஆளுகையின் கீழ் கொண்டு வரப்பட்டு மக்கள் இவற்றின் மீது எந்தவிதத்திலும் உரிமை கோர இயலாத நிலைக்குத் தள்ளப்பட்டு வருகின்றனர்.

மாறியுள்ள உலக நிலைமையில் தமது முழு ஆற்றலையும் வெளிக் கொண்டுவர வேண்டுமானால், அரசுத்துறை நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள், ஆய்வுக்கூடங்கள், இன்னபிற அரசு சார் நிறுவனங்களைத் தன்னாட்சி கொண்ட அமைப்புகளாக மாற்ற வேண்டும் என்ற புதிய தாராளவாதத்தின் கோரிக்கையும் அமலாக்கப்பட்டு வருகின்றது. இதன் மூலம் இவற்றுக்கான அரசு மானியங்களை வெட்டுவது மட்டுமின்றி, நாட்டின் பொதுத்தேவையின் அடிப்படையில் வகுக்கப்படும் திட்டங்களுக்கு சேவை செய்வதாக இந்த அமைப்புகள் இருப்பதும் முடிவுக்குக் கொண்டு வரப்படுகின்றன. இந்த நிறுவனங்கள் அனைத்தும் இலாபமீட்டும் முதலாளித்துவ நிறுவனங்களைப் போலவே மாற்றியமைக்கப்பட்டு வருகின்றன. பன்னாட்டு தரகு அதிகார வர்க்க முதலாளித்துவ நிறுவனங்கள் இவற்றை நேரடியாக தொடர்பு கொண்டு தம் தேவைக்கான ஆய்வுகளைச் செய்யும் ஆய்வுக் கூடங்களாகவும், தமக்குத் தேவைப்படுகின்ற துறைகளிலான பட்டதாரிகளை உருவாக்கித் தரும் பட்டறைகளாகவும், தமது வர்த்தக முகவர்களாகவும் பரப்புரையாளர்களாகவும் இவற்றை மாற்றியமைத்துள்ளன.

சாராம்சமாகச் சொன்னால், மக்கள் நலனைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற, நிலைநாட்டுகின்ற அறுதி அதிகாரம் என்ற தகுதியிலிருந்து அரசு மெல்ல மெல்ல அப்புறப்படுத்தப்பட்டு வருகின்றது. தமது அடிப்படைத் தேவைகளையும் கவுரவமான வாழ்க்கையையும் பெற முடியாத குடிமக்களுக்கு அவற்றைக் கிடைக்கச் செய்ய வேண்டியது அரசின் பொறுப்பு என்பதைக் கருத்தளவில்கூட மறுகாலனியாதிக்க கொள்கைகள் ஏற்பதில்லை. மாறாக, குடிமக்கள் அனைவரையும் நுகர்வோராகவும், எனவே, தமக்கு தேவையான பொருட்கள் மற்றும் சேவைகளை விலை கொடுத்து வாங்கிக் கொள்ள கடமைப்பட்டவர்களாகவுமே அது கருதுகிறது. கல்வி, மருத்துவம், தண்ணீர் போன்ற அடிப்படைத் தேவைகளும், சாலைகள் முதலான சேவைகளும் வணிகப் பொருட்களாக மாற்றப்பட்டு விட்டன. இதனால் குடிமக்களின் பாலான தனது கடமைகளிலிருந்தும் அரசு படிப்படியாக விடுவிக்கப்பட்டு வருகின்றது.

சமூக ரீதியான தீர்வுகளைக் கோருகின்ற சிக்கல்களுக்கு சமூக ரீதியான தீர்வுகளை மறுத்து, தனிப்பட்ட தீர்வுகளை மக்களே தங்களது சொந்த பொறுப்பில் செய்து கொள்ளுமாறு மாற்றப்பட்டுள்ளது. நிலத்தடி நீர் பற்றாக்குறை போன்று சூழலியல் தோற்றுவிக்கும் பிரச்சினைகளுக்கு மழைநீர் சேமிப்புத் திட்டம், புவி சூடேறுதல் பிரச்சினைக்கு கார்பன் வர்த்தகம், விவசாயத்தின் நசிவால் பெருகியுள்ள கிராமப்புற வறுமை - கடன் சுமைக்கு மகளிர் சுயஉதவிக் குழுக்கள், அணைக்கட்டுகள் அல்லது சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் போன்றவற்றிற்காக கிராமம் கிராமமாக அப்புறப்படுத்தப்படும் மக்களுக்கு ஒரு சமூகம் என்ற வகையில் மறுவாழ்வு வழங்குவதற்குப் பதிலாக அவர்களுக்குத் தனிப்பட்ட ஈட்டுத்தொகை வழங்குதல் என எல்லாப் பிரச்சினைகளிலும் தனிப்பட்ட தீர்வுகளை முன்வைப்பதன் மூலம் ஒரு சமூகம் என்ற வகையில் அரசியல் ரீதியாகச் சிந்திக்கவும் திரளவும் விடாமல் மக்களின் சிந்தனையையே மறுகாலனியாதிக்க கொள்கைகள் விலங்கிட்டு வைத்துள்ளன.

அதற்கேற்ப இவ்வாறு மறுகாலனியாதிக்க முறையிலான சுரண்டல் ஆதிக்கத்தின் கீழ், இந்திய அரசின் கட்டுமானம், அதன் பாத்திரம், செயலாற்றும் முறைகள், சட்டங்கள், விதிமுறைகள் எல்லாம் மாற்றப்பட்டு கார்ப்பரேட் முதலாளிகள் பகற்கொள்ளைக்கான ஒரு கருவியாக வெளிப்படையாகவே பறைசாற்றிக் கொள்ளும் அரசாக, சோசலிசம், காந்தியம், சமூக நீதி போன்ற பாசாங்குகள் எதுவும் இல்லாமல், நிலையான ஆட்சியை நிலைநாட்டும் வலுவான அரசாங்கம் என்ற இலச்சினை பொறித்த அரசாக மாற்றப்பட்டு விட்டது.

(தொடரும்)

போட்டிருக்கிறது ஆர்.எஸ்.எஸ். எனவே, யோகா குறித்த வரலாற்றுப் புரட்டுகளை அடையாளம் காண்பது அவசியமாகிறது.

இன்று புழக்கத்திலிருக்கும் யோகாசனங்களுக்கும், வேதம், உபநிடதம், கீதை போன்றவற்றில் பயன்படுத்தப்படும் 'யோகா' என்ற சொல்லுக்கும் எவ்விதத் தொடர்புமில்லை. ரிக் வேதத்தில் வண்டியுடன் குதிரையைப் ''பிணைப்பது - கட்டுப்படுத்துவது'' என்ற பொருளில் பயன்படுத்தப்பட்ட யோகா என்ற சொல், உபநிடதங்களில் மனதைக் கட்டுப்படுத்துவது என்ற பொருளில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. யோகா என்ற தத்துவ மரபோ, வேத மரபுக்கு எதிரான சார்வாகம், உலகாயதம், சுபாவவாதம் போன்ற பொருள்முதல்வாத தத்துவப் போக்குகள் சார்ந்ததாக இருந்திருக்கிறது.

கீதையில் கர்மயோகம், ஞானயோகம், பக்தி யோகம் என்று கூறப்படுபவை பார்ப்பனியத்தின் முக்திக் கோட்பாட்டின் அடிப்படையிலான ''வழி முறைகள்'' என்ற பொருளைத் தருகின்றன. யோகாவின் மூலநூலாகக் கூறிக்கொள்ளப்படும் பதஞ்சலியின் யோக சூத்திரத்தில் (கி.பி 3 ஆம் நூற்றாண்டு என கருதப்படுகிறது) காற்றில் பறப்பது, தண்ணீரின் மீது நடப்பது - என்பன போன்ற வித்தைகளாக யோகா என்பது விளக்கப்படுகிறது.

பொதுவாக யோகிகள் எனப்படுவோர் ஊனுடலை வெறுத்தவர்கள் என்றே கூறப்படுகின்றனர். ஆனால், இன்று புழக்கத்தில் இருக்கும் யோகாவோ, இதற்கு நேரெதிரான பொருளில், மூட்டு வலி, முதுகு வலி போன்ற ஊனுடல் சார்ந்த பிரச்சினைகளுக்கான மருந்தில்லா வைத்தியமாகவும், உடல் பருமனைக் குறைத்து அழகைப் பேணும் கலையாகவும் பயன்பட்டு வருகிறது.



**செல்ஃபியாசனம்**

மூச்சுப்பயிற்சி மற்றும் உடற்பயிற்சி சார்ந்த இந்த யோகாசன முறை 5000 ஆண்டுகளுக்கு முன்னரோ அல்லது பதஞ்சலி காலத்திலோ தோற்றுவிக்கப்பட்டது என்று கூறுவது கலப்படமற்ற பொய். ஐரோப்பிய உடற்பயிற்சி மற்றும் ஜிம்னாஸ்டிக் மரபுகளுடன் இந்தியாவில் நிலவிய உடலைப் பேணுகின்ற பாரம்பரிய முறைகளை இணைத்து 20-ஆம் நூற்றாண்டில் மைசூரில் கிருஷ்ணமாச்சாரி என்பவரால்தான் இது உருவாக்கப்பட்டது என்பதை சிங்கிள்டன் என்ற ஆய்வாளரின் நூல் (Yoga Body: The Origins of Modern Posture Practice, Mark SIngleton, Oxford University Press) வரலாற்று பூர்வமாக விளக்குகிறது.

இதேபோன்று இந்தியாவில் பல்வேறு மக்கட் பிரிவினரிடமும் புழக்கத்திலிருக்கும் உடற்பயிற்சி மரபுகளைத் தேடித் திரட்டி, நவீன அறிவியலின் துணையுடன் அவற்றைத் தொகுத்து ஒருங்கிணைந்த வடிவில் சிறந்தவொரு உடற்பயிற்சி முறையை உருவாக்கியிருக்க முடியும். அப்படி உருவாக விடாமல் யோகாசனத்துடன் உபநிடதம், பிரம்மம், வெங்காயம் என்று கலர் கலராக மசாலா சேர்த்து, ராம்தேவ் முதல் ஜக்கி வரையிலான சாமியார்கள் வணிகம் நடத்துகின்றனர். சுதர்சனக் கிரியா என்றொரு மூச்சுப் பயிற்சி தன்னால் கண்டுபிடிக்கப்பட்டது என்று கூறி, அதற்கு அமெரிக்காவில் காப்புரிமையும் வாங்கியிருக்கிறார் ரவி சங்கர்ஜி.

தத்தம் சந்தைப் பிரிவினர்க்கு (market segment) ஏற்ப, ''ஆத்தும சரீர சுகமளிக்கும்'' யோகா பேக்கேஜ்களை, இந்தச் சாமியார்கள் மார்க்கெட்டிங் செய்கின்றனர். அமெரிக்கா போன்ற மேலை நாடுகளில் பாரம்பரியமாக இந்த வேலையைச் செய்து வந்த பாதிரிகள் செல்வாக்கிழந்து விட்டதாலும், மதச்சார்பற்ற தூய தத்துவஞானத்தைப் போலத் தங்கள் சரக்கை கடைவிரிப்பதில் கைதேர்ந்தவர்களாக இந்த சாமியார்கள் இருப்பதாலும், அமெரிக்காவில் மட்டும் பல ஆயிரம் கோடி டாலர் புரளும் தொழிலாக வளர்ந்திருக்கிறது யோகா.

பல கார்ப்பரேட் நிறுவனங்கள் இந்த சாமியார்களை வரவழைத்து தமது செலவில் ஊழியர்களுக்கு யோகா வகுப்பு நடத்துகின்றனர். கடுமையான சுரண்டல், வரம்பில்லாத வேலை நேரம், மேலாளர்களின் வசவுகள், வேலை உத்திரவாதமின்மை-என்பன போன்ற கொந்தளிப்பைத் தோற்றுவிக்கின்ற பணிச் சூழலிலும், மனப்பதற்றத்துக்கோ கோபத்துக்கோ ஆட்படாமல் வேலை செய்வதற்கேற்ப, தங்களது ஊழியர்களின் உடலையும் மனதையும் படியவைக்கும் ஆன்மீக அயன்பாக்ஸ்களாக இந்தச் சாமியார்களின் யோகா வகுப்புகள் பயன்படுகின்றன.

இன்று சங்க பரிவாரத்தினாலும் சாமியார் கும்பலாலும் சந்தைப்படுத்தப்படும் யோகாவின் அரசியல் நோக்கம் இந்துத்துவம் என்றால், அதன் பண்பாட்டு நோக்கம், முதலாளித்துவக் கொடுங்கோன்மைக்கு இணங்கி வாழ்வதற்கு மக்களின் மனதைப் பதப்படுத்தும் பார்ப்பனியம். •

Owned and Published by R. SHANMUGARAJ, from Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024 and Printed by him at EZHIL PRINTS, Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024. Editor: R. SHANMUGARAJ.

2-ஆம் பக்கத் தொடர்ச்சி...

டோம், அடித்து விரட்டுவோம் அல்லவா! மக்களுக்கு கேடு என்பதால்தானே அதைச் செய்கிறோம். அதையே சட்டப்படி அரசு செய்தால் ஏன் அனுமதிக்க வேண்டும்?

மக்களை, இந்த நாட்டின் இயற்கை வளங்களைப் பாதுகாக்கத்தானே நாம் ஆட்சியாளர்களுக்கு அதிகாரம் வழங்கியுள்ளோம்; நம் வரிப்பணத்தில் அவர்களின் உல்லாச, ஊதாரி வாழ்க்கைக்கா இலட்ச லட்சமாகக் கொட்டி கொடுக்கிறோம்? ஆனால், இவர்கள் ஆங்கிலேய ஆட்சியைவிட மிக கொடுமையாக மக்களிடம் நடந்து கொள்கிறார்கள்.

ஆற்றுமணலை, நிலத்தடி நீரை, கடலோர தாது மணலை , கிரானைட் மலைகளைக் கொள்ளை யடிப்பது தானே, இந்த அரசின் கொள்கை. விவசாய நிலங்களைப் பிடுங்கி ரியல் எஸ்டேட் மஃபியா கும்பலிடம் கொடுப்பதும், கல்விக் கொள்ளையர் களோடு கூட்டு சேர்ந்து, பெற்றோர்களிடம் கட்டணக் கொள்ளையடிப்பதும்தானே, இந்த அரசின் கொள்கை. பன்னாட்டு கம்பெனிகள் மீத்தேன் எடுக்க விவசாயத்தை அழிப்பேன் என்பதும், மக்களின் குடி கெடுக்க சாராயத்தை விற்றே தீருவேன் என்று அரசு அதிகாரத்தை செயல்படுத்துவதையும் நாம் அனுமதிக்க முடியுமா? மக்களுக்கு எதிரியாக மாறியதுடன், ஆள அருகதையற்ற இவர்களைத் தூக்கி எறியாமல் தீர்வு எப்படி கிடைக்கும்? வந்து போகும் தேர்தல் இதற்குத் தீர்வு அல்ல.

தாய்மார்களின் தாலி அறுத்துகொண்டு தப்பித்து ஓடும் திருடனை விரட்டிப் பிடித்து, சுற்றி வளைத்துக் கட்டி வைத்து அடிப்பது திருட நினைப்பவர்களுக்கு ஈரக்குலை நடுக்கத்தை ஏற்படுத்துவது போல், அனைவரும் வேண்டாம் என சொல்லும் சாராயக் கடையை நடத்தவே விடாமல் தொடர்ந்து இடையூறு ஏற்படுத்த வேண்டும்.

அனைத்து கட்சிகளின் அறிக்கை, பல்வேறு அமைப்பு களின் போராட்டங்களால் டாஸ்மாக்கை மூட முடிய வில்லை. அடையாளப் போராட்டத்தை கண்டு அரசு மூடப் போவதில்லை. ஊரில் அனைத்து மக்களும் கையெழுத்திட்டு ஆகஸ்ட் 31 கெடு; அதற்குள் மூடி விடு. இல்லை எனில், அடுத்த நாள் கடையை நடத்த விடக் கூடாது!



கடந்த ஜூன் மாத இறுதியில் புதுச்சேரி-வழுதாவூர் சாலையிலுள்ள சாராயக் கடையை அடித்து நொறுக்கிய பெண்களின் ஆவேசப் போராட்டம்.

டாஸ்மாக் கடை முன்னால் பெரிய பள்ளம் வெட்டுங்கள்; பெண்கள் தினமும் குப்பகளை கொட்டுங்கள்; மாணவர்கள், இளைஞர்கள் கடையிலேயே ஒண்ணுக்கு அடியுங்கள்; கடையை முற்றுகையிடுங்கள், கைது செய்தால் வெளியே வந்து மீண்டும் முற்றுகையிடுங்கள்; அப்பவும் இந்த அதிகாரிகளுக்குத் திமிரு அடங்கவில்லை என்றால் டாஸ்மாக் கடையை நிரந்தர கழிப்பிடமாக்குங்கள். டாஸ்மாக் சரக்கை இறக்கவிடாமல் லாரியை மறியுங்கள். ஊருக்குள் விடாதீர்கள். இப்படியாக அதிகாரத்தை மக்கள் தாங்களே கையிலெடுத்து அமல்படுத்த முடியும்.

டாஸ்மாக்கால் நமது வாழ்க்கை பறிபோவதற்கு எதிராக நாம்தான் போராட வேண்டும். நமது வயிற்றுப் பசிக்கு நமது கையால் சாப்பிட்டால்தான் பசியடங்கும். நமது உரிமைக் காக நாமே அதிகாரம் செலுத்த வேண்டும். அதுதான் மக்கள் அதிகாரம்!

கடந்த ஆண்டு ஜூன் மாதத்தில் சென்னை - காசிமேடு ஜீவரத்தினம் சாலையில் உள்ள டாஸ்மாக் கடையை மூடக் கோரி அப்பகுதிவாழ் மக்கள் நடத்திய முற்றுகைப் போராட்டம். (கோப்புப்படம்)



**டாஸ்மாக்கை மூடு!**
**மக்கள் அதிகாரத்தை நிறுவு!**
**குடி கெடுக்கும் அரசிடம் கெஞ்சாதே!**
**தடுக்க வரும் போலீசுக்கு அஞ்சாதே!**
**மூடு கடையை!**
**எவன் வருவான் பார்ப்போம்!**
**நம்ம ஊரில் இனி டாஸ்மாக் கிடையாது!**

**அருகதையிழந்தது அரசு கட்டமைப்பு!**
**இதோ ஆள வருகிறது மக்கள் அதிகாரம்!**

(**மக்கள் அதிகாரம் - தமிழ்நாடு,** என்ற புரட்சிகர அமைப்பு வெளியிட்டுள்ள பிரசுரம்)




இந்தக் காலத்தில் இப்படியொரு கொடுமையா என்று நாட்டையே அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது, இந்துவெறி பா.ஜ.க. ஆளும் ம.பி. மாநிலத்தில் நடந்துள்ள தீண்டாமைக் கொடூரம்.

ம.பி.யின் சத்தர்பூர் மாவட்டத்திலுள்ள கணேஷ்புரா கிராமத்தில் கடந்த ஜூன் 13 அன்று, பொதுக் குழாயில் ஒரு தாழ்த்தப்பட்ட சிறுமி தண்ணீர் பிடிக்கச் சென்றபோது, அந்த வழியாகச் சென்ற புரான் யாதவ் என்ற ஆதிக்க சாதிவெறியனது டிபன் பாக்ஸ் மீது அந்தச் சிறுமியின் நிழல் விழுந்ததாம். அதனால் அவனது உணவு தீட்டுப்பட்டு விட்டதாம். அதைத் தொடர்ந்து, அந்த ஆதிக்கசாதி வெறியனின் மனைவியும் குடும்பத்து பெண்களும் திரண்டு அச்சிறுமியை நடுத்தெருவில் இழுத்துப்போட்டு மிருகத்தனமாகத் தாக்கி, இனிமேல் தண்ணீர் எடுக்க பொதுக்குழாய் பக்கம் வந்தால் உன்னைக் கொன்றுவிடுவோம் என்று மிரட்டியுள்ளனர். இத்தாக்குதலின்போது, அமைதியான பார்வையாளர்களாக இருந்த அப்பகுதிவாழ் ஆதிக்க சாதியினருக்கு இது சமூகக் கொடுமையாகவே தெரியவில்லை. அதன் பிறகு, ஆதிக்க சாதியினரின் அச்சுறுத்தலையும் மீறி அச்சிறுமியுடன் அவரது தந்தை போலீசில் புகார் கொடுத்ததாலேயே இந்த கொடுஞ்செயல் வெளியுலகுக்குத் தெரியவந்துள்ளது.

இது ஏதோ விதிவிலக்கான விவகாரமல்ல. நாடெங்கும் தொடரும் தீண்டாமைக் கொடுமையின் துலக்கமான வெளிப்பாடுதான் இது. தாழ்த்தப்பட்ட பெண்களும் சிறுமிகளும் பாலியல் வன்கொடுமைக்கு ஆளான சம்பவங்கள் கடந்த மே மாதத்தில் உ.பி; பஞ்சாப், ராஜஸ்தான் மாநிலங்களில் அடுத்தடுத்து நடந்துள்ளன. மகாராஷ்டிராவின் அஹமத் நகர் மாவட்டத்தின் ஷிரடி நகரில், கடந்த மே மாதத்தில் சாகர் ஷேஜ்வால் என்ற ஒரு தலித் இளைஞர், அம்பேத்கரைப் போற்றும் பாடலை செல்போனின் ரிங்டோனாக வைத்திருந்த குற்றத்துக்காக மராத்தா சாதிவெறியர்களால் அடித்து உதைக்கப்பட்டு, மோட்டார் சைக்கிள் ஏற்றி கொல்லப்பட்டார். உயர் கல்விக்கான இந்தியத் தொழில் நுட்பக் கழகத்தின் நுழைவுத் தேர்வில் தாழ்த்தப்பட்ட கூலித் தொழிலாளியின் இரண்டு மகன்கள் தெரிவு செய்யப்பட்டதைச் சகித்துக் கொள்ள முடியாமல், உ.பி. மாநிலத்தின் பிரதாப்கார் கிராமத்திலுள்ள அவர்களது வீட்டின் மீது ஆதிக்க சாதிவெறியர்கள் கல்லெறித் தாக்குதலை நடத்தியுள்ளார்கள்.

இவற்றையெல்லாம் அதிர்ச்சியூட்டும் விவகாரமாகப் பார்க்கும் சமுதாயம்தான், கோயில்களில் பார்ப்பனர்கள் மட்டுமே அர்ச்சகர்களாக இருப்பதையும், சவ ஊர்வலத்திற்கு தாழ்த்தப்பட்டோரை பறையடிக்கச் சொல்வதையும், சவ அடக்க வேலைகளை தாழ்த்தப்பட்டோரைச் செய்ய வைப்பதையும், வாடகைக்கு வீடு கேட்டால் நீங்கள் சைவமா, அசைவமா என்று வீட்டு உரிமையாளர்கள் நைச்சியமாக விசாரிப்பதையும் இயல்பான சமூகப் பழக்க வழக்கங்களாக ஆதிக்க சாதி மனோபாவத்துடன் அணுகுகிறது. நவீன காலத்திலும் இத்தகைய சாதியாதிக்கத்தை சகஜமான சமூகப் பழக்கவழக்கங்களாகவும் பாரதப் பண்பாடாகவும் போற்றி, அதனைக் கட்டிக்காக்கும் வேலையை இந்துவெறி ஆர்.எஸ்.எஸ்.செய்து வருகிறது.

சாதியத்துக்கும் தீண்டாமைக்கும் எதிராக நிற்க வேண்டிய அரசோ, துப்புரவு வேலைகளை தாழ்த்தப்பட்டோர் மட்டுமே செய்ய வேண்டுமென நிர்பந்திப்பதோடு, மாட்டுக்கறிக்குத் தடைவிதித்து சாதியாதிக்கத்தை மேலிருந்து சட்டபூர்வமாக நிலைநாட்டுகிறது. ஒரு அளவுக்கு மேல் சாதிய அடக்குமுறைகள் போகக்கூடாது என்றும், அந்த அளவைத் தாண்டுவதைத்தான் அதிர்ச்சியூட்டும் தீண்டாமைக் கொடுமையாகவும் அரசும், ஓட்டுக் கட்சிகளும், ஊடகங்களும் பார்க்கின்றன. அளவோடு தொடரும் தீண்டாமையை இயல்பான சமூக பழக்க வழக்கமாக அங்கீகரிக்கும் மனோநிலைக்கு மக்களைப் பழக்கப்படுத்தி, மிதவாத சாதியத்தைக் கட்டிக் காக்கின்றன. இந்நிலையில், தொடரும் தீண்டாமையை இயல்பான சமுதாயப் பழக்கவழக்கமாக அங்கீகரித்துக் கொண்டு, இதனை நாகரிகமிக்க சமுதாயம் என்று நாம் இன்னமும் பெருமைப்பட்டுக் கொள்ள முடியுமா? ●